கோபுரம்

தகவல் இதழ் | சர்வதாரி வருடம் | சித்திரை 2008



மத விவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்



கோபுரம்

தகவல் இதழ்

சர்வதாரி வருடம்
மலர் 16

சித்திரை 2008
இதழ் 01

தொகுப்பு

ஆய்வுப்பிரிவு

மலர்க்குழு

திருமதி சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்

திரு.சீ. தெய்வநாயகம்
உதவிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி)

திரு.ம.சண்முகநாதன்
உதவிப்பணிப்பாளர் (இந்துவிவகாரம்)

திருமதி தேவகுமாரி ஹரன்
சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர்

திருமதி நித்தியவதி நித்தியானந்தன்
ஆராய்ச்சி அலுவலர்

செல்வி நந்தினி சண்முகலிங்கம்
அபிவிருத்தி உதவியாளர் (ஆராய்ச்சி)

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
இல. 248 1/1, காலி வீதி, கொழும்பு - 04

தொலைபேசி இல: 2552643 **தொலைநகல்: 2552825**

எண்ணம்

மனிதனைச் செம்மைப்படுத்துவதாக அமைவது சமயம். இதனால்தான் சமயங்கள் ஒழுக்க மேம்பாடுகளை போதிப்பனவாக அமைகின்றன. இவ் ஒழுக்கப்பாடுகளின் ஊடாக மனிதனை மனிதனாக சமூகத்தில் நிலைநிறுத்த முயற்சிக்கின்றன. வெற்றியும் கண்டுள்ளன. இவ் முயற்சியில் சமயப் பெரியார்களும், சமயநிறுவனங்களும் பெரிதும் செயலாற்றுகின்றன. இந்துசமயத்தில் மனிதனது ஒழுக்க மேம்பாட்டின் மையநிலையங்களாக ஆலயங்களும் அவற்றுடன் தொடர்புடைய அறநெறிப்பாடசாலைகளும், சமயநிறுவனங்களும் காணப்படுகின்றன.

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களமும் இந்துமதத்திற்கான செயற்பணிகளை இந்து மதமேம்பாடு, இந்து அறநெறிப்பாடசாலையின் அபிவிருத்தி, இந்துசமய கலாசார ஆராய்ச்சி, இந்துசமய தமிழ்க்கலை, கலாசார மேம்பாடு ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் சேவையாற்றி வருகின்றது. இத்திட்டங்கள் இந்து மதத்தினருக்கான சேவைகள் அவர்களை முழுமையாகச் சென்றடைய வேண்டும் என்பதனை முக்கிய குறிக்கோளாக கொண்டமைகின்றன.

ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகள் அறத்தை வளர்க்கும் இடங்களாக அமையவேண்டும். இதன் மூலம் ஒழுக்கம் மிக்க சமூகம் ஒன்று உருவாகவேண்டும் என்பதும் சமய, கலாசாரத்தில் மேம்பட்ட மக்களை கொண்டதாக இந்து சமூகம் அமையவேண்டும் என்பதும் திணைக்களத்தின் ஆர்வமாகும்.

இவ்வாண்டில் முதல் இதழாக இவ்விதழ் அமைகின்றது. திணைக்களத்தின் செயற்பாடுகள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. இந்து மதத்தின் பேரழகு, தமிழ் வருடப்பிறப்பு, பாற்குடம் எடுப்பது ஏன்? கும்பாபிஷேகம், சைவசித்தாந்த வளர்ச்சியும் பிற சமய நெறிகளும், பங்குனிஉத்தரம், பதினோராம் திருமுறை, பன்னிரு திருமுறைகள் போன்ற பல கட்டுரைகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

இந்து சமயத்தில் உள்ளவர்கள் இந்து சமயதாற்பரியங்களை உணர்ந்து அதை மதித்து நடக்கும்போது ஒழுக்கம் தானாகவே வரும். அந்த நல்லொழுக்கத்தின் மூலம் நாட்டில் அமைதியை ஏற்படுத்தி ஒற்றுமையை நிலைநாட்ட முடியும். இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இதற்காகவே தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அச்செயற்பாடுகளின் மேம்பாட்டிற்கு இந்துக்கள் அனைவரும் கைகொடுத்து உதவ முன்வருவர் என்பது எமது எண்ணமாகும்.

மலர்க்குழு

இந்து மதத்தின் பேரழகு

ஸ்ரீ சுவாமி சிவானந்தர்

இந்து மதம் இவ்வுலகில் நிலவும் மதங்கள் அனைத்திற்கும் ஆதியானது. ஏனைய மதங்கள் போன்று தீர்க்கதரிசிகளால் இது நிறுவப்படவில்லை. பிற மதங்கள் தோன்றிய காலத்தைக் கணக்கிட முடியும். ஆனால் இந்து மதத்தின் காலத்தை கணக்கிட முடியாது. இந்து மதத்தில் சமயவெறி என்பது காணக் கிடைக்காததோர் விஷயம்.

சனாதனதர்மம் அல்லது நிலையாய மதம் என்று இந்து மதம் தெரிவிக்கப்படுகிறது. வேதமதம் என்பதால் வைதீக தர்மம் என்றும் இதைக் கூறுவர். இந்து மதத்தின் அடிப்படை நூல்கள் வேதங்கள். ஆதிகால ரிஷிமுனிவர்கள் தங்கள் ஆத்மீக அனுபவங்களை உபநிடதங்களின் மூலம் தெரிவித்துள்ளார்கள். அவர்களின் அனுபவங்கள் நேராகப்பெறப்பட்டவை. இவ்வரிய அனுபவங்களையே அதன் பிரமாணமாக இந்து மதம் கருதுகிறது. எண்ணற்ற வருடங்களாக இந்து ரிஷி முனிவர்கள் கண்டுபிடித்துள்ள விலை மதிக்க முடியாத பொக்கிஷங்களே இந்து மதத்தின் பெருமைக்குக் காரணமாக அமைந்துள்ளன.

ஏனைய மதங்களைப் போன்று தனது மதத்தை மட்டும் போற்றுவதனாலேயே ஒருவன் மோட்சம் அடைய முடியும் என்று இந்து மதம் கூறுவதில்லை. பிற மதங்களைப் போற்றுவதால் ஒருவன் இறை நிலையைப் பெற முடியாது என்று மற்ற மதங்கள் கூறுவது போன்று அது சொல்வதில்லை. லட்சியத்தை அடைவிக்கும் பாதைகளுள் அதுவும் ஒன்று என்பதையே அது வலியுறுத்துகிறது. இறுதி லட்சியத்தை அடைவிக்கும் ஏனைய வழிமுறைகளையும் அது ஒப்புக்கொள்கிறது.

மனிதனின் பகுத்தறிவு செயல்பட இந்து மதம் பரிபூர்ண சுதந்திரம் அளிக்கிறது இச்சா சக்தியை அது கட்டுப்படுத்துவதில்லை. சிந்தனை வளர்வதற்கு அது தடையாக நிற்பதில்லை. விசுவாசம் வழிபாடுகளில் இந்து மதம் ஒருவனுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கிறது. இந்து மதம் ஒரு சுதந்திர மதம். இறை நிலை, ஆத்மாவின் தன்மை, படைப்பின் விசேஷம், வழிபாட்டு முறை, வாழ்க்கையின் லட்சியம் ஆகியவற்றைக் குறித்த வினாக்கள் சம்பந்தமாக இந்து மதம் மனித சிந்தனைக்குப் பூரண சுதந்திரம் அளிக்கிறது. ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டையே அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும் அல்லது குறிப்பிட்ட வழிபாட்டு முறையையே அனைவரும் மேற்கொள்ள வேண்டும் எண்பதற்காகப் பொய்க் கூற்றுக்களைக் கூறிப் பிறரை ஒப்புக்கொள்ளச் செய்ய இந்து மதம் முயலுவதில்லை. அனைவரும் சிந்தித்துச் சொந்த முடிவுக்கு வர இந்து மதம் அனுமதிக்கிறது. எனவேதான் இந்து மதத்தில் பல்வேறு விதமான சமயக்கொள்கைகள் அநேக விதமான வழிபாட்டு முறைகள். விதவிதமான சமயச்சடங்குகள் அடுத்தடுத்து நிலவுவதோடு அல்லாமல் அவை அமைதியான முறையில் போற்றப்பட்டும் வருகின்றன.

இறைவன் உலகின் கர்த்தா என்பதையும் ஆட்சியாளர் என்பதையும் ஒப்புக் கொள்ளா-தவர்களை இந்துமதம் கண்டிப்பதில்லை. அமர ஆத்மனின் நித்தியநிலை மற்றும் மோட்ச நிலையையும் மறுக்கின்றவர்களையும் கூட இந்து மதம் கண்டிப்பதில்லை. இந்து மதம் எல்லா மதங்களையும் மதிக்கிறது. ஏனைய மதங்களை இது தூஷிப்பதில்லை. எங்கிருந்து வந்தாலும் எந்த உருவில் வந்தாலும் இந்து மதம் உண்மையை மதித்துப் போற்றுகிறது.

வேதாந்தம், சைவம், சாக்தம், வைணவம் முதலிய பல்வேறு சமயக் கோட்பாடுகளை இந்து மதம் தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பிட்டதோர் கொள்கையுடைய தனிமதம் என்பதைவிட இந்துமதம் ஒரு சமயப்பேரவை என்றால் சாலப் பொருந்தும்

எல்லாவிதமான மக்களுக்கும் பொருந்தும் முறையில் இந்து மதம் அமைகிறது.அவரவர் தகுதிக்கும் வளர்ச்சிக்கும் உகந்த முறையில் அமையும் ஆத்மீக உணர்வை இந்து மதம் அளிக்கிறது. இதுவே இந்தப் பெருந்தன்மை மிகும் மதத்தின் பேரழகு. இதுதான் இந்து மதத்தின் தனிப் பெருமை.

உண்மை ஒன்றே-முனிவர்கள் அதைப் பலவாறாகத் தெரிவிக்கின்றனர் என்பது ரிக் வேதக் கூற்று. பசுக்கள் பல்வேறு நிறங்களைக் கொண்டவை என்றாலும் அவை தரும் பால் ஒரே வெள்ளை நிறத்ததாக இருப்பது போன்று எல்லாப் பாதைகளும் ஒரே லட்சியத்தை அடைய உதவுகின்றன என்பதையே உபநிடதங்கள் பறைசாற்றுகின்றன. இந்துமதத்தில் வேறுபட்ட கொள்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன.

உபநிடதங்களில் அடங்கியுள்ள தத்துவங்கள் ஒப்புயர்வற்றவை. உபநிடதகால முனிவர்களை மேல்நாட்டு தத்துவ ஞானிகளும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். இந்திய முனிவர்களின் ஆத்மீக உயர்வைக் கண்டு அவர்கள் அதிசயித்துள்ளனர். ஷோப்பனோ் என்ற மேல்நாட்டு தத்துவஞானி உபநிடதங்களை நன்கு கற்றுத் தினமும் படுக்கைக்குச் செல்லும் முன் உபநிடதக் கருத்துக்களையே சிந்தனை செய்து வந்தார். "என் வாழ்வில் உபநிடதங்கள் சிறந்த ஆறுதலை அளித்து வந்துள்ளன என் மரணத்திற்குப் பிறகும் அவை எனக்கு ஆறுதலளித்து வரும்" என்று அப் பெரியார் கூறியுள்ளார்.

இந்துமதத்தின் இராஜயோக முறையும் தன்னிகரற்றதாக விளங்குகிறது. பாடங்கள் நடைமுறைக்குப் பொருத்தமாகவும் உயரிய போதனைகள் கொண்டவையாகவும் அமைந்துள்ளன. ஹடயோகப் பயிற்சிகளோடு உலகிலுள்ள எந்த உடற்பயிற்சி முறையும் எதிரிட முடியாது. குண்டலினி யோகம் அதியற்புதமானது. எனவேதான் அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களும் இந்து சந்நியாசிகளைத் தேடி அலைகின்றனர் யோகாசிரியர்களைத் தேடி அடிக்கடி அவர்கள் இமயமலைக்குச் செல்கின்றனர். ஐரோப்பியர்கள் சிலர் இந்து யோகிகளுடன் யோகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பல்வேறு படித்தரங்கள், பல்வேறு மனநிலைகள், பல்வேறு தகுதிகள், வாழ்க்கையின் பல்வேறு நிலைகள் மற்றும் ஆத்மீகத்தின் பல்வேறு களங்கள் ஆகிய எந்த விதத்திலுள்ளவர்க்கும் பொருந்தும் முறையில் அமையும் யோக சாதனைக் கிரமங்களை இந்து மதம் போதிக்கிறது.

தன்னடக்கம், தவம், துறவு, நடைமுறைச் சாதனை இவற்றை இந்து மத யோக வேதாந்த ஆசிரியர்கள் வெகுவாக வலியுறுத்தியுள்ளனர். இவ்வரிய சாதனைகள் மனதையும் புலன்களையும் அடக்கி நிறுத்தி உள்ளே உள்ள தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்த வேண்டிய முறையே அமைகப் பெற்றவை. வெறும் ஏட்டுக் கொள்கைகளைக் கொண்டதல்ல இந்துமதம். நடைமுறைக்கு மிகவும் பொருத்தமுள்ள முறையில் அது அமைந்துள்ளது. எனவேதான் ரிஷி முனிவர்கள் வாழும் நாடாக இந்தியா விளங்குகிறது. இந்து மதத்தில் ஒழுக்கவியல் சிறப்புடையதாக அமைந்துள்ளது. ஒழுக்கக் கட்டுப்பாட்டை இந்துமதம் வெகுவாக வற்புறுத்துகிறது. யோக வேதாந்தத்தின் அடித்தளங்களாக யம நியமங்கள் அமைகின்றன. ஒழுக்க அடிப்படையின்றி ஆத்மீக முன்னேற்றம் அசாத்தியமானது. ஆத்மீக சாதகன் ஒழுக்கத்தைக் கொண்டு நிற்க வேண்டும். அவன் சிந்தனை, சொல், செயலில் உண்மையாகவும் தூய்மையுள்ளவனாகவும் அமைய வேண்டும். அவன் நன்னடத்தையின் சிகரமாகத் திகழவேண்டும். எந்த ஜீவப் பிராணியையும் அவன் துன்புறுத்த நினைப்பது கூடாது. நற்சிந்தனை, நற்பேச்சு, நன்னடத்தை ஆகியவற்றை உறுதியுடன் அனுஷ்டிக்க வேண்டும்.

எந்த மதத்திற்கும் சாமான்ய ரூபம், விசேஷ ரூபம் என்று இரண்டு பகுதிகள் உள்ளன. சாமான்யரூபம் என்றும் மாறாமல் இருக்கிறது. எந்தச்

சூழ்நிலையிலும் அது மாறுவதில்லை. காலம், இடம், சூழ்நிலை, கருத்து வேற்றுமைகளால் அது தாக்கப்படுவதில்லை. இத்தகைய மாறாத நிலையே சனாதனம் என்று தெரிவிக்கப்படுகிறது.

சனாதன தர்மத்தின் அடித்தளம் சுருதி. ஸ்மிருதிகள் அதன் சுவர்கள். புராணங்களும் இதிகாசங்களும் தூண்கள். பழங்காலத்தில் சுருதிகளை மனப்பாடம் செய்து வந்தனர். ஆசிரியர் முதலில் சொல்ல மாணவர்கள் பின்பற்றிச் சொல்வர். புத்தக வடிவில் அவை எழுதப் பெறவில்லை.

இந்துமதத்தின் பல்வேறு பிரிவுகளும் வேதாந்தக் கோட்பாடுகளும் சுருதியையே முடிந்த முடிவாக ஏற்றுக் கொண்டுள்ளன. சுருதிக்கு அடுத்தபடியாக ஸ்மிருதிகள் விளங்குகின்றன. தர்ம சாஸ்திரம்தான் ஸ்மிருதி. இதில் மாமுனிவர் எழுதிய நான்கு பெரும் நூல்கள் அடங்கியுள்ளன. தனிமனிதன், குடும்பம், சமூகம், தேசம் இவை இனிய முறையே நடைபெறுவதற்குரிய சட்டதிட்டங்களை இவை தொவிக்கின்றன. மாபெரும் இந்து சட்ட நிபுணர் மனு எழுதியது மனு ஸ்மிருதி அல்லது மானவ தர்ம சாஸ்திரம். மாமுனிவர் யாஜ்ஞவல்கியர் எழுதியது யாஜ்ஞவக்ல்ய ஸ்மிருதி, சங்க ஸ்மிருதி, லிகித ஸ்மிருதி, பராசர ஸ்மிருதி முதலியவை ஏனையவை. மனு ஸ்மிருதியே மிக முக்கியமானது.

சரித்திர வரலாறுகள், கதைகள், உவமைகள் இவற்றாலாகியவை புராணங்கள். வேதங்களைக் கற்றுத் தெரிந்துகொள்ளும் தகுதியில்லாத பாமர மக்களின் உபயோகத்திற்காகவே இவை அமைந்துள்ளன. வேதக்கருத்துக்களைக் கொண்டு சுவாரஸ்யமாள முறையில் இவை அமைகின்றன. புராணங்கள் பதினெட்டு. அவை அனைத்தும் மாமுனிவர் ஸ்ரீ வேதவியாசரால் இயற்றப் பெற்றவை. இவற்றுள் விஷ்ணுவைப் போற்றும் ஆறு புராணங்கள் சாத்துவிக புராணங்கள் என்றும் பிரம்மாவைப் போற்றும் ஆறு புராணங்கள் ராஜஸிக புராணங்கள் என்றும் சிவனைப்போற்றும் ஆறு புராணங்கள் தாமஸ புராணங்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றன.

இந்து மதத்தின் தத்துவக் கருத்துக்கள் மிகச் சிறந்தவையாக அமைகின்றன. அதன் உயரிய ஒழுக்கமுறைப் போதனைகள் தன்னிகரற்றதாக விளங்குகின்றன.மனிதனது தேவைக்குத் தகுந்த முறையில் அவை அமைந்துள்ளன. இந்து மதம் ஒரு பூரண மதமாகத் திகழ்கிறது.

வேறெந்த மதத்திலுள்ள கருத்துக்களும் அதற்குத் தேவையில்லை. மாபெரும் யோகிகள், அரிய பெரியார்கள், மேன்மை வாய்ந்த மகாத்மாக்கள், சிறந்த தீர்க்கதரிசிகள், உயரிய சமயாச்சாரியர்கள், புகழ்மிகும் தேசபக்தர்கள், பெயர்போன அரசியல் அறிஞர்கள், போற்றற்குரிய போர் வீரர்கள், வியத்தகும் கற்புக்கரசிகள் ஆகியோரை கணக்கில் அடங்காத முறையில் இந்துமதம் தோற்றுவித்தது போன்று வேறெந்த மதமும் தோற்றுவிக்கவில்லை. இந்து மதத்தின் பெருமையை நீங்கள் எவ்வளவுக்கு அறிகிறீர்களோ அவ்வளவு அதைப் போற்றி நேசிப்பீர்கள். அதன் பெருமையை அறிய அறிய அது உங்களை விழிப்புறச் செய்கிறது. உங்கள் உள்ளத்தை நிறைவுடையதாக்குகிறது.

உலக மதங்களின் சரித்திரம் நமக்குத் தெரிவிப்பது என்ன? தொன்று தொட்டே மாபொரும் ரிஷி முனிவர்களின் உறைவிடமாக இந்தியா திகழ்ந்து வருகிறது என்பதையே மத சரித்திரம் நமக்கு அறிவுறுத்துகிறது. மக்களது உயர் தோற்றத்தை உருவாக்கியுள்ள உயரிய சமயக் கோட்பாடுகள், மனிதனை தெய்வீக நிலைக்கு இட்டுச் செல்லும் உயர் ஒழுக்க போதனைகள், மனிதனை இறை நிலைக்கு உயர்த்திய உயரிய ஆத்மீக உண்மைகள், உலகில் தோன்றிய இரட்சகர்களின் அவதாரங்கள் முதலியன முதன் முதலில் இந்தியாவிலேயே தோன்றின. ஸ்ரீ சங்கரர், ஸ்ரீசதாசிவப்பிரம்மம், ஸ்ரீஇராமானுஜர், ஸ்ரீஞானதேவர், ஸ்ரீதத்தாத்திரேயர், ஸ்ரீராமர்-ஸ்ரீகிருஷ்ணர் போன்ற அவதாரங்கள் ஆகிய மாபெரும் ஆத்மீகப்

பெரியார்களைத் தோற்றுவித்தது இந்தியாவன்றோ! உபநிடத ஞானத்தின் உயர்ஜோதியால் இந்தியாவின் ஆத்மீக ஆகாயம் சதா ஒளிமயமாகத் திகழ்கின்றது. இவ்வுலகில் எந்த மூலையில் ஏதாவது எழுச்சி ஏற்பட்டிருந்தால் அதன் காரணம் இந்தியாவில் எங்காவது ஓரிடத்தில் இறைவனின் ஓர் விசேஷ அவதாரத்தின் தோற்றத்தால் ஏற்பட்ட ஆத்மீக அலைகளே என்பது தெரிய வரும்.

இந்துக்களுக்கு ஒரு கலாசாரம், ஒரு மதம் இருந்து வந்துள்ளது. எந்த நாட்டு மக்களுடைய கலாசாரத்தையும் விட இது பழமையானது. இந்தியாவில் தோன்றிய ரிஷிகள், யோகிகள், மகாத்மாக்கள், ஆழ்வார்கள், தீர்க்கதரிசிகள், ஆச்சாரியர்கள், துறவிகள் முதலியவர்கள் மூலம் இறைவன் உலகத்தோடு பேசியிருக்கிறார்.

இந்து மதத்தைப் போல் சகிப்புத்தன்மை மிகுந்த ஒரு மதம் உலகில் எங்குமே இல்லை. இந்து மதத்தில் உள்ளதைப் போன்று யோக சாதனைகள், அஹிம்சை, மனோதத்துவ சாஸ்திரம், நன்னடத்தை நியதிகள், நிகரில்லாத தத்துவக்கருத்துக்களை ஆன்மீக உணர்வுகளை உலகில் எந்த மதத்திலும் காண முடியாது. இத்தகைய சிறப்பு அம்சங்களைக் கொண்ட சனாதனதர்மத்தின் பெருமைளை அறியாத தெரியாதவர்கள் இந்துக்களாகப் பிறந்தும் சிலர்-ஏன் பலர் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இந்து மதம் என்றால் என்ன என்பதை இந்துக்கள் அனைவரும் அறிந்து தெளிவு பெற்றிருந்தால் இன்றைக்கு இந்துக்கள் அனைவரும் இந்தப் பூவுலக தெய்வங்களாக காட்சி அளிப்பார்கள்.

புராணங்கள் - பதினெட்டு

01. பிரம்மபுராணம்	02. பத்மபுராணம்
03. விஷ்ணுபுராணம்	04. சிவபுராணம்
05. பாகவதபுராணம்	06. நாரதபுராணம்
07. மார்க்கண்டேய புராணம்	08. அக்கினி புராணம்
09. பவிஷ்யபுராணம்	10. பிரம்மவைவர்த்தன-புராணம்
11. லிங்கபுராணம்	12. வாமனபுராணம்
13. வராகபுராணம்	14. மத்ஸ்யபுராணம்
15. கூர்மபுராணம்	16. கருடபுராணம்
17. ஸ்கந்தபுராணம்	18. பிரம்மாண்டபுராணம்

திணைக்களச் செய்திகள்

நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு

மக்களிடையே வாசிக்கும் திறனை ஊக்குவிக்குமுகமாக நூலகங்களுக்கான நூல்கள் அன்பளிப்புச் செய்யும் வைபவம் 2007 நவம்பர் மாதம் 28ஆம் திகதி இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் இயங்கும் பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், அறநெறிப்பாடசாலை நூலகங்கள் என 300ற்கும் மேற்பட்ட நூலகங்கள் தெரிவு செய்யப்பட்டு, இதுவரை திணைக்களத்தால் வெளியீடு செய்யப்பட்ட நூல்கள் வழங்கப்பட்டன.

திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மத விவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் திரு.எச்.எம். ஹேரத் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் கலந்து கொண்ட நூலகங்களின் பிரதிநிதிகளுக்கு அமைச்சின் செயலாளர் திரு. எச். எம். ஹேரத், பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், கணக்காளர் திரு.எம். காண்டீபன், உதவிப்பணிப்பாளர்களான திரு.வை அநிருத்தனன், திரு.எஸ்.தெய்நாயகம், திரு.எம். சண்முகநாதன், திருமதி. ஹேமலோஜினிகுமரன், நிர்வாக உத்தியோகத்தர் திரு.பா.வைரவநாதன் ஆகியோர் நூற்பொதிகளை வழங்கினர். இந்நிகழ்ச்சிக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திருமதி தேவகுமாரி ஹரன், திருமதி நித்தியவதி நித்தியானந்தன், ஆராயச்சிப் பிரிவு உத்தியோகத்தர்கள் அனைவரும் பொறுப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமான நூற்கொள்வனவு

இலங்கை எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக அவர்களினால் எழுதப்பட்ட நூல்களை இந்துசமய, கலாசாரஅலுவல்கள் திணைக்களம் கொள்வனவு செய்து வருகின்றமை குறிப்பிடக்கூடிய பணிகளில் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் கடந்த வருட காலாண்டுக்குரிய கொள்வனவாக 34 இலங்கை எழுத்தாளரிடமிருந்து 1922 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடற்குரியது.

கலாபூஷண விருது வழங்கல் வைபவம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் கலாசார அமைச்சுடன் இணைந்து முதிய கலைஞர்களுக்கான கலாபூஷண விருது வழங்கும் வைபவத்தினை மேற்கொண்டு வருகின்றது. இவ்வகையில் சிற்பம், ஓவியம், நாடகம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், சினிமா, இலக்கியம், நாட்டுப்புறவியல், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை போன்ற பல்வேறு துறைகளில் மிகவும் சிறப்பாகச் சேவையாற்றிய தமிழ்க்கலைஞர்களைத் தெரிவு செய்து, கலாபூணம் விருது வழங்குவதற்கான சிபாரிசினை திணைக்களம் மேற்கொள்கின்றது.

இவ்வருடமும் திணைக்களம் கலாபூஷண விருது தொடர்பாக விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. விண்ணப்பங்களை அந்தந்தப் பிரதேச அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அரசாங்க அதிபரின் உறுதிப்படுத்தலுடன் ஏப்பிரல் மாத இறுதிக்குள் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இல.248, 1/1, காலி வீதி, கொழும்பு -04 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கடந்த வருடத்திற்கான கலாபூஷண விருது வழங்கும் வைபவம் 2007.12.15 ஆம் திகதி கொழும்பு ஜோன் டி சில்வா மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழா கலாசார அமைச்சர் கௌரவ மஹிந்தயாப்பா அபேவர்த்தன தலைமையில் மேல்மாகாண ஆளுநர் கௌரவ அலவிமௌலானா, பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ வி.புத்திரசிகாமணி, ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகார ஆலோசகரும் ஊடக ஆலோசகருமான கௌரவ ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்வைபவத்தில் தமிழ்க்கலைஞர்கள் 40 பேர் கௌரவம் பெற்றனர். திருமதி திரிவேணி சங்கரநாராயணன் அவர்களின் கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

இந்துக்கலைக்களஞ்சியம் 9 ஆம் தொகுதி

இந்துக்கலைக்களஞ்சியம் 9 ஆந் தொகுதியில் ந-நௌ வரையான எழுத்துக்களில் தொடங்கும் இந்துசமயம் தொடர்பான சொற்களுக்குரிய கட்டுரைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியின் பிரதம பதிப்பாசிரியராக பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களும் உதவிப்பதிப்பாசிரியராக திரு.க இரகுபரன், நிர்வாக ஆசிரியராக திரு. சீ.தெய்வநாயகம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இத்தொகுதியில் இடம்பெறும் கட்டுரைகள் இந்துசமய வரலாறு, பண்பாடு, தலங்கள், கலாசார சின்னங்கள், இந்துசமய நூல்கள் போன்ற பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கியுள்ளன. இந்நூல் இந்துசமயம், இந்துப்பண்பாடு ஆகிய துறைகளில் உயர்கல்வி பெறுவோருக்கும் ஆர்வலர்களுக்கும் இத்தொகுதி பயனுள்ளதாக அமையும். இக்கலைக்களஞ்சியத் தொகுதியினை திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

பண்பாடு

2007 ஆம் ஆண்டுக்கான பண்பாடு மலர் 16 இதழ் 02 வெளிவந்துள்ளது. இப்பண்பாடு மலரில் பல்வேறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன அவை வருமாறு :-

- தமிழ் சொல்லிலக்கணத் திணைப்பகுப்பின் அடிப்படை
- அகிலத்தின் ஆசான் அல்பேர்ட் ஐன்ஸ்ரைன்
- சமய நிறுவனங்களும் சமூக நிறுவனங்களும்
- இலங்கையின் இந்துசமய தொல்பொருட் சின்னங்கள்
- தஞ்சை நால்வரின் கலைப்பணி
- சுவாமி விபுலாநந்தர்
- மட்டக்களப்பில் வீரசைவக் குருமார் குடியேற்றம்

என்பனவாகும்

2008 ஆம் ஆண்டிற்கான பண்பாடு மலர் 17 இதழ் 01 வெளிவந்துள்ளது. இப்பண்பாடு மலரில் பல்வேறு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

அருணகிரிநாதரும் சைவசித்தாந்தமும்

பகவத்கீதை காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

ஔவையார் ஞானக்குறளில் சைவசித்தாந்த சிந்தனைகள்

இந்துமதத் தத்துவமும் பெரியபுராணமும்

என்பனவாகும்

இவ்விதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் சுய முகவரி இடப்பட்ட கடித உறையில் 15/= ரூபா பெறுமதியான முத்திரையினை ஒட்டி அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

கிடைத்தற்கரிய நூல்கள்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் கிடைத்தற்கரிய நூல்களைப் பதிப்பித்து வருகின்றது. அவ்வகையில் சி.கணேசையர் அவர்களின் உரையிலான

"இரகுவம்சம்" எனும் நூல் கடந்த வருடம் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதன் பதிப்பாசிரியராக திரு. ஸ்ரீபிரசாந்தன் பணியாற்றியுள்ளார். இந்நூலை திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பஞ்சாங்கம்

சர்வதாரி தமிழ்ப் புதுவருடத்திற்கான பஞ்சாங்கம் வெளிவந்துள்ளது. இந்து மக்களுக்கு தேவையான அனைத்து விடயங்களும் அடங்கியுள்ள இப்பஞ்சாங்கம் திணைக்களத்தினால் கடந்த 18 வருடங்களாக அச்சிட்டு இலவசமாக வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. திணைக்களத்திற்கு நேரடியாக வந்து இதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சைவ சித்தாந்த வகுப்பு

சைவ சித்தாந்த நெறியில் ஆர்வமிக் கோருக்காக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் சைவ சித்தாந்த நெறியின் அடிப்படைத்தத்துவங்கள், கோட்பாடுகள் என்பனவற்றை விளக்கும் நோக்கில் அமைந்த வகுப்பொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இவ்வகுப்பு எதிர்வரும் மே மாதம் 23ஆம் திகதி கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறும். தமிழ்நாட்டு அறிஞரான திரு எஸ். சண்முகவேல் அவர்கள் விரிவுரை வழங்கவுள்ளார்.

ஆய்வு நூலகம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் ஆய்வு நூலகமொன்று 1986ஆம் ஆண்டிலிருந்து சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. இவ் ஆய்வு நூலகம் 8956 ஆய்வு நூல்களைக் கொண்டுள்ளது. இந்நூலகத்தில் இந்துசமயம், தத்துவம், வரலாறு, தமிழிலக்கியம், சமுகவியல் விஞ்ஞானம் போன்ற பல்துறைசார்ந்த ஆய்வுநூல்கள் உள்ளன. இந்துப்பண்பாடு, தமிழிலக்கியம் ஆகிய துறைகளில் ஆய்வுகளை மேற்கொள்ள விரும்புவோரும் ஆர்வலர்களும் இந்நூலகத்தை கடமை தினங்களில் காலை 9 மணி முதல் பி.ப.4.00 வரை பயன்படுத்தலாம்.

நவராத்திரி விழா

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்துமதப் பெருவிழாவாக வருடா வருடம் நவராத்திரி விழாவினைக் கொண்டாடி வருகின்றது. இந் நவராத்திரி விழா கொழும்பில் மாத்திரமன்றி நாடாளாவிய ரீதியில் பல்வேறு மாவட்டங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழ்பபாணத்தில் தென்மராட்சிப் பிரிவில் நுணாவில் கண்ணகையம்மன் ஆலயத்தில் 20.10.2007 ஆம் திகதியும், வடமராட்சிப் பிரதேசத்தில் கற்கோவள பிரதேச அறநெறிப்பாடசாலையிலும் அல்வாய் சாமணந்துறை ஆலடிப் பிள்ளையார் ஆலயத்திலும் முறையே 16.10.2007, 21.10.2007 ஆகிய இரு தினங்களிலும், யாழ் மாவட்ட தீவகப் பகுதியில் புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசர் அறநெறிப்பாடசாலையிலும் நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலிலும் முறையே 13.10.2007, 20.10.2007 ஆகிய இரு தினங்களிலும் நவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விரு தினங்களிலும் பூசை வழிபாடுகள், சிறப்புச் சொற்பொழிவுகள், குழுப்பாடல், பக்தி இசை நிகழ்ச்சிகள் என்பன நடைபெற்றன.

புத்தளம் மாவட்டத்தில் மருதங்குளம் சைவப்புலவர் வித்தியாலயத்தில் 10 நாட்களும் முப்பெருந்தேவியருக்கு பூசை வழிபாடுகள் நடைபெற்றன. நவராத்திரி தொடர்பாக மாணவர்களுக்கிடையே பொது அறிவுப் போட்டியொன்று நடைபெற்று, விஜயதசமி நாளன்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

பதுளை மாவட்டத்தில் நவராத்திரி விழாப் பூசை நிகழ்வுகள் பண்டாரவளை நெலுவத்தோட்ட ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவிலிலும், ஆலிஎல போகத்தன விவேகானந்தர் அறநெறிப் பாடசாலையிலும் நடைபெற்றது. இவ்விழாவில் கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

திருகோணமலை மாவட்டத்தில் காந்திசேவா மண்டபத்தில் 20.10.2007ஆம் திகதி நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை 8.00 மணிக்கு பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகிய இவ் விழாவில் வரவேற்புரை, சொற்பொழிவு, குழு நடனம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. வவுனியா மாவட்டத்தில் வடக்குப் பிரதேச செயலக ஆதரவில் பனைநின்றன் முத்துமாரியம்மன் ஆலயம், துட்டுவாகை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், குட்செட் கருமாரியம்மன் ஆலயம் ஆகியவற்றில் முறையே 16.10.2007, 18.10.2007, 19.10.2007 ஆகிய மூன்று தினங்களிலும் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பல சிறப்புக் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்டத்தில் 20 - 21.10.2007 ஆகிய திகதிகளில் அகிலாண்டேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது

கண்டி மாவட்டத்தில் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நித்தவெல ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தினர் கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் 20.10.2007 ஆம் திகதி வாணி விழாவினை சிறப்பாகக் கொண்டாடினர். இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக கண்டி மாவட்ட மேலதிக செயலாளர் திரு. ஜி. எச் எம்.சுகதாஸ கலந்து கொண்டார். இவ்விழாவில் பல சிறப்புக் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் திக்கோடை 40ஆம் கிராமம் மாரியம்மன் அறநெறிப் பாடசாலையில் 17. 10. 2007 ஆம் திகதி வாணி விழாக் கொண்டாடப்பட்டது. அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெற்றன.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை விவேகானந்தா வித்தியாலயத்தில் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் அப்பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் கலாசார போட்டிகளும் இடம்பெற்றன. கலாசார போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

நுவரெலியா மாவட்டத்தில் நவராத்திரி விழா ஸ்ரீ கிருஸ்ணா அறநெறிப்பாடசாலையில் 20.10.2007ஆம் திகதி நடைபெற்றது. விசேட நவராத்திரி பூஜை, ஸ்ரீ கிருஸ்ணா இந்து பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சி, தவில் கச்சேரி என்பன இடம்பெற்றன.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தில் சிவசக்தி அறநெறிப்பாடசாலையினர் 18.10.2007 ஆம் திகதி நவராத்திரி விழாவினை கொண்டாடினர். இவ்விழாவில் பூஜை, கலை நிகழ்ச்சிகள், அன்னதானம் என்பன நடைபெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் அனந்தபுரம் துர்க்கையம்மன் ஆலயத்தில் 20.10.2007ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகமும், திணைக்களமும் இணைந்து நவராத்திரி விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

திணைக்கள நவராத்திரி விழா

கொழும்பில் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் 18, 19.10.2007 ஆகிய திகதிகளில் புதிய கதிரேசன் மண்டபத்தில் நவராத்திரி விழாவினை சிறப்பாகக் கொண்டாடியது. பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட அன்னையின் வாணி விழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக சமய விவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி. ரோஸ்பெர்ணான்டோ, ஸ்ரீமத் சுவாமிசர் வரூபானந்தா, திரு.சுப்பிர-மணியச்செட்டியார் ஆகியோர் கலந்து கொண்டனர். மாலை 4.30 மணிக்கு வி.கே.பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் விழா ஆரம்பமாகியது.

இவ்விழாவில் உதவிப்பணிப்பாளர் திரு.எஸ் தெய்வநாயகம் அவர்கள் வரவேற்புரையையும் சுவாமி சர்வரூபானந்தஜி ஆசியுரையையும் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தலைமையுரையையும் சைவப்புலவர் க.செல்லத்துரை சிறப்பு சொற்பொழிவையும் திருமதி ரோஸ் பெர்ணான்டோ சிறப்புரையும் வழங்கினர். இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகளாக திரு.அருணந்தி ஆரூரனின் கானாஅமிர்தம், கவினாலாயா கலைக்கூட மாணவிகளின் குச்சுப்பிடி, கரகாட்டம், மோகினியாட்ட நடனங்களும் கலாசமர்ப்பண நிருத்தியக்ஷேத்திரா மாணவிகளின் நாட்டிய நாடகமும் இடம்பெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்வில் வரவேற்புரையை உதவிப்பணிப்பாளர் வை. அநிருத்தனனும் ஆசியுரையை ப்ரவ்ராஜிக் ஆத்மதேவப்ரானா மாதாஜி (இராமகிருஸ்ண சாரதாமடம் கொழும்பு) அவர்களும் தலைமையுரையை பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அவர்களும் கௌரவ அமைச்சர் பண்டு பண்டாரநாயக்கா அவர்களின் சார்பாக அவரின் ஆலோசகரான திரு.யு.கே குணவர்த்தன அவர்கள் சிறப்புரையையும் வழங்கினர். இவ்விழாவில் ஏ.கே. கருணாகரன் அவர்களின் மாணவிகளின் "சக்தி மாலை" நிகழ்ச்சி, திரு.குமரேஸ் குழுவினரின் "வாத்திய சங்கமம்" பல்லியம் இசை, கலாசூரி திருமதி அருந்ததி ஸ்ரீ ரங்கநாதன் அவர்களின் நெறியாள்கையில் "நர்த்தன மதுரம்" எனும் நாட்டியம், பேராசிரியை. ஞா. குலேந்திரன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெற்றன.

பாராளுமன்றத்தில் நவராத்திரி விழா

19.10.2007 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் கௌரவ சபாநாயகர் ஜே. எம் லொக்குபண்டார தலைமையில் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கௌரவ மதவிவகார அமைச்சர் பண்டுபண்டாரநாயக்க, கௌரவ சபாநாயகர் உட்பட கௌரவ அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். காலை 10.00 மணிக்கு பூசையுடன் விழா ஆரம்பமாகியது. பூசையினை பொன்னம்பலவாணேஸ்வர பிரதம குருக்கள் அவர்கள் நடத்தி வைத்தார். அதன் பின்னர் மங்கள இசையுடன் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. இந்நிகழ்ச்சியில் குமரேஸ் குழுவினரின் பல்லியம் இசை நிகழ்ச்சி, கவினாலயா மாணவிகளின் கரகாட்டம், மோகினியாட்டம், நிருத்திய கலா சமர்ப்பண நிருத்தியக்ஷேத்திரா மாணவிகளின் நாட்டிய நாடகமும் இடம்பெற்றன.

சபாநாயகர் இல்லத்தில் லக்ஷ்மி பூசை

நவராத்திரி விழாவை முன்னிட்டு 18.10.2007 ஆம் திகதி சபாநாயகர் இல்லத்தில் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பிரதமர் கௌரவ ரட்ணஸ்ரீவிக்கிரமநாயக்கா, மதவிவகார அமைச்சர் கௌரவ பண்டு பண்டாரநாயக்க, கௌரவ அமைச்சர் திரு. பொ.சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ ரவிகருணநாயக்க, கௌரவ சிவாஜிலிங்கம், வாழ்க்கைத் தொழில் நுட்பப் பிரதியமைச்சர் கௌரவ இராதாகிருஸ்ணன், அவர்கள் ஏனைய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு.ய.அநிருத்தனன், கணக்காளர் திரு.மா.கோ. காண்டீபன், நிர்வாக உத்தியோகத்தர் திரு.பா.வைரவநாதன் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். மாலை 5.30 மணிக்கு பூஜையுடன் இவ்விழா ஆரம்பமாகியது. இப்பூஜையினை தெஹிவளை விஷ்ணு கோவிலின் பிரதம சிவாச்சாரியார் நடத்தி வைத்தார். இவ்விழாவில் மங்களஇசை, பல்லியம், திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நடன நிகழ்ச்சி, திவ்யா சிவநேசனின் நடனம் ஆகியன இடம்பெற்றன.

தைப்பொங்கல் விழா

இவ்வாண்டு திணைக்கள அநுசரணையோடு தைப்பொங்கல் விழா ஜனவரி மாதம் 19ஆம் திகதி ஜனாதிபதி வாசல்ஸ்தலமான அலரிமாளிகையில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மேன்மைதங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர் தம் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஸ, மதவிவகார அமைச்சர் கௌரவ பண்டுபண்டாரநாயக்க, கௌரவ அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். இவ்வைபவத்தில் இராமகிருஷ்ண மிஷன் கொழும்புக் கிளைத்தலைவர் சுவாமி சர்வரூபானந்தாஜி அவர்கள் ஆசியுரை வழங்கினார். திரு. சிவசண்முகசர்மா பூஜையினை நிகழ்த்தினார். ஸ்ரீ வித்யாபீட குருகுலத்தினர் வேத பாராயணம் செய்தனர். இந்நிகழ்ச்சியில் குமரேசன் குழுவினரின் மங்கள இசை, திரு.ஆரூரன் குழுவினரின் பக்தி இசை, திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன் அவர்களின் மாணவிகளின் "காளிங்க நர்த்தனம்" நாட்டிய நாடகம் என்பன இடம்பெற்றன.

தைப்பொங்கல் விழா மாவட்ட ரீதியாக இம்முறை 20.01.2008 ஆம் திகதி நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது. தைப்பொங்கல் விழாவை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்துடன் இணைந்து நடாத்தியது. பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு மத விவகார அமைச்சர் கௌரவ பண்டுபண்டாரநாயக்க அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். இவ்விழாவில் கௌரவ விருந்தினராக திரு.முத்தையா செட்டியார் சிவப்பிரகாசம் அவர்கள் (உறுப்பினர் இந்து பண்பாட்டு நிதியம்) கலந்து கொண்டார். காலை 8.00 மணிக்கு இவ்விழாவை கொடியேற்றி கௌரவ அமைச்சர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் பொங்கல் நிகழ்வும், பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன. கௌரவ அமைச்சர் அவர்கள் பூசை வழிபாட்டில் கலந்து கொண்டதுடன் சிறப்புரையையும் நிகழ்த்தினார். அதன் பின்னர் இவ்விழாவில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள் காலை நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன. மாலை நிகழ்ச்சிகள் குமரேசன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பித்தது இவ்விழாவில் வரவேற்புரை, ஆசியுரை, தலைமையுரை என்பன இடம்பெற்றன. செல்வி திவ்வியா குழுவினரின் "சங்கமம்" "கிராமத்துச் சாரல்" நடன நிகழ்ச்சிகளும் திருமதி கோகுலத்வனி விஜயராகவன் குழுவினரின் "பல்லியம்". இசை நிகழ்ச்சியும், நீர்கொழும்பு இந்து இளைஞர்மன்ற அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனமும், திருமதி சூரியகலா ஜீவானந்தன் அவர்களது மாணவர்களின் "நிவேதனம்" நடனமும், நீர்கொழும்பு இந்து மத்திய கல்லூரி மாணவிகளின் நடனமும் இடம்பெற்றன.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சி

இலங்கை சுதந்திரம் அடைந்து அறுபது வருடங்கள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு அரசு அமைச்சுக்கள், திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் என்பன இணைந்து ஏற்பாடு செய்து நடாத்திய "தேசத்திற்கு மகுடம்" என்ற பிரமாண்டமான கண்காட்சி பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 10 ஆம்திகதி வரை சர்வதேச பண்டாரநாயக்க மண்டபத்தில் நடைபெற்றது. மத விவகார அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த காட்சியறைகளில் மத விவகார அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்கள் தங்களுடைய பணிகள் தொடர்பான புகைப்படங்கள், தரவுகளை காட்சிக்கு வைத்திருந்தனர். இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களமும் தனக்காக ஒதுக்கப்பட்ட காட்சியறையில் ஆலயங்களின் புகைப்படங்கள், சமய விழாக்களை சித்தரிக்கும் ஓவியங்கள், திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்ட நூல்கள், தொன்மையான ஆலயங்கள், சிற்பங்கள், நாணயங்கள், கல்வெட்டுக்கள் போன்றவற்றின் புகைப்படங்கள், திருவுருவப்படங்கள், அறநெறிக் கல்விக்கான கல்வி உபகரணங்கள், தமிழர் பாரம்பரிய கலைகளின் புகைப்படங்கள், திணைக்கள செயற்பாடுகள் தொடர்பான தரவுகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டன. இக்காட்சியறையின் கோவில் மாதிரியான வடிவமைப்பு திரு.ஞானகுருவின் கைவண்ணத்தினால் உருவாக்கப்பட்டது.

இக்கண்காட்சிக்காக திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட திணைக்களப் பணிகள் தொடர்பான பிரசுரம் பார்வையாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இப்பணியினை செவ்வனே ஆற்றிய திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுக்கள்.

தேசிய சுதந்திரதின வைபவம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 60ஆவது தேசிய சுதந்திரதினத்தை முன்னிட்டு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி காலை 6.00 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயத்தில் விசேட சமய வழிபாட்டு நிகழ்ச்சியினை எற்பாடு செய்திருந்தது. இவ்வழிபாட்டு நிகழ்வுகளுக்கு வாழ்க்கைத் தொழில் நுட்ப பயிற்சி பிரதியமைச்சர் கௌரவ இராதாகிருஸ்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். நகர அபிவிருத்தியும் புனிதப் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு இராமானுஜம் மற்றும் பல பிரமுகர்களும் பூஜைகளில் பங்கேற்றனர். இப்பூஜை வழிபாடுகளில் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு.வை. அநிருத்தனன், உதவிப்பணிப்பாளர் திரு.எம் சண்முகநாதன், நிர்வாக உத்தியோத்தர் திரு.பா.வைரவநாதன் உட்பட அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர் இவ்விழா தொடர்பான நேரடி ஒலிபரப்பினை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டது.

மகா சிவராத்திரி விழா - 2008

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மகா சிவராத்திரி விழாவினை இவ்வருடம் இரத்தினபுரி மாவட்டத்தில் சிவனாலயத்தில் 06.03.2008 ஆம் திகதி கொண்டாடியது. இவ்விழாவில் பல சிறப்புக் கலைநிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், நான்கு சாமப் பூஜைகள் சிறப்பாக நடைபெற்றன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் லிங்கோற்பவ காலப் பூஜையை நேரடி ஒலிபரப்புச் செய்தது. அதேவேளை மாவட்ட ரீதியிலும் கலாசார உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் மகா சிவராத்திரி விழாவினைக் கொண்டாட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்து இளைஞர் யுவதிகளுக்கான ஆன்மீக எழுச்சிப்பட்டறை

இந்து இளைஞர், யுவதிகள் ஆன்மீக பயிற்சிகளைப் பெறுவதற்காகவும் ஆளுமை, தலைமைத்துவ பண்புகளையும் வளர்த்துக் கொள்வதற்காகவும் வருடம் தோறும் ஆன்மீக எழுச்சிப்பட்டறைகளைத் திணைக்களம் நடத்தி வருகின்றது. இளைஞர், யுவதிகளுக்கு இத்தகைய ஆன்மீக பயிற்சிகளை வழங்குவதில் தேர்ச்சி பெற்ற இந்திய, உள்ளூர் அறிஞர்கள் மூலமாக இப்பயிற்சிகளை அளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இளைஞர்கள் சமயதத்துவங்களைப் புரிந்து கொள்ளவும் யோகாசனம், தியானம், பிரார்த்தனை, ஏனைய உடற்பயிற்சிகள் போன்றவற்றை செயல் ரீதியாக அறிந்துகொள்ளத்தக்க வகையிலும் ஆன்மீக எழுச்சிப் பட்டறைகள் அமைகின்றன. இவ்வருடமும் இத்தகைய எழுச்சிப்பட்டறை நடைபெற உள்ளது.

இந்துமத குருமார் பயிற்சி

நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள இந்து ஆலயங்களிலும் அந்தணசிரேட்டர்கள் அல்லாத இந்துக் குருமார் பூஜை மற்றும் ஆலயக்கிரியைகள் சார்ந்த பணிபுரிபவர்களாக உள்ளனர். இத்தகையோர் முறையான வகுப்புக்களில் பங்கேற்று பயிற்சி பெறாத காரணத்தினால் ஆலய கிரியைகள் தொடர்பான பயிற்சி மற்றும் செயல் முறை விளக்கங்கள் என்பன அவசியமாகின்றன. கடந்த சில ஆண்டுகளாக மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இந்துக் குருமார்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டும் இப்பயிற்சியினை வழங்க திணைக்களம் முடிவுசெய்துள்ளது.

அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான சீருடை கல்வி உபகரணங்கள் வழங்கல்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நாடாளாவிய ரீதியில் இயங்கும் இந்து அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கான சீருடைகளை வழங்கி வருகின்றது. அவ்வகையில் பதுளை, நுவரெலியா மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான சீருடை, கல்வி உபகரணங்கள் ஆகியன வழங்கும் வைபவம் ஹற்றன் மாணிக்கவிநாயகர் சைவ மகாசபையில் 26.01.2008ஆம் திகதி இடம்பெற்றது. இவ்வைபவத்தில் 100ற்கும் அதிகமான அறநெறிப் பாடசாலைகளுக்கு இலவச சீருடைகள், புத்தகப் பொதிகள், இசைக்கருவிகள் வழங்கப்பட்டன. இவ்வைபவத்தில் உதவிப்பணிப்பாளர்களான திரு.வை அநிருத்தனன், திருமதி. கேமலோஜினி குமரன் ஆகியோர் திணைக்களத்தின் சார்பில் கலந்து கொண்டனர். இவ்வைபத்திற்கு இணைப்பாளராக திருமதி.புவனேஸ்வரி நடராஜா செயற்பட்டார். இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய அறநெறிப்பிரிவின் உத்தியோகத்தர்கள் அனைவரும் பாராட்டத்தக்கவர்கள்.

இந்துசமய பொது அறிவுப்போட்டிப் பரிசளிப்பு விழா

இந்துசமய அறிவினை இந்து அறநெறிப் பாடசாலை மாணவரிடையே விருத்தி செய்யும் முகமாக பொது அறிவுப் போட்டிப் பரீட்சையொன்று கடந்த வருடம் அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நடாத்தப்பெற்றது. இப்பரீட்சையில் நாடாளாவிய ரீதியில் இருபத்து மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றினர். கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என . மூன்று பிரிவுகளில் அறநெறிப்பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைவாக இப்போட்டிகள் நடைபெற்றன. பரிட்சை நிலையங்களாக பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, பரீட்சகர்களாக பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் செயற்பட்டனர். தேசிய, மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 189 மாணவர்களுக்கு பணப்பரிசு, சான்றிதழ், புத்தகங்கள் என்பன வழங்கப்பட்டன தேசிய மட்டத்தில் 1, 2, 3ஆம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு தலா 5000, 4000, 3000 ரூபாவும் மாவட்ட மட்டத்தில் 1, 2, 3ஆம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு முறையே 3000, 2000, 1000 ரூபாவும் வழங்கப்பட்டது இப்பரிசளிப்பு வைபவம் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி கொழும்பு, இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் இவ்வைபவத்திற்கு தலைமை வகித்தார். இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக மத விவகார அமைச்சின் செயலாளர் திரு.எம்.எச்.ஹேரத் அவர்கள் கலந்து கொண்டு, போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசு சான்றிதழ்களை வழங்கினார். இவ்வாண்டும் இத்தகைய போட்டியினை அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கிடையே பாலர்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என நடாத்துவதற்கான ஏற்பாடுகளை திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

அறநெறிப் பாடசாலை விபரத்திரட்டு

நாடளாவிய ரீதியில் இயங்கும் 1500ற்கும் மேற்பட்ட இந்து அறநெறிப்பாடசாலைகளின் செயற்பாடுகளை அறியும் பொருட்டும் அதன் மூலம் இந்து அறநெறிக்கல்வியின் அபிவிருத்தி இலக்கினை கொண்டு செல்லமுடியும் என்பதனை நோக்காகக் கொண்டு விபரத்திரட்டு ஒன்று திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் எதிர்வரும் காலங்களில் இந்து அறநெறிப்பாடசாலைகளின் அபிவிருத்திக்கான சீருடை, நூல்கள், கல்வி உபகரணங்கள், ஆசிரியர் கொடுப்பனவு, கருத்தரங்குகள் ஆகியன மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்துசமய பொது அறிவுப் போட்டிக்கான விடயப்பரப்பு

பிரிவு	பாட விடயப்பரப்பு
(1) பாலர்பிரிவு (25 வினாக்கள்) 1 மணித்தியாலம்	01. பாலர் பிரிவக்குரிய சைவபோதினி 02. ஔவையார் அறிவுச் செல்வங்கள் (அ) ஆத்திசூடி
(11) கீழ்ப்பிரிவு (25 வினாக்கள்) 1 மணித்தியாலம்	01. 4, 5ஆம் தரத்திற்குரிய சைவபோதினி 02. ஔவையார் அறிவுச் செல்வங்கள் (அ) கொன்றை வேந்தன் 03. திருக்குறள் கடவுள் வாழ்த்து
(111) மத்தியபிரிவு (30 வினாக்கள்) 1 மணித்தியாலம்	01. 7, 8 ஆம் வகுப்பிற்குரிய சைவபோதினி 02. ஔவையார் அறிவுச் செல்வங்கள் (அ) கல்வி ஒழுக்கம் 03. திருக்குறள் (அ) கல்வியுடமை (ஆ) அன்புடமை
(IV) மேற்பிரிவு (40 வினாக்கள்) 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்	01. 9, 10, 11ஆம் வகுப்பிற்குரிய சைவபோதினி 02. ஔவையார் அறிவுச் செல்வங்கள் (அ) நல்வழி 03. திருக்குறள் (அ) அறன் வலியுறுத்தலே, விருந்தோம்பல்

பண்ணிசைக் கருத்தரங்குகள்

அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே திருமுறைகளைப் பண்ணோடு பாடுதல் தொடர்பான இசை அறிவினை விருத்தி செய்யும் முகமாக அறநெறி ஆசிரியர்களுக்கான பயிற்சி பண்ணிசைக் கருத்தரங்கினை திணைக்களம் நடத்தி வருகின்றது. கடந்த வருடம் மாத்தறை, புத்தளம், கிளிநொச்சி, கண்டி, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மாவட்டங்களில் பண்ணிசைக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இக் கருத்தரங்குகளினால் 685 ஆசிரியர்கள் பயன்பெற்றனர். இப்பண்ணிசைக் கருத்தரங்கில் விரிவுரையாளராக திரு.கிருஷ்ணன், திரு.ஜே. சிவலிங்கம், சிவத்திரு உதயகுமார், திருமதி கயல்விழி, திரு.எஸ்.நாகராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

இந்து அறநெறி இறுதிநிலைப் பரீட்சைக்கான பயிற்சிக்கருத்தரங்கு

இந்து அறநெறிப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வருடந்தோறும் மாவட்ட ரீதியில் கருத்தரங்குகளை திணைக்களம் நடாத்தி வருகின்றது.அறநெறிப்பாடசாலைகள் திறம்பட நடத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதோடு பாடத்திட்டத்தோடு அடங்கிய விரிவுரைகளை நடத்துவதன் மூலம் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் ஆர்வத்தை ஏற்படுத்துவதும் பிரதான நோக்கமாகும். அவ்வகையில் இவ்வருடத்திற்கான (2008) கருத்தரங்குகள் பல்வேறு மாவட்டங்களிலும் திணைக்களம் நடத்த ஏற்பாடு செய்துள்ளது. 23.02.2008 ஆம் திகதி மாத்தறை மாவட்டத்தில் தெனியாய இராஜபக்ஷ மகாவித்தியாலயத்தில் இந்து அறநெறி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. இறுதிநிலைப் பரீட்சைக்குரிய பாடத்திட்டங்களான இந்துசமய மெய்யியல், இந்து சமய வாழ்வியல், இந்துசமய இலக்கியம், இந்து சமய வரலாறு என்ற பாடங்களுக்கு அமைவாக இக்கருத்தரங்கு நடைபெற்றது. அதேவேளை இக்கருத்தரங்கு நாடு பூராகவும் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது மாணவர்களுக்கு ஒழுக்கக் கல்வியினை வழங்குவதற்கான செயல்முறைப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

இந்து தர்மாசிரியர் கருத்தரங்கு

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பரீட்சைத் திணைக்களத்தினால் இந்து தர்மாசிரியர் பரிட்சை வருடம் தோறும் நடத்தப்படுகின்றது. இந்துசமய வரலாறு, பன்னிருதிருமுறைகள், சமயஞானிகளும் சமயபெரியார்களும், கோயில்களும் நுண்-கலைகளும், வேதங்களும் ஆகமங்களும் ஆகிய ஐந்து பாடங்களில் பரீட்சை நடைபெறும். ஐந்து பாடங்களுக்கும் விரிவுரைகள் மாவட்டங்கள் தோறும் ஒரு நாள் கருத்தரங்காக நடைபெற்று வருகின்றது. இவ்வருடமும் இக்கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இந்து ஆலயங்களுக்கான நிதியுதவி

நாட்டின் பல்வேறு பாகங்களையும் சேர்ந்த இந்து ஆலயங்களின் புனரமைப்பு செயற்பாடுகளுக்கு என திணைக்களத்தின் மூலம் மூலதனச் செலவீட்டின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகின்றது. நிதியுதவிக்கு விண்ணப்பிக்கும் ஆலயமொன்றின் நிர்வாக சபையினர் தமது புனரமைப்புத் தொடர்பான மேல்வரும் விவரங்கள் அனைத்தையும் முழுமையாக சமரப்பித்தல் வேண்டும்.

01. நிதியுதவி தொடர்பான கோரிக்கைக் கடிதம்

02. ஆலயத்தின் பதிவுச்சான்றிதழ்

03. ஆலய நிர்வாகசபை விபரம்

04. ஆலய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்ட கூட்டறிக்கை (மாதாந்த வருடாந்த கூட்டறிக்கை)

05. ஆலய செயற்பாட்டறிக்கை

06. செயற்படுத்தப்படவுள்ள புனரமைப்புத் தொடர்பான உத்தேச மதிப்பீடு, வரைபடம், தொழில் நுட்ப உத்தியோகத்தரின் அங்கீகாரத்துடன்

07. ஆலயத்தின் பெயரில் வங்கிக் கணக்கு, வங்கியின் பெயர், கணக்கின் பெயர், கணக்கின் இலக்கம் உள்ள பக்கங்களின் நிழற்படப்பிரதி

08. மாவட்ட கலாசார உத்தியோகத்தர் சிபார்சு/ பிரதேச செயலாளர் சிபார்சு

அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் பொழுதே அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் நிதியுதவி வழங்கப்படும். நிதியுதவி பெற்ற ஆலய நிர்வாகிகள் தாம் பெற்ற நிதியுதவி கொண்டு செய்து முடித்த வேலை, செலவு மதிப்பீட்டறிக்கை, (தொழில் நுட்ப உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலுடன்) புகைப்படங்கள் என்பனவற்றை உடன் அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றனர்.

கடந்த வருடம் (2007) நிதி வழங்கப்பட்ட ஆலயங்களில் மாவட்ட ரீதியான புள்ளி விபரம்

தொ. இல.	மாவட்டம்	ஆலயங்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை
1.	அம்பாறை	38	3,775,000.00
2.	மட்டக்களப்பு	56	3,575,000.00
3.	யாழ்ப்பாணம்	91	9,925,000.00
4.	கிளிநொச்சி	25	3,050,000.00
5.	முல்லைத்தீவு	18	1,950,000.00
6.	மன்னார்	09	675,000.00
7.	திருகோணமலை	13	1,225,000.00
8.	வவுனியா	23	1,655,000.00
9.	அம்பலாங்கொடை	01	500,000.00
10.	அனுராதபுரம்	01	200,000.00
11.	பதுளை	41	2,600,000.00
12.	கொழும்பு	08	425,000.00
13.	களுத்துறை	05	275,000.00
14.	கண்டி	23	1,425,000.00
15.	கேகாலை	16	1,175,000.00
16.	குருநாகல்	02	300,000.00
17.	மாத்தளை	04	250,000.00
18.	மாத்தறை	02	200,000.00
19.	மொனராகலை	01	100,000.00
20.	நுவரெலியா	43	3,025,000.00
21.	பொலன்றுவை	01	50,000.00
22.	புத்தளம்	07	450,000.00
23.	இரத்தினபுரி	20	1,225,000.00

இந்துசமய நிறுவனங்களுக்கான நிதியுதவி

இந்துசமய நிறுவனங்களைப் பதிவுசெய்தல் அவற்றுக்கான நிதியுதவி வழங்கல் போன்ற பணிகளை திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இந்நிதியுதவியானது கட்டடங்களுக்கான நிதி அல்லது புனர்நிர்மாணத்திற்கான நிதியாகவும் அவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்கான நிதியாகவும் வழங்கப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டில் இந்து சமய நிறுவனங்களுக்காக வழங்கப்பட்ட நிதி விபரம் வருமாறு:

இந்துசமய நிறுவனங்கள் 12 - 1,225,000/=
அனாதைச் சிறுவர் இல்லங்கள் 04 - 381,000/=

இந்துசமய நிறுவனங்கள் 15 - 745,000/=
அனாதைச் சிறுவர் இல்லங்கள் 09 - 552,000/=

நந்திக் கொடி வழங்கல்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து ஆலயங்கள், இந்து சமயநிறுவனங்கள், இந்து அறநெறிப்பாடசாலைகள் ஆகியனவற்றிற்கு நந்திக்கொடியினை வழங்கி வருகின்றது. இவ்வகையில் கடந்த வருடம் 800 பெரிய நந்திக்கொடிகளும் 2978 சிறிய நந்திக்கொடிகளும் சமய நிறுவனங்களின் கோரிக்கைக்கு ஏற்ப வழங்கப்பட்டுள்ளன. இவ்வருடம் நந்திக் கொடியினைப் பெற்றக்கொள்ள விரும்புபவர்கள் திணைக்களத்துக்கு விண்ணப்பித்து நந்திக் கொடியினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதி

இந்து யாத்திரிகர்களை வரவேற்று தகுந்த தங்குமிட வசதிகளை குறைந்த செலவில் வழங்குதலை நோக்கமாகக் கொண்டு இச்செயற்பணித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த வருடம் 25ஆயிரத்திற்கு மேற்பட்ட கதிர்காம யாத்திரிகர்கள் இவ்விடுதியில் தங்கியதன் மூலம் பயன்பெற்றனர்.

நாவலர் மணிமண்டபம்

யாழ்ப்பாணத்தில் இந்துசமய மேன்மைகள் சிறப்புற அமையும் வகையில் நாவலர் மணிமண்டபத்தினூடாக இந்துசமயப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. நாவலர் மணி மண்டபத்தில் யோகாசனப் பயிற்சிகள், பண்ணிசை வகுப்புக்கள், திருமுறை ஓதுதல், சிறப்பு ஆன்மீக சொற்பொழிவு, நாயன்மார் குருபூசை, கலாசார மேம்பாட்டிற்குரிய நிகழ்ச்சிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பான விவரங்கள் வருமாறு

- நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்டு திருவிழா நடைபெறும் 25 நாட்களும் நாவலர் மணி மண்டபத்தில் சிறப்பு ஆன்மீக சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. இவ் 25 நாட்களிலும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிராத்தனையும் நடைபெற்றது.
- 28.09.2007ஆம் திகதி இந்துசமய நிறுவனங்கள் 30 இற்கு நிதியுதவிக் காசோலைகள் வழங்கப்பட்டன.
- 21.10.2007ஆம் திகதி வாணிவிழா நடை பெற்றது. சிறப்புச் சொற்பொழிவு, வயலின் கச்சேரி, பண்ணிசைக்கச்சேரி, வித்தியாரம்பம் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன.
- 01.12.2007ஆம் திகதி நாவலர் குருபூசை நடைபெற்றது. இந்நிகழ்வில் விசேட சொற்பொழிவு, பண்ணிசைக்கச்சேரி, மாணவர் பேச்சுக்கள், கவிதைகள், நாடகங்கள் போன்ற அறநெறிப்-பாடசாலை மாணவர்களது கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இந்து கலாசார நிலையம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் இந்து கலாசார நிலையத்தால் யோகாசனப் பயிற்சிகள், பண்ணிசை வகுப்புக்கள், திருமுறை ஓதுதல், சிறப்பு

ஆன்மீக சொற்பொழிவு, நாயன்மார் குருபூசை, கலாசார மேம்பாட்டிற்குரிய நிகழ்ச்சிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த வருடம் இந்து கலாசார நிலையத்தில் அகதிகள் தங்கியிருந்ததன் காரணமாக இச்செயற்பாடுகளைப் பூரணமாக செய்யமுடியவில்லை. ஆயினும் 12.10.2007- 20.10.2007ஆம் திகதி வரை நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பஜனை கூட்டுப்பிராத்தனை, நாடகங்கள், விசேட பூஜைகள், பரதநாட்டிய கலைநிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன. 26.01.2008ஆம் திகதி தைப்பொங்கல் விழா பாரம்பரிய முறைப்படி கொண்டாப்பட்டது அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கிராமிய உழவர் நடனங்கள் விசேட சொற்பொழிவுகள், கவிதைகள், பாடல்கள் என்பன இடம்பெற்றன.

இந்து கலாசார நிதியம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்து பண்பாட்டு நிதியம் ஆக்கபூர்வமான பணிகளில் தமது பங்களிப்பினை நல்கி வருகின்றது.

- இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்குசீருடை வழங்கல்
- பூசை வழிபாடுகளின்றி புனரமைப்புச் செய்யாமல் இருக்கும் ஆலயங்களை இனங்கண்டு புனரமைத்தல். அவைகளுக்கு பூஜைப் பொருட்களை வழங்கல்.
- நலிவுற்ற கலைஞர்களின் கலாசார நடவடிக்கைகளுக்கு உதவுதல் போன்ற பணிகளை நிதியத்தினூடாக வழங்கி வருகின்றது.

கோவில் திருப்பணிகளுக்காகவும் இந்துசமய அபிவிருத்திக்காகவும் நிதியுதவி வழங்க விரும்பும் நலன்விரும்பிகள் இந்து பண்பாட்டு நிதியத்திற்கு நிதியுதவி வழங்கலாம்.

* விளக்குப் பூஜையின் தத்துவம்

இருளை அகற்றி ஒளியைத் தருவது விளக்கு. இருள் ஆபத்தையும் அறியாமையையும் குறிக்கிறது. நம் உள்ளத்தில் படிந்திருக்கும் அஞ்ஞான இருளை அகற்றி ஞான தீபத்தை ஏற்றுவதைத்தான் விளக்கு பூஜை குறிக்கிறது.

* வழிபாட்டின் பொழுது கற்பூர ஆர்த்தி எடுப்பது எதை குறிக்கிறது?

தூய கற்பூரம் எரிகையில் ஒன்றும் மிஞ்சாமல் ஆவியாகி விடுவதைப் போல நாமும் தூய பக்தியினால் ஒன்றும் மிஞ்சாமல் இறைவனுடன் லயமாகி விடவேண்டும் என்பதையே கற்பூர ஆரத்தி குறிக்கிறது.

பங்குனி உத்தரம்

சிவசக்தி சைவநெறியின் அடி நாதமாக விளங்கும் மகாதத்துவம். சக்தி பின்னமிலான் ஆக எங்கள் பிரான் விளங்குகின்றான். உலகியல் நோக்கிலும் ஆத்மீக நோக்கிலும் இத்தத்துவம் நிறைந்த கருத்துள்ளதாக மிளிர்கின்றது. சிவசக்தி சங்கமம் இருக்கின்றபடியினாலேயே இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சகலதும் இயங்குகின்றன. சிவமும் சக்தியும் இணைந்துள்ளமை எனும் தத்துவம். உலக இயக்கத்தின் தத்துவம். சிவமும் சக்தியும் இணைவதான ஒரு நிகழ்வாகப் பார்வதி., பரமேஸ்வரன் திருமண வைபவம் பங்குனி உத்தரநாள் அன்று நடத்தப்படுகிறது. எனவே பங்குனி உத்தர உற்சவத்தின் மகிமை. சிவ்சக்தி சங்கமம் அல்லது சிவசக்தி இணைப்பு என்னும் அரிய தத்துவத்தை உலகத்தவர்க்கு உணர்த்துவதாக உள்ளது.

உலகியல் ரீதியாகப் பார்க்கும் போது.திருமணம் என்பது ஆணும் பெண்ணும் பரஸ்பர அன்பு மேலீட்டினால் ஒத்த கருத்துடையவராகி சமத்துவத்துடன் நல்லறமாம் இல்லறத்தை மேற்கொள்வதற்குப் புகுமுகமாக அமைகின்றது. அதன் பின் கணவனும் மனைவியும் இல்லறத்தில் ஒருமுகம் கொண்டவராகவே திகழ்வர். சிந்தனை, பேச்சு, செயல் என்பன அனைத்தும் ஒரு முகமானவையாகவே அமையும். பேதங்களுக்கோ வேற்றுமைகளுக்கோ அங்கு இடம் இருக்காது அதனாலேயே இல்லறமல்லது நல்லறமன்று என்றார் ஔவைப்பிராட்டியார். பங்குனி உத்தரத்தன்று பரமேஸ்வரனுக்கும் பார்வதிக்கும் நடத்தி வைக்கப்படுகின்ற திருக்கலியாணவிழா உலகியல் வாழ்க்கையில் திருமணத்தின் புனிதத்தன்மையையும் அத்தகைய உலக வாழ்க்கையின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும்.தொடர்ச்சிக்கும் திருமணம் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் நமக்கு எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

ஆன்மீக நிலையில் பங்குனி உத்தரத் திருக்கலியாண விழாவினை நோக்கும் போது பசு ஆகிய ஆன்மா பதியாகிய சிவத்துடன் இணைவதான ஓர் உயர்நிலையினை எடுத்துக்காட்டுவதாக அவ் விழா அமைகிறது. சிவசக்தி சங்கமம் ஆன்ம ஈடேற்றத்தைக் குறிப்பதாக உள்ளது. சிவமும் சக்தியும் இணைந்துள்ளமை எனுந்தத்துவம் உலகம் நடைபெறுவதனை உணர்த்தும் தத்துவம். சிவம் இன்றேல் சக்தி இல்லை சக்தியின்றேல் சிவம் இல்லை. இவை இரண்டும் இணைந்து இல்லையேல் உலகஇயக்கமே இல்லை என்கின்ற பெரிய உண்மையை பங்குனி உத்தரத் திருக்கலியாண விழா காட்டுகிறது.

என்றுமே இணைபிரியாத சிவனையும் சக்தியையும் ஆடை அணிகளால் அழகுசெய்து மணவறையில் அமர்த்தி வாத்தியங்கள் முழங்க, வேதபாராயணம் ஒலிக்க, ஓமம் வளர்த்து, கோத்திரம்கூறி, கூறை உடுத்தி, மாலை அணிவித்து, பல்லோர் சாட்சியாகத் தாலிகட்டி, பல்வேறு உபசாரங்களும் வழங்கி, வாழ்த்துக்கள் கூறி அவர்களை திருமணக் கோலத்தில் கண்குளிரக் கண்டுகளித்து அருள்பெற்று அடியவர்கள் அகமகிழ்கின்றனர். திருஊஞ்சலில் இறைவனையும் இறைவியையும் அமர்த்தி பாட்டுப்பாடி ஆட்டுகின்றனர். அலங்கரித்த பூம்பல்லக்கில் இருவரையும் ஊர்வலம் கொண்டு வருகின்றனர். ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடிப் பரவுகின்றனர். வேண்டுதல் வேண்டாமை இலாத அக்கடவுளர்களுக்கு அன்போடு உபசாரங்கள் பல செய்து உவகை கொள்கின்றனர். என்றும் துயிலாத அம்மையப்பனை துயில்கொள்ள வேண்டி பள்ளியறையில் சேர்க்கின்றனர். அவை அனைத்தையும் மனிதர்களுக்குச் செய்யுமாப் போலப் பாவனை செய்து செய்கின்றனர். இச்செயல்கள் யாவும் தம் குழந்தையின் அறியாப்பருவ விளையாட்டுக்கள் என்பது அம்மைக்கும் அப்பனுக்கும் தெரியும். ஆயினும் தம்

குழந்தைகளின் அன்பிற்கும் ஆசைக்கும் பாசத்திற்கும் அடங்கியவர்களாகி. அவர்களின் குழந்தைத்தனமான செய்கைகளுக்கு இசைந்து கொடுத்து அவர்களின் தாளத்திற்கெல்லாம் ஆடி.அனைத்திலும் மனங்கோணாது பங்குபற்றி அடியார்களை மகிழ்விக்கின்றனர். பகுத்தறிவாளர்களுக்கு இச்செய்கைகளெல்லாம். நகைப்பிற்கிடமானவையாக இருக்கலாம். ஆனால் ஆழ்ந்து சிந்திப்பின் அர்த்தங்கள் பல புலப்படும். இவ்வாறு மாந்தர்கள் செய்வதால் வாழ்க்கையில் பூரிப்பும் நம்பிக்கையும் பெறுகிறார்கள். உலக வாழ்க்கைக்குத் தேவையான பாடங்களை இத்தகைய செயல்கள், அனுபவங்கள் மூலம் கற்றுக் கொள்ளுகிறார்கள். அதனாலேயே தேவ தேவியர். குழந்தைகளின் இவ்விளையாட்டுக்களில் தாமும் பங்குபற்றி உபசாரங்களையும் ஏற்று திருவருள் பாலிக்கின்றனர். பூமி மீனராசியில் சஞ்சரிக்கும் காலம் பங்குனி மாதம் சந்திரன் கன்னிராசியில் உத்தர நட்சத்திரத்துடன் சேர்ந்து பங்குனி மாதத்தில் வரும் நன்னாளே பங்குனி உத்தரத்திருநாள். இத்தினத்தில் பார்வதி சமேதராகப் பரமேஸ்வரனைத் திருமணக் கோலத்தில் தியானித்து விரதம் அனுட்டிக்கப்படும் புண்ணிய நாள். இவ்விரதம் திருமண விரதம் எனவும் கலியாண சுந்தரவிரதம் எனவும் போற்றப்படுகிறது. இவ் விரதத்தை மேற்கொள்பவர்கள் பகல் முழுவதும் உணவு உட்கொள்ளாமல் இருந்து இரவிலே பரமான்னமும் பழமும் உட்கொள்வர்.

நம்நாட்டில். சிவஸ்தலங்களில் திருக்கலியாணப் பெருவிழா பங்குனி உத்தரத்தன்று நடத்தப்படுகிறது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்களில் இவ்வுற்சவம் மிகச் சிறப்பாக ஆண்டுதோறும்.பங்குனி உத்தரத்தை இறுதியாகக் கொண்டு சிவாலயங்களில் கொடியேற்றத்துடன் மகோற்சவம் நடைபெறுகின்ற வழக்கமும் உண்டு. கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம், திருகோணமலை பத்திரகாளியம்மை ஆலயம் ஆகியவற்றில் இக்காலத்தில் மகோற்சவம் நடைபெறுகிறது. மதுரையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் பங்குனி உத்தரத்தில் நிகழ்த்தப்படுகின்றது.

பங்குனிமாதம் வேனிற்காலம் வெப்பமும் வரட்சியும் மிகுந்திருக்கும். நோய்களும் பரவும் காலம். இவற்றையெல்லாம் நிவிர்த்தி செய்து. மக்களைத் துன்பங்களிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் அம்பாள் ஆலயங்களில் பங்குனித் திங்கட்கிழமைகளில் குளிர்த்தி எனும் கிராமியப் பண்பாட்டுடனான பக்திவழிபாட்டு முறை அனுட்டிக்கப்படுகிறது. அபிடேகம், பொங்கல், படையல், பழமடை, நீர்ச்சோறு, தயிர்சாதம் என்பன அன்னைக்கு நிவேதனப் செய்யப்படுகின்றன. காரம், உறைப்பு, சூடு பொருந்திய தின்பண்டங்கள் சேர்த்துக் கொள்வதில்லை. மருத்துவ வசதிகளற்ற பழைய காலங்களில் தெய்வநம்பிக்கையே மக்களை நோய் பிணி துன்பங்களிலிருந்து பாதுகாத்து வந்துள்ளது.

ஆகமவிதிப்படி பங்குனி உத்தரத் திருக்கலியாண விழா சிவாலயங்களில் நிகழும் பக்தி முறைப்படி அம்பாள் ஆலயங்களில் பங்குனித்திங்களில் குளிர்த்தி வழிபாடு நடைபெறுகின்றது. அறிவுப் பெருக்கமும் அன்புப் பிரவாகமும் ஒன்றிக்கும் அருமையான கலாசாரத்தை இங்கு காண்கின்றோம்.

உற்சவம் என்பது உத்தமயாகம் எனவும் மேலான பஞ்சகிருத்தியம் எனவும் சிருஷ்டி மார்க்கத்தைக் குறிப்பது எனவும் போக மோட்சங்களைக் கொடுப்பது எனவும் பொருள்படும் என்று பெரியோர் கூறியுள்ளனர். சர்வதோஷ நிவிர்த்தியின் பொருட்டும் சர்வலோக சுகத்தின் பொருட்டும் எல்லோரையும் இரட்சித்தற் பொருட்டும் சர்வதேவப் பிரியமாகவும் சர்வப் பிராணிகளின் சுகத்தின் பொருட்டும் அரசர்களுக்கு வியஜ சித்தியின் பொருட்டும் உற்சவத்தைச் செய்க என்பது சிவவாக்கிய திவ்விய ஆகமங்களின் கூற்று.

பங்குனி உத்தரத்தன்று இறைவன் சந்நிதியில் எத்தனையோ திருமணங்கள் நிகழ்கின்றன. இத்தினத்தில் வேறு நாள் கோள் முகூர்த்தங்கள் பார்ப்பது கிடையாது. நம்பிக்கை மக்களை வாழ வைக்கின்றது. அது எப்படி மூட நம்பிக்கையாகும். நம்பிக்கையில் தளர்வு ஏற்படும் போதுதான் மக்கள் வாழ்க்கையிலும் தளர்ச்சி ஏற்படுவதைக் காண்கின்றோம். இதுவே உண்மை நிலை. இளைஞர்களும் கன்னிகளும் இத்தினத்தில் விரதம் அநுட்டித்து வழிபாடு செய்தால் அவர்களுக்குத் திருமணம் விரைவில் நிறைவேறுகின்றது. வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈவான் இறைவன். தேவர்களும் தெய்வநிலையில் உள்ளவர்களும் தேவதேவியரை வழிபட்டு இத்தினத்தில் விரதம் அநுட்டித்து வேண்டும் வரங்களைப் பெற்றுள்ளனர். திருமகள் மகாவிஷ்ணுவின் திருமார்பில் வீற்றிருக்கும் பேற்றினைப் பெற்றாள். இந்திரன் இந்திராணியை அடைந்ததும், பிரமன் சரஸ்வதியை நாவில் பெற்றதும் இவ்விரதத்தின் மகிமையால் என்று புராணங்கள் கூறுகின்றன.

சிவநேசர் என்பவர் திருமயிலாப்பூரில் வாழ்ந்து வந்த சிவபக்தர். அவரது புதல்வி பூம்பாவை திருஞானசம்பந்தருக்கு அவள் உரியவள் என்று எண்ணியிருந்த காலத்தில் பூம்பாவை பூக்கொய்ய நந்தவனம் சென்றபொழுது அரவம் தீண்டி இறந்துவிட்டாள். அவளின் உடலைத் தகனஞ் செய்து பெற்ற சாம்பரையும் எலும்பையும் பொற்குடத்திலிட்டு வைத்திருந்தார் சிவநேசர். திருஞானசம்பந்தரும் அவர் எதிர்பார்த்தபடி அவ்வூருக்கு வருகை தந்தார். அன்றை நாள் மயிலாப்பூர் கபாலீச்சுரருக்கு ஒன்பதாம் திருவிழா. அது பங்குனி உத்தரத்திருநாள். பொற்குடம் அங்கு வரவழைக்கப்பட்டது.

மலிவிழா வீதிமட நல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனியுத்தரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோபூம்பாவாய்

என்று தொடங்கும் திருப்பதிகத்தைத் திருஞானசம்பந்தர் பாடினார். பூம்பாவையும் விடம் நீங்கப் பெற்ற நிலையில் உயிர் பெற்றெழுந்தாள் இந்நிகழ்ச்சி சம்பந்தர் காலத்திலும் பங்குனி உத்தரவிழா சிறப்புற்று விளங்கியமையை தெளிவாகிறது ஒருமுறை ஈசனை நோக்கி "போகமும் யோகமும் எதிரும் புதிருமாக இல்லாமல் ஒன்றிய நிலையில் இருப்பது எப்படி?" என்று உமையவள் கேட்டாள். அதற்கு ஈசன் 'அடுத்தாகி உலகங்கள் யாவும் படைத்தவனாகிய என்னைப் பின்பற்றி நான் காட்டிய பாதையில் நடக்கின்றன. அஞ்ஞானத்தினால் பீடிக்கப்பட்டுள்ள மக்களுக்கு யோகநிலையையும் போகநிலையையும் கற்பிக்க நானே அவற்றை முன்மாதிரியாகச் செய்து காட்ட வேண்டியுள்ளது. இவர்கள் போகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள நான் முன்மாதிரியாக உன்னை மணந்து போகியாகக் காட்சியளிக்கிறேன். யோகசித்தி பெற்று மெய்ஞ்ஞான நிட்டை கூடி முத்தியை மக்கள் பெற்றுக் கொள்ள யோகியாகவும் நடந்து காட்டுகிறேன்' என்றார். ஈசன் அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பது தெளிவாகின்றது. பார்வதி பரமேஸ்வரனாக பங்குனி உத்தரத்-தினத்தன்று போக நாடகம் ஆடுவது மாந்தர்க்குப் போக ஞானத்தை -வாழ்வியல் நெறியை உணர்த்துவதற்காகத் தான் போலும் அதேவேளை யோக நாடகமாகவும் ஆத்மீக அடிப்படையில் கொள்ளலாம். போகமும் யோகமும் எதிரும் புதிரும் அல்ல. உலகியலும் ஆத்மீகமும் ஒன்றுக் கொன்று முரணானவையல்ல. இரண்டும் இணைந்தவை இணையக் கூடியவை. அறியாமையினால் மக்கள் வேறுவிதமாக இவற்றை நோக்குகிறார்கள். ஈசன் இரண்டிலும் இருக்கின்றான். இரண்டாகவும் இருக்கின்றான் என்பது இதன் தாற்பரியம்.

மனிதவாழ்க்கை உற்பத்தி முதற்கொண்டு இணைப்பிலேயே நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. உலகினை ஒன்றாகக் காண விழைவது சிவநெறி மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.என்பது சிவநெறியின் சீரிய குறிக்கோள். உலகம் யாவையும் தாமுளவாக்கி வேதப் பொருளாகி ஞானத்தின் திருவுருவாய்ப்

பொலிந்து கருணை வள்ளல்களாக இறைவனும் இறைவியும் நீக்கமற இணைந்து நிற்கும் சிவசக்தி தத்துவத்தின் காட்சி விளக்கமாகப் பங்குனிஉத்தரத் திருக்கல்யாணப் பெருவிழா துலங்குகிறது. ஒன்றாகி விட்ட உலகில் இன்பமே சூழும் எல்லோரும் வாழ்வர் சகல மக்களும் சீவராசிகளும் உய்வதற்குத் திருவருள் பாலிக்கும் அம்மையப்பனை போற்றி வழிபடுவோமாக.

கோயிலில் ஏன் காணிக்கை செலுத்த வேண்டும்?

அருகாமையிலுள்ள கோயிலில் ஒரு காணிக்கை செலுத்த வேண்டும் என்று பாட்டி சொல்லும் போது இறைவனிடமிருந்து ஏதோ பெறுவதற்காக பாட்டி செய்யும் தந்திரம் என்று குழந்தைகள் கேலிசெய்வது வழக்கம். ஆனால் இது கேலி செய்யத்தக்க வெறும் ஒரு தந்திரம் அல்ல. நம் முன்னோர்கள் இதையும் ஓர் ஆராதனையாகக் கருதியிருந்தனர்.

பொதுவாக ஒரு பால்பாயசம், விளக்கு, பூ அல்லது விளக்கிற்கான எண்ணை, முதலியவை காணிக்கையாக படைப்பது வழக்கம். ஒரு பொருத்தனை நேர்ந்து நிரந்தரம் பிரார்த்தனை செய்து இறைவனில் மையப்படுத்துவதன் விளைவாக பக்தனின் உள்ளத்தில் குடி கொள்ளும் ஜீவசக்தி உணர்வடைந்து நினைத்த வழிபாடை இறைவன் ஆசியால் நடத்த வல்லவனா-குகின்றான் என்று நம் முன்னோர்கள் பண்டைகாலத்திலே புரிந்து கொண்டிருந்தனர். பூஜைக்குத் தேவையான பொருள்கள் தேவனுக்கு காணிக்கையாகப் படைப்பதனால் படைப்பவர் தானும் பூஜையின் பாகமாக மாறுகின்றார்.

இந்த விஷயத்தில் மேல் நாட்டினர்களின் ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் நிரந்தரமான திட நம்பிக்கையால் எதையும் சாதிக்க முடியம், அதற்கான சக்தி மனிதனில் உண்டு என்ற உண்மை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வழிபாடுகள் வாயிலாக பக்தர்களுக்கு கிடைக்கப் பெறுவதும் இதுவே. நேர்ச்சைகள் நடத்தாதவர்களும் கோயிலில் பக்தியுடன் காணிக்கைகள் படைப்பதைக் காணலாம். இறைவன், அரசன்,குரு, குடும்பத் தலைவன் என்பவர்களைக் காண செல்லும் போது வெறும்கையுடன் செல்லாகாது என்ற பாரத நம்பிக்கை இன்றும் உறுதியாகச் செயல்படுகின்றது.

பால் குடம் எடுப்பது ஏன்?

ஸ்ரீலஸ்ரீ சுவாமி சத்தியானந்த சரஸ்வதி

மனிதர்கள் அனைவரும் நம்பிக்கையில் தான் வாழ்கிறார்கள். அந்த நம்பிக்கை இரண்டு வகைப்படும். முதலாவது தன்னுடைய முயற்சியினால்தான் நிச்சயமாக வெற்றிபெற முடியும் என்ற சுயநம்பிக்கை. ஒருவேளை சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் சில தோல்விகள் ஏற்படும்போது இவைகள் தெய்வ சக்தியிலாவது நடக்காதா? என்ற தெய்வத்தின் மீது நம்பிக்கை கொள்வது இரண்டாவது வகை. இவையனைத்தும் நடக்க வேண்டும் என்பதற்காக பிரார்த்தனை, பரிகாரம், பூஜை, விழா போன்றவற்றினை மனிதர்கள் செய்ய ஆரம்பித்தார்கள். நான் காவடி எடுக்கிறேன்,. பால்குடம் கொண்டு வருகிறேன், காணிக்கை போடுகிறேன், என்று நமது பிரார்த்தனைகளை இறைவனின் சந்நிதியிலே செலுத்த வைத்தார்கள் நமது பெரியவர்கள். இவைகள் நமது நலனுக்காக மட்டுமின்றி உலக நலனுக்காகவும் ஆகும். மெய்ஞ்ஞான ரீதியாக மட்டுமின்றி விஞ்ஞான ரீதியாகவும் இந்த பிரார்த்தனைகளுக்கு விளக்கங்கள் உள்ளன.

ஒருவன் பால்குடம் எடுக்கிறேன் எடுக்கிறேன் என்று பிரார்த்தனை செய்து கொண்டு அதனை செலுத்துகின்ற போது அந்தக் குடத்தை சுத்தம் செய்து அதேபோல தனது மனதையும் சுத்தப்படுத்திக் கொண்டு பக்தியுடன் அதனை தனது சிரசின்மீது வைத்துக்கொண்டு தன்னை மறந்த நிலையில் ஆலயத்தை நோக்கிச் செல்கிறான்.

மனம் ஒடுங்கி ஒருநிலைப்பட்டு பக்தியுடன் இறைவனை சிந்தித்தால் நாம் நினைத்த காரியங்கள் பலிதமாகும் என்பதற்கு இதிகாச புராணங்கள் மட்டுமின்றி பல பெரியோர்களது சரித்திரமும் சான்றாகும். அப்படிப் பார்க்கின்றபோது பால்குடம் எடுத்துப் போகின்ற நேரத்தில் மனம் உருகி ஆண்டவனை ஒரு நிமிடம் நினைத்தாலே அதற்குப் பலன் உண்டு அது பக்தியினுடைய விசேஷம். சப்த ரூப ரச கந்த ஸ்பரிசம் என்ற பஞ்ச தன் மாத்திரைகள் உண்டு. சப்தம் என்று சொல்கின்றபோது ஒலி அந்த ஒலிகளால் ஏற்படக்கூடிய மனது பழக்கம். அடுத்தது: ரூபம். அதுதான் இந்த பால்குடம். அதற்கு மாலை போட்டு அலங்காரங்கள் செய்கிறோம். அதற்கடுத்தது ரசம் சுவையான சுத்தமான பாலாக இது இருக்கிறது. பிறகு கந்தம். அதிலே பன்னீர் தெளிக்கிறோம். ஜவ்வாது அத்தர் போன்றவற்றைப் போடுகிறோம். சாம்பிராணி கற்பூரம் காட்டுகிறோம் அந்த சூழ்நிலையில் ஏற்படக்கூடிய மனத்தைக் குறிக்கிறது. இறுதியாக ஸ்பரிசம்.மேலே கூறப்பட்ட ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதனை தனது கரத்தினாலேயே எடுத்து தனது சிரசின்மீது வைத்த உடனேயே அந்த பக்தனுடைய பக்திப் பிரவாகமானது அளவு கடந்து சென்று தன்னைத் தானே மறக்கின்ற நிலை ஏற்படுகிறது.

அந்த நேரத்தில் அவனுக்கு அவனது இல்லத்தைப் பற்றியோ இல்லத்தரசி ஈன்ற மக்கள் நடந்தது, நடப்பது,-நடக்கப் போவதைப் பற்றிய கவலைகள் எள்ளளவும் கிடையாது. ஆண்டவனைப் பற்றிய எண்ணத்தைத் தவிர வேறு எந்தவித மனச்சூழ்நிலைகளினாலும் அவன் ஆட்படாமல் செல்கின்றபோது அருள் வந்துவிட்டதாகவும் அவன் ஆடுகிறான். அதனுடைய தத்துவம்தான் அகம்பிரம்மாஸ்மி. பால்குடத்தை எடுத்துச் சென்று ஆலயத்தினுள்ளே இருக்கும் ஆண்டவனின் விக்ரகத்தின் மேலே ஊற்றுகின்றனர். பிராண பிரதிஷ்டை செய்த விக்ரகத்தின் மேலே தாமிரத்தினாலான தகடுகளைப் பெரியவர்கள் ஸ்புடம் செய்து வைத்திருக்கிறார்கள். அதுசரி, இதற்குப் பால்தான் ஊற்ற வேண்டுமா? ஏன் பாலை ஊற்ற வேண்டும்? சித்த வைத்திய முறைகளில் பார்த்தோமேயானால் சில முக்கியமான

பசும்பாலில் கலந்து குடிக்கச் சொல்கிறார்கள். சாதாரணமாகவே நல்ல பசுவின் பாலிற்குப் பிணிகளைப் போக்கக்கூடிய சக்தியும் உண்டு சத்தும் உண்டு. அப்படிப்பட்ட பசும்பாலை விக்கிரகத்தின்மீது ஊற்றும் போது முதலில் சிரசின்மீது பட்டு முடிவில் பாதத்தில் வழிகிறது. அதை நாமும் சாப்பிடுகிறோம். மற்றவர்களுக்கும் கொடுக்கிறோம். அதனால் நமது பிரார்த்தனை பலனளிக்கப் போகிறது என்ற நம்பிக்கையும் அந்தப் பிரார்த்தனை செயல் படுவதற்கான சக்தியும் வந்துவிடுகிறது.

இதனை தத்துவரீதியாக ஆராய்ந்து பார்க்கின்றபோது. குடம் என்று சொல்வது மனிதனுடைய சரீரம். குடம் போட்டால் உடைந்துவிடும். மனது கெட்டால் மனிதன் அழிந்துவிடுவான். பசு என்று சொன்னால் ஆன்மா. ஆன்மாவிலிருந்து சுரக்கின்ற உண்மையான வெண்மையான தன்மையான பாலை சரீரம் என்று சொல்லப்பட்ட குடத்தில் கொண்டு வந்து நம்பிக்கை என்ற பலத்திலே தெய்வம் என்று சொல்லப்படுகின்ற பிரம்மத்திற்கு அர்ப்பணிக்கிறார்கள். இப்படிப் பால்குடம் எடுக்கிற பக்தனுக்கு, ஒரு ஞானி அடைய முடியாத சத்தும்-சித்தும்-ஆனந்தமும் கலந்த சச்சிதானந்த நிலை கிடைத்துவிடுகிறது. ஆண்டவனுக்காக வேண்டிக்கொண்ட பிராத்தனை என்ற சத்தும் அதனை சுமப்பதால் ஏற்படும் சித்தும் அபிஷேகத்தால் ஏற்பட்ட திருப்தி என்ற ஆனந்தமும் நிச்சயமாக அவன் நினைத்துள்ள நல்ல எண்ணங்களை நல்ல காரியங்களை நடத்தி வைத்துவிடுகிறது.

கோவிலில் பிரசாதம் எதற்காகக் கொடுக்கப்படுகிறது?

பூஜைக்காக நாம் கோவிலுக்கு கொண்டு செல்லும் தேங்காய், பழம், பூ, வெற்றிலை, பொங்கல் போன்ற பல்வேறு பொருட்கள் இறைவனுக்கு நிவேதனம் செயயப்பட்டபின் பிரசாதம் என்றே அழைக்கப்படுகின்றன. உலகில் உள்ள அத்தனைப் பொருட்களும் இறைவனின் படைப்பே. ஆகையால் இறைவனால் படைக்கப்பட்டதை அவனை நினைவு கூர்ந்து அவனுக்கு அளித்து பக்தியுடன் பிரசாதமாக ஏற்கவேண்டும் என்பதைத்தான் பிரசாதம் குறிக்கிறது. எந்தப் பொருளும் பக்தியுடன் இறைவனுக்குப் படைக்கப்படுகையில் பிரசாதம் என்ற புனிதமான நிலையை அடைவது போல எத்தகைய மனப்பாங்கு படைத்த மனிதனும் பக்தியுடன் தன்னை பகவானுக்கு ஒப்படைத்தால் இறை அருளைப் பெறலாம் என்பதை பிரசாதம் குறிக்கிறது. உண்மையான பிரசாதம் மன அமைதியே ஆகும் "ப்ரஸாத மன ஸௌம்யத்துவம்" என்கிறது பகவத்கீதை.

ஜனாதிபதியின் அலரி மாளிகையில் நடைபெற்ற பொங்கல் நிகழ்வுகள்

ஆலயங்களுக்கான நிதியுதவி வழங்கும் வைபவத்தில் மத விவகார அமைச்சர் கௌரவ பண்டுபண்டாரநாயக்க அவர்கள் உரையாற்றுகின்றார்.

கௌரவ அமைச்சர் அறநெறிப்பாடசாலை பிரதிநிதிகளுக்கு சீருடை உபகாரணங்களை வழங்குவதை படத்தில் காணலாம்.

ஆலயங்களுக்கான நிதியுதவி வைபவத்தின்போது உதவிப் பணிப்பாளர் திரு. சீ. தெய்வநாயகம் அவர்கள் உரையாற்றுவதையும் திணைக்களப் பணிப்பாளர், கணக்காளர் ஆகியோர் அருகில் அமர்ந்துள்ளதையும் படத்தில் காணலாம்.

நூலகங்களின் நூற்பொதிகள் வழங்கும் வைபவத்தில் அமைச்சின் செயலாளர் பொது நூலகத்தின் பிரதிநிதியொருவருக்கு நூற் பொதியை வழங்குவதனை படத்தில் காணலாம்.

சமய விவகார அமைச்சின் செயலாளர் திரு. எச் எம் ஹேரத் அவர்கள் இந்து சமய பொது அறிவுப் போட்டி பரீட்சையில் (2007) மத்தியபிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவிக்கு பரிசில்களை வழங்குவதனை படத்தில் காணல-

இந்துசமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் இந்து சமய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிக்கு பரிசில்களை வழங்கினார்.

இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவத்தில் வரவேற்புரையை உதவிப்பணிப்பாளர் திரு.வை. அநிருந்தன் வழங்குவதனையும், அருகில் சுவாமி சர்வ ரூபானந்தஜிஇ மதவிவகார அமைச்சின் செயலாளர் திரு. எச்.எம். ஹேரத் திணைக்கள பணிப்பாளர் உதவிப்பணிப்பாளர் ஆகியோர் அமர்ந்துள் -ளதையும் காணலாம்.

கொழும்பு இராமகிருஸ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற பண்ணிசைக் கருத்தரங்கில் உதவிப் பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் தலைமையுரையினை நிகழ்த்தினார்

விரிவுரையாளர் திரு நாகராஜன் பண்ணிசைப் பயிற்சி வழங்குவதனையும், பயிற்சியில் கலந்துகொண்ட அறநெறி ஆசிரியர்களையும் காணலாம்.

புதிய கதிரேசன் மண்டபத்தில் நவராத்தி விழாவில் நடைபெற்ற திரு.சு.ஆருரன் அவர்கள் இசைக்கச்சேரி வழங்கியதைப் படத்தில் காணலாம்.

வவுனியா குட்செட் கருமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை நிகழ்ச்சி

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொண்டாடப்பட்ட வாணி விழா

நூணாவில் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பூசை

வடமராச்சி கற்கோவளம் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கரகாட்டம்

பொங்கல் விழா நிகழ்வுகள்

அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவின்பொழுது தோரணம் பின்னும் போட்டியில் பங்குபற்றிய அறநெறிப்பாடசாலை மாணவர்கள்

வடமராட்சியில் மாவட்டத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவின்பொழுது அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வு



யாழ் மாவட்டத்தில் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்ற பொங்கல் விழா நிகழ்வுகள்

அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற பொங்கல் விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடைபெற்ற மாட்டுப்பொங்கல் விழா

யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடைபெற்ற பொங்கல் விழா

யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவின்போர் இடம்பெற்ற

மட்டக்களப்பு மாவட்ட இந்து கலாச்சார நிலையத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவின் பொழுது அறநெறிப் பாடசாலை மாணவியரின் நடனம்

தைப்பொங்கல் நிகழ்வுகள் (நீர்கொழும்பு)

சர்வதாரி தமிழ் புதுவருடப்பிறப்பும் சுபகருமங்களும்

புதுவருடம்

தமிழ்ப் புதுவருடம் சர்வதாரி வருடம் என அழைக்கப்படும் இது 60 வருடச்சுற்று வட்டத்தில் 22வது வருடமாகும்.

சர்வதாரி வருடம் சித்திரை மாதம் முதலாம் திகதி (13.04.2008) ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணி 29 நிமிடத்தில் புதுவருடம் பிறப்பதாகத் திருக்கணிதப் பஞ்சாங்கம் கூறுகின்றது. வாக்கிய பஞ்சாங்கம் பிற்பகல் 4மணி 56நிமிடத்தில் சர்வதாரி வருடம் பிறப்பதாகச் சொல்கின்றது. பூரம் நட்சத்திரம் பூர்வபக்கத்து நவமி திதி சித்த யோகம் துலாம் லக்கினத்தில் சர்வதாரி வருடம் பிறக்கின்றது.

மருத்துநீர்

13.04.2008 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணி 29நிமிடம் தொடக்கம் இரவு 10மணி 29நிமிடம் வரையுள்ள புண்ணியகாலத்தில் மருத்துவ மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருத்துநீரைத் தலையில் இலவம் இலையும் காலில் விளாவிலையும் வைத்து பெரியவர்களைக் கொண்டு தேய்ப்பித்துக் ஸ்நானம் செய்தல் வேண்டும். கிழக்கு அல்லது வடக்குப் புறமாக நின்று மருத்துநீர் தேய்ப்பித்தல் வேண்டும்.

புத்தாடை

மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்தபின் சிவப்புநிறப் பட்டாடை அல்லது சிவப்புக்கரை வைத்த புதிய ஆடைகளைத் தரித்தல் சிறப்பானது.

தெய்வவழிபாடு

விநாயகர் முதலிய இஷ்ட குலதெய்வங்களை வணங்கி ஆலயங்களுக்குச் சென்று பூசை வழிபாடுகள் செய்து இறைவனை அல்லது இறைவியை வழிபட்டு அவர்களது இன்னருள் பெறுதல் வேண்டும்.

நல்லாசி பெறுதல்

சூரியனுக்குப் பொங்கலிட்டு வழிபட்டபின் குரு, பெற்றோர் பெரியோர்களிடம் நல்லாசி பெற்றுக் கொள்ளுதல் அவசியம்.

உணவு

பொங்கல், வேப்பம்பூ, இஞ்சி, மிளகு, தயிர் முதலியவைகள் சேர்ந்த அறுசுவை உணவை உட்கொள்ளுதல் சிறப்புத்தரக்கூடியது.

கைவிஷேடம் பெறுதல்

14.04.2008 திங்கட்கிழமை பகல் 12மணி 26 நிமிடம் தொடக்கம் பி.ப.2மணி 42நிமிடம் வரையள்ள சுபநேரம் உற்றார் உறவினர்களுக்குக் கைவிஷேடம் வழங்குவதற்கும், பெரியோர்களிடமிருந்து கைவிஷேடம் பெறுவதற்கும் சிறந்த சுபநேரமாகும்.

அருணந்தியின் விளக்கம்

சித்தாந்த வளர்ச்சியும் பிறசமய நெறிகளும்

முனைவர் டி.பி சித்தலிங்கம்

பிரம சூத்திரத்தைப் போலவே சுருங்கிய வடிவிலமைந்த சிவஞான போதம் சைவசித்தாந்த நெறியின் கோட்பாடுகள் அனைத்தையும் முறையாகவும் படிப்படியாகவும் எடுத்துக் கூறியது. முன்னாளிலிருந்த புலவர்கள் கோட்பாடுகளையும் வாதங்களையும் சுருங்கிய சூத்திரங்களில் எடுத்துக் கூறியது போல அவ்விலக்கிய மரபு கெடாமல் மெய்கண்டாரும் அதே முறையைப் பின்பற்றினார். ஒரு நீண்ட விவாதத்தை அடுத்தே அதன் முடிவுகளைத் தெரிவிப்பதாகச் சூத்திரம் அமைகிறது. சமய சாத்திரம் ஒன்றை விருத்தப்பாவில் முதல் முதலாக எடுத்துக் கூறிய பெருமை சிவாசாரியரையே சாரும்.தம் ஆசிரியர் கூறியவற்றை அவர் விரிவாக்கி எடுத்து விளக்கினார் என்பதே பொருந்தும்.

அருணந்தி சிவாசாரியாரைப் பற்றி மரபு வழிக் கதை கூறுவதாவது அருணந்தி சிவாசாரியருடைய மற்றொரு பெயர் திருத்துறையூர் சதாசிவ சிவாசாரியர் என்பதாகும். வேதங்கள், ஆகமங்கள், பன்னிரு திருமுறைகள் ஆகியவற்றில் மிகச் சிறந்து விளங்கியமையால் அவர் சகலாகம பண்டிதர் என்று வழங்கப்பட்டார். அவர் மெய் கண்டாரின் குலகுருவாக விளங்கியவர். மெய்கண்டாரின் தந்தையார் ஆகிய அச்சுதகளப்பாளர் தமக்குக் குழந்தையில்லாத குறையை அவரிடம் கூறினார். அவர் திருமுறையில் கயிறு சார்த்திப் பார்த்து திருவெண்காட்டில் திருமுக்குளநீரில் மூழ்கி இறைவனை வழிபட்டால் குழந்தை பிறக்கும் என்றார். அவ்வாறு செய்த பிறகு தோன்றிய குழந்தைக்கு அவ்வூர் இறைவன் பெயராகிய சுவேதவனப் பெருமாள் என்பது சூட்டப்பட்டது. அவரே பின்னர் மெய்கண்டார் ஆயினார்.

சகலாகம பண்டிதர் நீண்ட நாட்களாகத் தம்மை வந்து காணாதிருந்த சீடரைப் பார்ப்பதற்காக அங்கே சென்றார். அப்போது மெய்கண்டார் ஆணவ மலத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். சகலாகம பண்டிதர் தம்முடைய கல்விப் பெருமையால் அவரை நோக்கி ஆணவத்தை விளக்குமாறு கேட்டார். மெய்கண்டார் சகலாகம பண்டிதரையே சுட்டிக்காட்டினார். இதுவே பின்னவருக்குக் கிடைத்த குரு உபதேசம் ஆயிற்று. குலகுருவாக விளங்கி வந்தவர் தம் சீடருக்கே மாணவரானார். அவர் பெயரே பின்னர் அருணந்தி சிவாசாரியார் என ஆயிற்று சைவாகமங்களை ஆழ்ந்து பயின்ற ஒருவர். அவ்வாகமங்களை ஐயந்திரிபற அறிந்து கொள்ளக் குரு உபதேசம் தேவைப்பட்டது. அவர் எழுதிய நூல்களாகிய சிவஞான சித்தியாரும் இருபா இருபஃதும் அவரது ஆகம அறிவின் பரப்பையும் ஆழத்தையும் எடுத்துக் காட்டுகின்றன. இப்பயிற்சியால்தான் வேதங்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்கிற சமயங்களுக்கும் அவற்றை ஏற்றுக் கொள்ளாத சமயங்களுக்கும் சைவ சித்தாந்தத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அவரால் நன்கு எடுத்துக் கூற முடிந்தது.

சிவஞான சித்தியார் பரபக்கம் (பரபட்சம்) சுபக்கம் (ஸ்வபட்சம்) என்னும் இருபகுதிகளைக் கொண்டது பரபக்கம் வேற்றுச் சமயக் கருத்துக்களையும் எடுத்துக்கூறி பிறகு அவற்றை மறுக்கிறது அவ்வாறு மேற்கொண்டு பிறகு மறுத்துரைக்கப்படும் சமய நெறிகளாவன(1) உலகாயதம் (2)நால்வகை பௌத்தம் அவையாவன: சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்மியகம், வைபாடிகம் (வைபாஷிகம்)(3) இருவகைச்சமணம்-அவையாவன நிகண்டவாதம் ஆசீவகம் (4)மீமாம்ச நெறியின் இரு பிரிவுகள் அவையாவன: பட்டாசாரியன்

மதம், பிரபாகர மதம் (5) ஏகான்ம வாதத்தின் முப்பிரிவுகள் அவையாவன: சுத்தப் பிரம்ம வாதம், மாயா வாதம், பாஸ்கரிய வாதம் (6)சாங்கியம் (7) வைணவர்களின் பாஞ்சாரத்திரம்

சைவ சித்தாந்தத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு அதிலிருந்து விலகி இருக்கின்ற இடைவெளியின் அடிப்படையில் அருணந்தி சிவாச்சாரியர் இந்தச் சமய நெறிகளை அமைத்திருக்கிறார். கடவுளை ஏற்றுக் கொள்ளாத சமயங்கள் முதலில் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. கடவுளுக்கு வேறாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருள்கள் உலகப் பொருள்கள் (உலகாயதம்)விதி (பௌத்தம்) கருமம் (சமணம்) ஊழ்(ஆசீவகம்)-இவை ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பரிசீலனை செய்யப்பட்டுப் பிறகு மறுத்து ஒதுக்கப்படுகின்றன. சநாதன நெறியின் பூர்வ மீமாம்சை கடவுளை ஏற்றுக் கொள்வதில்லை. எனவே அது அடுத்தபடியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. வேதங்களை ஏற்றுக்கொள்வதும் மறுப்பதும் இச்சமயங்களின் வேற்றுமையாக அமைகிறது. வேதங்கள் முத்திக்கு வழி காட்டுகின்றன. வழி காட்டுபவன் இல்லாமல் வழியை அறிதல் இயலாது. முதல் மூவகை நெறிகளும் வேதங்களை இறைவன் அருளியதாக ஏற்றுக் கொள்கின்றன. கடவுளை மையமாக வைத்து வேதங்களை ஏற்றுக் கொள்வதனால் இறைவன் அருளிய பிற நூல்களையும் வேதங்களுக்கு இணையாக ஏற்றுக் கொள்ளவேண்டும். வைணவர்கள் வேதங்களை ஓத்துக் கொள்வதோடு பாஞ்சராத்திரத்தையும் ஒப்புக் கொள்கிறார்கள். எனவே அது இறுதியாகப் பரிசீலிக்கப்படுகிறது.

சிவஞான சித்தியாரின் பரபக்கத்தில் இந்தப் பதினான்கு சமயப் பிரிவுகளின் கொள்கைகளையும் அவற்றிற்குச் சைவ சித்தாந்திகள் கூறும் மறுதலையையும் காணலாம். சித்தியார் சுபக்கத்துக்கு உரையெழுதிய அறுவரில் ஒருவரான மறைஞான சம்பந்தர் இப்பரபக்கம் பின்வரும் நூல்களின் அடிப்படையில் எழுதப்பட்டது என்று கூறுகிறார். (1) சங்கராசாரியார் இயற்றிய சர்வ தரிசன சங்கிரகம் (2)சர்வ மதோபந்நியாசம் (3)இராமநாதாசாரியர் இயற்றிய பரமத நிராகரணம் (4) சர்வாத்ம சம்பு இயற்றிய சித்தாந்த தீபிகை (5) அகோர சிவாசாரியர் இயற்றிய சித்தாந்தார்த்த சமுச்சயம். இந்தப் பதினான்கு நெறிகளும் புறச்சமயத்தைச் சார்ந்தவை. அருணந்தி செய்து காட்டிய இதே முறையைப் பின்பற்றி உமாபதி சிவாசாரியரும் தமது சங்கற்ப நிராகரணத்தில் அகச்சமயப் பிரிவுகளின் கொள்கைகளை எடுத்துக் கூறி மறுக்கிறார்.

அருணந்தி சிவாசாரியர் தமது சிவஞான சித்தியாரில் சைவசித்தாந்த நெறியின் கொள்கைகளை எடுத்து விளக்கி இருக்கிறார். அதே நேரத்தில் பிறசமய நெறிகளை மறுத்திருக்கிறார். அவற்றை ஒருசேரச் சொல்லாமல் நூலினை இரு பகுதிகளாக்கி முதல் பகுதியில் பிறசமயங்களை மறுத்தும் இரண்டாம் பகுதியில் சைவ சித்தாந்த நெறிகளை விளக்கியும் முதற்பகுதியில் எழுப்பிய வினாக்களுக்கு விடையளித்தும் பிறநெறிகளில் இல்லாத கருத்துக்களை இட்டு நிரப்பியும் விளக்குகிறார். இந்த இரண்டு பகுதிகளும் தனித்தனியே கடவுள் வாழ்த்தைப் பெற்று இரண்டு தனி நூல்களைப் போலிருந்தாலும் இரண்டும் பிரிக்க முடியாத ஒரு முழுமையான நூலினைப் போல் உள்ளன.

அதாவது பரபக்கத்தின் தொடர்ச்சியாக உள்ள சுபக்கம் ஒரு தனி நூலாகவே அமைந்துள்ளது. மெய்கண்டான் நூல் சென்னியில் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றாம் என்று கூறியவாறே அருணந்தி இந்நூலைச் சிவஞான போதத்தின் அடிப்படையில் அமைத்திருக்கிறார். சிவஞான சித்தியார் சிவஞான போதத்துக்குச் செய்யுள் வடிவிலமைந்த ஓர் உரையாக அமைந்திருந்தாலும் அதனை வழிநூலாகவே சைவ மரபு ஏற்றுக் கொண்டிருக்கிறது. என்றாலும் அதில் ஓர் தனித்தன்மையும் சுயேச்சையான கட்டமைப்பும் உண்டு. அளவையியல் முதலில் கூறத்

தொடங்கியிருப்பது அந்நூலாசிரியர் அளவையின் அடிப்படையில் அமைந்ததொரு தேர்ந்த நெறி சைவ சித்தாந்தம் என்பதை நிருபிக்கும் வகையில் அமைந்துள்ளது.

சிவஞான சித்தியார் என்னும் தலைப்பே முதல் நூலாகிய சிவஞான போதத்திலிருந்து எடுக்கப்பட்டதாம்.சிவஞான என்பது வழியுமாய்ப் பயனுமாய் அவற்றை அறியும் அறிவுமாய் சிற்றறிவாய் (அபரஞானம்) முத்தியாய் (பரஞானம்) அமைந்தது. சித்தி என்பது உண்மைப் பொருளை நிறுவுதல் ஆகும் (இதனை உண்மை சாதித்தல் என்று தாயுமானவர் எந்நாட்கண்ணியில் குறிப்பிடுகிறார்). ஆகவே இந்நூலின் தலைப்பு சைவாகமங்களில் உள்ள பல்வேறுபட்ட ஞான பாதக் கருத்துக்களின் உண்மைப் பொருளை ஆய்ந்து நிறுவுதல் என்று பொருள்படும்.

இந்நூலின் சிறப்புக்களாவன:

(1) அளவை இயல் இதில் அளவைகள் விளக்கப் படுகின்றன.
(2) சிவபெருமான் பெருமை நிறுவப்படுகிறது.

சிவன் ஆறு சமயங்களின் தலைவன் ஒவ்வொரு சமயத்திற்கும் தனித்தனியே உண்மைப் பொருளானவன். வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் அப்பாற்பட்டவன்.

அறிவின் ஊற்றுக்கண் அம்மையும் அப்பனுமாய் எங்கும் நிறைந்திருக்கிறான். எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர் மற்றைத் தெய்வங்கள் வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையும் செய்யும் (செய்யுள115) ஆனால் சிவனோ இவை இல்லாதவன் (3)சைவ நெறியின் பெருமை பேசப்படுகிறது. புறச்சமயங்களில் சில அகச்சமயத்தில் புகுந்து பின்னர் ஸ்மிருதிகள் கூறும் வழிகளில் அலைந்து திரிந்து ஆச்சிரமப் பிரிவுகளுள் அடைந்து தவங்களை இயற்றி பல்வேறு கலைகளில் தேர்ந்து வேதங்களையும் புராணங்களையும் ஓதி உபநிடதப் பொருள்களை உணர்ந்து இவ்வாறு பல்வேறு படிகளில் ஏறிப் (பல்வேறு பிறவிகளில்) பிறகே ஒருவன் சித்தாந்த மென்னும் உச்சியை எட்டமுடியும்.அங்குச் சரியை கிரியை யோகம் என்பவற்றை இயற்றி முடிவாகச் சிவநெறி எய்துவான் (263) பிற சமயங்களும் முத்தி பற்றிக் கூறுகின்றன. சைவ சித்தாந்தம் ஒன்று மட்டுமே சிவனடியைச் சேரும் முத்தியை கூறுகின்றது.(254) உலகில் பேசப்படும் சமயங்களும் அவற்றின் உண்மைகளும் அவற்றை உணர்த்தும் நூல்களும் ஒன்றோடொன்று மாறுபட்டனவாய் உள்ளன. எனின் இவற்றுள் சிறந்த சமயம் எது? சிறந்த நூல் எது? இது பொருந்தும் இது பொருந்தாது என்னும் கலக்கம் இன்றி எல்லாக் கொள்கையும் தத்தமக்குரிய இடத்தில் முறையாகத் தன்னிடத்தில் நிறகப் பெறும் சமயம் எதுவோ அதுவே உண்மைச் சமயம். அதன் கொள்கைகளைக் கூறும் நூலே உண்மை நூல். இச்சமயக் கொள்கைகள் யாவும் வேதம், ஆகமம் என்னும் இரண்டில் அடங்கும் (265), நால்வகை நெறிகளாகிய சன்மார்க்கம், தாசமார்க்கம், சத்புத்ரமார்க்கம், சகமார்க்கம் ஆகியன இந்நூலில் விளக்கப்படுகின்றன.(270-274).

இந்நூலின் பெருமையை உணர்ந்த அறிஞர்கள் இதற்கு உயர்வுப் பன்மை விகுதியாகிய ஆர் என்பதைச் சேர்த்து சிவஞான சித்தியார் என்று வழங்கினார்கள். தருமபுர மடத்தை நிறுவிய குருஞான சம்பந்த சுவாமிகள் 'பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியின் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்' என்று இதன் பெருமையைக் கூறினார். இதே கருத்தைத் தாயுமானவரும் 'பாதி விருத்தத்தால் இந்தப் பார்விருத்தமாக உண்மை சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவதெந்நாளோ' என்று கூறி வியந்தார். தமிழ் மொழியின் பெருமையையும் சிறப்பையும் புலப்படுத்தும் ஆறு நூல்களுள் சிவஞான சித்தியார் ஒன்று ஆகும் இந்நூல் சிறந்தது என்பது சிவனுக்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை சித்தியாருக்கு மிஞ்சிய

சாத்திரமுமில்லை என்ற பழமொழியால் உணரத்தகும்.

சிவஞான சித்தியார் தத்துவ விளக்க நூல் மட்டுமின்றி ஓர் இலக்கிய நூலுமாகும். அருணந்தி ஓர் தத்துவ அறிஞராகவும் கவிஞராகவும் திகழ்கிறார். தமிழ் மொழியில் தத்துவத்தைப் பற்றிய மிக விரிந்த செய்யுள் நூலாக இது விளங்குகிறது. நூலில் மொழி அமைதி சொல்லமைப்பு. உவமை நலம் முதலியன மிக்கு விளங்குகின்றன.

சுபக்கத்திற்குப் பின்வரும் உரைகள் கிடைக்கின்றன.(1) சுவாமி ஞானப்பிரகாசர் உரை(2) வெள்ளியம்பலத்தம்பிரான் சுவாமிகள் உரை (3)நிரம்ப அழகியதேசிகர்உரை(4)மறைஞான தேசிகர் உரை(5)சிவாக்கிரயோகிகள் உரை (6)சிவஞான சவாமிகள் உரை (7) சுப்பிரமணியதேசிகர் உரை (இது சிவஞான சுவாமிகள் உரைக்கு விளக்கமாக அமைந்துள்ளது) இவையனைத்தும் அறுவர் உரை என்னும் பெயரில் வெளியாகியுள்ளன.

சிவஞான சுவாமிகள் உரையை விரிவாக்கி முத்தையா பிள்ளை எழுதியிருக்கிறார். எம். திருவிளங்கம் என்பார் எழுதிய உரையும் இந்நூலுக்கு உண்டு. இவற்றோடு தூத்துக்குடி சிவகுருநாத பிள்ளை எழுதிய சிவஞான சித்தியார் ஆராய்ச்சி (1949) டாக்டர் வ.ஆ.தேவசேனாபதி எழுதிய சைவசித்தாந்தம் (ஆங்கில நூல் 1960) ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். டாக்டர் கி. சிவராமன் சுபக்கத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். திரு B.D. ஜெயின் இந்தியில் தந்துள்ளார். இவையிரண்டும் காசி மடத்தின் வெளியீடுகள்.(1949)

அருணந்தி சிவாசாரியர் இயற்றிய மற்றொரு சாத்திர நூல் இருபா இருப..து இதில் 20 செய்யுட்கள் உள்ளன. ஒற்றைப்படை எண்ணுள்ளவை வெண்பா யாப்பிலும் இரட்டைப்படை எண்ணுள்ளவை ஆசிரியப்-பாவிலும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. இந்நூலில் தமது குருவாகிய மெய்கண்டதேவரை சிவபெருமானாகவே கொண்டு சிவனுடைய பெருமைகளையும் செயல்களையும் அவர் மீது ஏற்றிப் பாடியிருக்கிறார் சிவஞான சித்தியாரில் கூறிய குரு வணக்கத்தால் மனநிறைவடையாத அருணந்தி இந்நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் மெய் கண்டார் எனும் பெயர் வருமாறு அமைத்து அமைதி கண்டார் என்று கூறுவர்?.

ஆணவமலம், மாயமலம், கன்மமலம் ஆகியவற்றை இருபா இருபது விளக்குகின்றது. ஆணவத்தின் எட்டு குணங்களும், மாயையின் ஏழு தன்மைகளும், கன்மத்தின் ஆறு இயல்புகளும் எடுத்து விளக்கப்பட்டுள்ளன. தேவாரத்தில் காணப்படும் சில தொடர்கள் இந்நூலில் மிக அழகாக விளக்கப்பட்டுள்ளன. அதே பகுதியில் சில வினாக்களும் எழுப்பப்பட்டுள்ளன. இறைவன் உயிருடன் பிரிவற இருந்தால் ஆணவம் எவ்வாறு உயிரைப் பற்றியது? உயிர் இறைவனைப் பற்றியிருந்த போது ஆணவம் அங்கு இல்லை என்பது ஆகுமா? குரு உபதேசத்தின் போது, இறைவன் எங்கே இருக்கிறான்? எவ்வாறு இருக்கிறான்? உயிரின் வேறாகவா, ஒன்றாகவா?

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களின் செயல்கள் விரிவாகப் பேசப்படுகின்றன. தனிப்பட்ட தன்மை, வேட்கை, விரும்பியது கிட்டாதபோது உண்டாகும் கோபம், ஆணவம், இன்பதுன்ப நுகர்ச்சி இவை ஆணவத்தின் விளைவுகளாகும். குழப்பம், பொய்மை, மறதி, பொறாமை, அச்சம் முதலியவை மாயையின் செயல்களாகும். இருத்தல், உறங்கல், செயல் மேற்செல்லல், பிறரைப் பழித்தல் முதலியன கன்ம மலத்தால் நிகழ்பவை. மலங்கள் அறிவற்றவை. எனவே அவை எவ்வாறு உயிரைக் கட்ட முடியும்? நஞ்சு தன் பணியைச் செய்து முடித்தவுடன் உடலை விட்டகலும். அதுபோல இவையும் நீங்க வேண்டும் என்கிறார் ஆசிரியர். இவை அறிவற்றவை ஆகவே கட்ட மாட்டா. உயிர்தானே கட்டுப்படாது. இறைவன் அநாதி முத்தன் (என்றுமே கட்டுப்படாதவன்) எனவே அவன் உயிரைப பாசத்தோடு பிணித்திருக்க முடியாது. மலம் உயிரியல்பானது. அதனை அழிக்க

முடியாது. எனவே இந்தக் கட்டு எப்படி உண்டாகியது?

ஐந்தவத்தைகள் எவ்வாறு தோனறுகின்றன? ஞானம் தோன்றும் பொழுது அறியாமை விலகுகிறது. அப்பொழுது தனித்தன்மை மறைந்து விட்டதால் உயிர் தன்னைத்தான் அறிய மாட்டாது. அது இறைவனோடு ஒன்றியிருத்தலாலே இறைவனையும் அறிய முடிகிறது. எனவே உயிர் தன்னை அறிவது எங்ஙனம்?

உலகியலிலிருந்து வேறுபட்டவர்களோடு இறைவன் ஒன்றியிருக்கின்றான். உலகியலிலே ஆழ்ந்து விட்டவர்களிடம் இருந்து விலகி நிற்கிறான். அவன் தானே வந்து உயிரோடு கலந்து ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றும் இரண்டும் இன்றாகாமல் தன்னது பெருமையைத் தாக்கானாயினும் என்னது பெருமை எல்லாம் எய்தி......பேரா இன்பம் பெருங்கடலதனுள் ஆரா இன்பம் அளித்து நிற்கின்றான்.

சுருங்கச் சொல்லின் இருபா இருப∴து சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகளாகிய பதி, பசு, பாசம் என்பவற்றையும், அவற்றின் இயல்பையும், தொடர்பையும் இவை போன்ற பிறவற்றையும் எடுத்து விளக்குகிறது

திருவாடுதுறை மடத்தைச் சேர்ந்த நமசிவாயத் தம்பிரான் அவர்களும், சீர்காழித் தத்துவராயரும் இந்நூலுக்கு உரையெழுதியிருக்கிறார்கள். தருமபுர ஆதீனம் இதனை உரைநடை வடிவில் வெளியிட்டிருக்கின்றது.

கோயில்களில் பூஜையின் பொழுது திரை எதற்காக போடப்படுகிறது?

ஞானத்தை அஞ்ஞானம் மறைக்கிறது என்பதை உணர்த்து-வதற்காகவும் உறையும் இறைவனை மாயையாகிய மயக்கம் மறைக்கிறது என்பதை உணர்த்தவும் திரை போடப்படுகிறது.

விபூதி எதைக் குறிக்கிறது?

ஞானம் எனும் நெருப்பில் வினைகள் அனைத்தும் சுட்டெரிக்கப்பட்டபின் எஞ்சுவது பரிசுத்தமான சிவதத்துவமே என்பதைத்தான் விபூதி குறிக்கிறது. உலகில் யார் எத்தகைய உயர் பதவி வகித்தாலும் எவ்வளவு செல்வம் படைத்தவராக இருந்தாலும் மரணத்திற்கு பின் இறுதியில் தீயில் வெந்து ஒருபிடி சாம்பலாகத்தான் ஆகவேண்டும் என்பதை விபூதி குறிக்கிறது. விபூதியை நெற்றியில் இடும் போது எல்லாம் இந்த உடல் ஒருநாள் தீயில் வெந்து சாம்பலாகும் எனவே அகங்கார ஆணவமின்றி அடக்கத்துடன் வாழ்வேனாக என்ற எண்ணம் நம் மனதில் தோன்ற வேண்டும்.

அபிஷேகங்கள் செய்வது ஏன்?

சமயத்தை வாழ்க்கையோடு ஒன்றிய வழிமுறையாக வகுத்த நம் முன்னோர்கள் காரண காரியங்கள் இன்றி சடங்குகளை ஏற்படுத்தவில்லை. ஆனால் காலத்தால் ஏற்பட்ட மாறுதல்களாலும், இத்தகைய சடங்குகளின் உண்மைத் தத்துவத்தை சமுதாயம் தெரிந்துகொள்ளாததன் காரணத்தாலும் இத்தகைய கேள்விகள் எழுகின்றன.

இறைவனுக்குப் பூஜை செய்யும் பொருட்களை விட மனோபாவமும் பக்தியுமே முக்கியம் என்கிறது நம் மதம். நம்மைப் போலவே இறைவனையும் பாவித்து அவனுக்கு ஆசனம், ஸ்நானம், ஆபரணம், அலங்காரம் எல்லாம் செய்து நம் பக்தியைப் பிரதிபலிக்கவே பூஜை விதிகளில் இவை குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த முறையில் மூலவிக்கிரகத்துக்கோ அல்லது உற்சவ மூர்த்திக்கோ செய்யப்படுகின்ற ஸ்நான சடங்கையே அபிஷேகம் என்கிறோம். அபிஷேகம் செய்கின்ற தீர்த்தமும் பாலும் மற்ற திரவியங்களும் வீணாகாமல், கர்ப்பக்கிரகத்திற்கு வெளியே ஓர் அபிஷேகத் தொட்டியில் விழுவதை நாம் ஆலயங்களில் பார்க்கலாம். தெய்வத்தின் மீது ஊற்றப்படும் பால், பஞ்சாமிர்தம், பன்னீர் போன்ற திரவியங்கள் இந்தத் தொட்டியில் விழுந்து அதனை தரிசனத்திற்கு வரும் அனைவரும் பிரசாதமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள். ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் அது ஒரேவிதமான பிரசாதமாக வழங்கப்படுகிறது. தேன் பழச்சாறு, இளநீர், பால் போன்ற விலையுயர்ந்த சத்துள்ள பொருட்களை வாங்கிப் பருக முடியாத ஏழை-எளிய மக்களுக்கு அது ஆலயத்தில் இலவசமாகவே அருளுடன் கூடிக் கிடைக்கிறது.

சிவன் கோவிலில் அர்ச்சனை செய்யப்படும் வில்வமும் விஷ்ணு கோவிலில் அர்ச்சனை செய்யப்படும் துளசியும் எத்தனையோ நோய்களைத் தீர்க்கவல்ல சக்தியைப் பெற்றுள்ளன என்று, இன்றைய விஞ்ஞானிகள் கண்டறிந்ததை அன்றே நம் சித்தர்கள் தெரிந்து வைத்திருந்தனர். துளசியிலும்-வில்வத்திலும் ஊறி வந்த அபிஷேக நீர்,நோய் தீர்க்கும் மருந்தாகவும் பயன்பட்டு வருகிறது. சில ஆலயங்களில் மூல விக்கிரகமே மூலிகைகள் கலந்த ஒருவகை சாந்தினால் செய்யப்பட்டது என்றும் அதன்மீது ஊற்றப்படும் அபிஷேக நீர் நோய் தீர்க்கும் சக்தி வாய்ந்ததாகும் என்றும் கூறுவர். மூல விக்கிரகத்தை அசையாமல் பீடத்தில் இருக்கச் செய்யும் அஷ்டபந்தனம் எனப்படும் சாந்தும் மூலிகைகள் கலந்ததுதான். எனவே ஆலய மூர்த்திகளுக்கு மேல் ஊற்றப்பட்ட அபிஷேக திரவியங்கள் அன்பர்கள் உடல்நலத்தைக் காக்கும் மருந்தாகவும்-உள்ளத்துக்கு ஆறுதல்தரும் அருட்பிரசாதமாகவும் கிடைக்கிறதென்றால் ஆண்டவனுக்கு அபிஷேகம் போற்றப்பட வேண்டியதொரு சடங்குதான் அல்லவா?.

அபிஷேக தத்துவம்

சீவனுக்கு உடல் ஒரு வாழ்விடம். உடல் வாழ உணவு அவசியம். நாம் பரமாத்மாவிடமிருந்து தோன்றினோம். அவர் பிம்பம் நாம் பிரதிபிம்பம். பிரதிபிம்பமான (போட்டோ படமான) நாம் நன்றாக சுகமாக வாழ வேண்டுமாயின் அவர்-பரமாத்மா நன்றாக இருக்க வேண்டும். பிம்பமான நமது முகத்தில் அழுக்கிருந்தால் நமது படம் அழகாயிராது. பசி தாகமில்லாத பரமாத்மாவாக எண்ணப்படுகின்ற திருக்கோயிலிலுள்ள இறைவனுக்குஅபிஷேகம் நிவேதனம், பூசை, விழா முதலியவை நடைபெற வேண்டும்.

ஒளி வடிவினராகிய அக்கினி வடிவினராகிய சிவனுக்கு அபிஷேகத்தில் அதிக விருப்பம். மகாவிஷ்ணுவுக்கு அலங்காரத்தில் அதிக விருப்பம். அக்கினி, நீர் முதலியன பகவானின் உடலே. நமது துயரமெல்லாம் நீங்க அப்பரமனைக் குளிரச் செய்தல் வேண்டும். அப்பரமன் குளிர்ந்தால் நம் மனம் குளிரும்.

நம் சிந்தையானது ஜலதாரைபோல இடைவிடாது இறைவன் திருவடியிலேயே செல்லுதல் வேண்டும். இறைவனுக்குப் பால் அபிஷேகம் செய்யும்படி வேதங்கள் கூறுகின்றன. அவ்வாறு செய்வதால், சிவனது உக்கிரங்கள் சாந்தமாகி உலகநலம் உண்டாகும் என்பது சித்தாந்தம்.

நதிகளெல்லாம் சென்ற கடலில் விழுந்து அவற்றின் பெயர்களும் சுவையும் நீங்கி ஒரே கடலாவது போல் சீவன் பரமனிடம் சென்று சேர்தல் வேண்டும் என்று உபநிடதம் கூறுகின்றது. இதுபோன்ற பல தத்துவங்களை உணர்த்துவனவே அபிஷேகங்கள்.

அபிஷேகப் பலன்

இறைவனின் அபிஷேகத்திற்குப் பயன் படுத்துகின்ற பொருள்களுக்கேற்பப் பலன்கள் உண்டாகின்றன அவையாவன:

நீர் அபிஷேகத்தால்	- சாந்தி உண்டாகும்
திருமஞ்சன நீரில் வாசனைப் பொருட்களும் மலர்களும் இட்டு அபிஷேகம் செய்தால்	- மல நிவாரணம்.
வாசனைத்திரவிய அபிஷேகம்	- ஆயுள் வலிமை
சந்தன அபிஷேகம்	- செல்வம் உண்டாகும்.
பால் அபிஷேகம்	- ஆயுள்விருத்தி
தயிர் அபிஷேகம்	- மக்கள் விருத்தி.
நெய் அபிஷேகம்	- மோட்சம் உண்டாகும்.
தேன் அபிஷேகம்	-சங்கீத வன்மை.
கருப்பஞ்சாறு அபிஷேகம்	-நித்திய சுகம்
சர்க்கரை அபிஷேகம்	-பகை அழித்தல்
வாழைப்பழ அபிஷேகம்	-பயிர் விருத்தி
பலாப்பழ அபிஷேகம்	-உலகவசியம்
மாம்பழ அபிஷேகம்	-சகல விஜயம்
தமரத்தம்பழம் அபிஷேகம்	-பூமி இலாபம்.
மாதுளம்பழ அபிஷேகம்	-பகை நீக்கம்
நாரத்தம்பழ அபிஷேகம்	-சற்புத்தி.
எலுமிச்சம்பழ அபிஷேகம்	-மருத்துவ நிவாரணம்
தேங்காய் துருவல் அபிஷேகம்	-அரசுரிமை
இளநீர் அபிஷேகம்	-சற்புத்திரப்பேறு
கோரோசனை அபிஷேகம்	-தீர்க்காயுள்
பச்சைக் கற்பூர அபிஷேகம்	-அச்சம் நீங்கும்
கஸ்தூரி அபிஷேகம்	-வெற்றி உண்டாகும்.
பன்னீர் அபிஷேகம்	-சாலோக்கியம்.
சந்தனக் குழம்பு அபிஷேகம்	-சாயுச்சியம்.
அன்னா அபிஷேகம்	-ஆயுள்
ஆரோக்கியம், அரசு, தேசம்	விருத்தியுண்டாகும்
மாக்காப்பு	-மலநாசம்
நெல்லிக் காப்பு	-நோய் நீக்கம்
மஞ்சட் காப்பு	-இராசவசியம்
பஞ்சகவ்யம்	-ஆன்மசுத்தி
இரச பஞ்சாமிர்த அபிஷேகம்	-செல்வம்உண்டாகும்

இவ் அபிஷேகங்களை எத்தெய்வத்திற்குச் செய்தாலும் பலன்கள் ஒன்றே. சிவனுக்கும் முருகனுக்கும் மட்டுமே விபூதி அபிஷேகம் செய்தல் வேண்டும்.

கர்மம் செய்யாமல் மனிதன் ஒரு கணமேனும் இருக்க முடியாது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தொழில் கடமை செய்ய வேண்டுமென்பது விதி. எனவே கடலில் அகப்பட்ட துரும்பு போல செய்யாமல் சூரியனைப் போலச் செய்வது பெருமையல்லவா?

பதினோராம் திருமுறை

நூல் வரலாறும் நூல் ஆசிரியர்கள் வரலாறும்

திருமுறை ஆசிரியர்கள் அனைவரும் இறைவன் திருவருள் உள்நின்று உணர்த்தத் திருவாய் மலர்ந்தவர்கள் ஆவர். இவ்வகையில் அமைந்த பதினோராம் திருமுறை சங்ககால நக்கீரர் முதல் சோழர்கால நம்பியாண்டார் நம்பிகள் வரையுள்ள பன்னிரு அருளாளர்களின் திருவாக்குகளைக் கொண்டதாகும்.

பிற திருமுறைகள் பதிகப் பாங்கிலேயே அமைந்துள்ளன. ஆனால் இத்திருமுறையிலோ சிறு பிரபந்தங்களாக அமைந்த நூல்கள் பல இடம் பெற்றுள்ளன. அந்தாதி, கோவை, மாலை, உலா, ஆற்றுப்படை போலவனவாய நூல்கள் இருத்தல் காண்க.

1) திரு ஆலவாய் உடையார்

இவர் மதுரையில் எழுந்தருளியிருக்கும் சொக்கநாதப் பெருமான் ஆவார். தமிழ்ச் சங்கத் தலைவராக வீற்றிருந்தருளிய இப்பெருமான் சேரமான் பெருமாள் நாயனாருக்கு அனுப்பிய திருமுகப் பாசுரம் இதில் முதற்கண் உள்ளது. இதில் அனுப்புநர், பெறுநர், செய்தி முதலியவை நிரல்பட எழுதப்பட்டுள்ளன.

2) காரைக்கால் அம்மையார்

இவர் 63 நாயன்மார்களுள் ஒருவர். கணவன் தம் தெய்வத் தன்மை கண்டு பத்திமையோடு துறந்து ஒழுக, இறைவனிடம் பேய் வடிவை வேண்டிப் பெற்றவர். இறைவனும் இப்பெருமை சேர் வடிவுடன் தம்பால் என்றும் இருக்க என அருள் பெற்றவர். இவர் காலம் கி.பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டாக இருக்கலாம். இவர் எழுதிய நூல்கள் வருமாறு:

1) திருவாலங்காட்டு மூத்தத்திருப்பதிகங்கள் இரண்டு
2) திரு இரட்டை மணி மாலை
3) அற்புதத் திருவந்தாதி

3) ஐயடிகள் காடவர்கோன்

காடவர் என்பது பல்லவ மரபினரைக் குறிக்கும் பொதுப் பெயர். இவர் காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்ட பேரரசர். இவர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு. இவர் பாடிய நூல் க்ஷேத்திரத் திருவெண்பா என்பதாகும்.

4) சேரமான் பெருமாள் நாயனார்

இவர் சேரநாட்டுப் பேரரசர். வேறு பெயர் கழறிற்றறிவார். திருச்சிலம்பு ஓசை கேட்டு வழிபடும் பேறு பெற்றவர். இறைவனின் திருமுகம் பெற்ற பேறுடையவர். சுந்தரரின் தோழர். அவருடன் கயிலைக்குச் சென்று இறைவனின் இன்னருள் பெற்றவர். இவர் கி.பி. எட்டாம் நூற்றாண்டினர். இவர் அருளிய நூல்களாவன.

1) பொன் வண்ணத்து அந்தாதி
2) திருவாரூர் மும்மணிக்கோவை
3) திருக்கயிலாய ஞான உலா

5) நக்கீர தேவ நாயனார்

சங்க காலத்தில் வாழ்ந்த நக்கீரருக்குப் பல நூற்றாண்டுகள் பிற்பட்டவர் இருவர் எனினும் பெயர் ஒற்றுமையால் இருவரும் ஒருவர் எனக் கருதப் பெற்றனர். சங்ககால நக்கீரர் எழுதியது திருமுருகாற்றுப்படை ஒன்றே. மற்றவை பிற்காலத்தவரான நக்கீரதேவ நாயனாரால் எழுதப்பட்டவை.

1) கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி
2) திரு ஈங்கோய் மலை எழுபது
3) திரு வலஞ்சுழி மும்மணிக் கோவை

4) திரு எழு கூற்றிருக்கை

5) பெருந் தேவபாணி

6) கோபப் பிரசாரதம்

7) கார் எட்டு

8) போற்றித் திருக்கலி வெண்பா

9) திருமுருகாற்றுப் படை

10) திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

6) கல்லாடதேவநாயனார்

கல்லாடர் என்னும் பெயருடைய புலவர்கள் மூன்று அல்லது நான்கு பெயர்கள் இருந்திருத்தல் கூடும். கல்லாடம் என்பது ஒரு சிவத்தலம். அதில் எழுந்தருளிய சிவபெருமான் கல்லாடர் எனப்பெறுவர். ஆகவே இப்புலவர்களும் அப்பெயர் பெற்றனர் எனலாம்.

இவர் எழுதிய நூல் திருக்கண்ணப்ப திருமறம் என்பதாகும்.

குறிப்பு: முன்னவர் பாடிய நூலுக்கும் இதே பெயர் உள்ளது.

7) கபிலதேவநாயனார்

இவரும் கடைச்சங்க காலப் புலவராகிய கபிலரும் ஒருவர் அல்லர். இவர் காலத்தால் பிற்பட்டவர். இவர் எழுதிய நூல்களாவன:

1) மூத்த நாயனார் திரு இரட்டை மணிமாலை

2) சிவபெருமான் திரு இரட்டை மணிமாலை

3) சிவபெருமான் திருவந்தாதி

8) பரணதேவநாயனார்

இவரும் கடைச்சங்க காலப் பரணரின் வேறானவர் காலம்-கடைச்சங்க காலப்புலவர் பெருமக்களின் பெயர் பெற்ற இந்நால்வரும் கி.பி. 9,10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இவர் செய்த நூல் சிவபெருமான் திருஅந்தாதி.

9) இளம் பெருமாள் அடிகள்

இவருடைய நாடு ஊர், குலம் முதலியன இவையெனத் தெரியவில்லை. இவர் அருளிய நூல் சிவபெருமான் திரு மும்மணிக் கோவை என்பதாகும்.

10) அதிரா அடிகள்

இவருடைய ஊர், குலம் வரலாறுகள் யாதொன்றம் தெரியவில்லை. அதிரா அடிகள் என்னும் பெயர் எவர்க்கும் கலக்கமடையாத உள்ளமுடைய பெரியவரைக் குறிப்பதாகும்.இவர் காலம் கி.பி.9-ஆம் நூற்றாண்டு எனலாம். இவர் செய்த நூல் மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை (விநாயகரைப் பற்றிய நூல்)

11) திருவெண்காட்டு அடிகள்

இவர் காவிரிப்பூம் பட்டினத்தில் தோன்றியவர். பட்டினத்துப்பிள்ளையார் என்றும் அழைக்கப் பெறுபவர். திருவெண்காட்டு அடிகள் எனவும் பட்டினத்துப்பிள்ளையார் எனவும் பெயர் வழங்கப்பெற்றவர். இருவேறு காலங்களில் இருவர் இருந்திருத்தல் வேண்டும். அடியிற்கண்ட நூல்களை இயற்றியவர் காலத்தால் முற்பட்டவர் எனலாம்.

இவர் அருளிய நூல்கள்

1) கோயில் நான்மணிமாலை (சிதம்பரம் பற்றியது)

2) திருக்கழுமலமும்மணிக் கோவை (சீர்காழி பற்றியது)

3) திருவிடைமருதூர் மும்மணிக் கோவை

4) திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி (காஞ்சிபுரம்)

5) திருவெற்றியூர் ஒரு பா ஒரு ப·து

12) நம்பியாண்டார் நம்பிகள்

இவர் திருநாரையூரில் தோன்றியவர். அதி சைவர்.திரு நாரையூரில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாரால் ஆட்கொள்ளப் பெற்றவர். அப்பெருமானால் திருமுறைகளைக் காணவும் கண்டவற்றை ஏழு திருமுறைகளாகத் தொகுக்கவும் பேறு பெற்றவர்.

63 நாயன்மார்களுடைய வரலாற்றையும் திருத் தொண்டத் தொகையைக் கொண்டு வழி நூலாக விரித்து ஓதியவரும் இவரே. திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் பதினொரு திருமுறைகளையும் இவர் வகுத்தருளினார். சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் பிறகு பன்னிரண்டாவது திருமுறையாகச் சேர்க்கப்பட்டது.

இவர் செய்த நூல்களாவன

1) திருநாரையூர் விநாயகர் திரு இரட்டை மணிமாலை
2) கோயில் திருப்பண்ணியர் விருத்தம்.
3) திருத்தொண்டர் திருஅந்தாதி
4) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
5) ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்
6) ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை
7) ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை
8) ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்
9) ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை
10) திருநாவுக்கரசர் திரு ஏகாதச மாலை.

காலம்: இளம் பெருமான் அடிகள் முதலாகவுள்ள இந்நால்வரின் காலம் கி.பி.9-ஆம் நூற்றாண்டின் இறுதியும் கி.பி.10-ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகக் கருதுகின்றனர்.

இறைவனை வணங்கித் திரும்பும்முன் ஏன் தீர்த்தம் அருந்த வேண்டும்

கோயில் வணங்கி விட்டுத் திரும்பிவரும் முன் தீர்த்தம் வாங்க வேண்டும் என்றும் அதன்பின் பிரசாதம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுவதுண்டு. தெய்வ அம்சத்தை மந்திர ஒலியுடன் அபிஷேகம் செய்தெடுத்த நீரே தீர்த்தமாக பக்தர்களுக்கு வழங்குவது. நம்பிக்கை மற்றும் சாஸ்த்திரத்தின் இரண்டு குணங்களும் அடங்கியதே தீர்த்தம். தேவ விக்கிரகத்தின் ஸ்பரிசத்தாலும் மந்திர ஒலிகளாலும் புனித மாக்கப்பட்ட பரிசுத்தம் முதலாவது குணம். துளசி முதலிய மூலிகைகளின் மருத்துவ குணங்களே இரண்டாவது.

வலது கையின் ஐந்துவிரலும் மடங்கும் போது உண்டாகும் கைக்குழியில் தீர்த்தம் வாங்க வேண்டும் என்பது விதி கைக்குழியை அப்படியே உயர்த்திப்பிடித்து கையில் உயர்ந்து காணப்படும் சந்திர மண்டலத்துக்கும் சுக்கிர மண்டலத்துக்கும் மத்தியிலுள்ள இடுக்கு வாயிலாக தீர்த்தம் அருந்த வேண்டும் இவ்வாறு தீர்த்தம் அருந்துவதனால் நன்மைகள் பல என்பதை மேல்நாட்டு ஆராய்ச்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளன. தீர்த்தங்களில் சேர்க்கும் துளசி, குவளை, தாமரை, மந்தாரை, தெற்றி, மஞ்சள் என்பவையின் மருத்துவ குணங்கள் முக்கியமாக இரத்த ஓட்டம் உணர்வடைகின்றது. இரத்தத்திலுள்ள அசுத்தங்களை அகற்றி உடலை சுத்தீகரிக்கின்றது.

இந்து மத ஆசாரத்தில் தீர்த்தம் அருந்துவதின் அவசியத்தைப் பற்றி விளக்கமுண்டு. பொதுவாக உதடுகளில் உமிழ்நீரில்லாவிட்டாலும் வாய்க்குள் உமிழ்நீர் இருக்கும் வாய்க்குள் நாவின் அசைவின் விளைவாக உதடுகளும் எச்சில் ஆக மாறும். அதனால் உதடுகள் வாய்க்குள் செலுத்தி விட்டு தீர்த்தம் அருந்த வேண்டும் இரு உதடுகளும் தொடுவதைத் தவிர்க்க வேண்டும் அருந்திய தீர்த்த ஜலத்தின் மிச்சமாக உள்ளங்கையில்லிருப்பதை தலையிலும், முகத்திலும் உடலிலும் தெளிக்க வேண்டும் வாங்கிய தீர்த்தத்தில் ஒருதுளி கூட தரையில் விழச்செய்யலாகாது.

குடமுழுக்கு விழா

கும்பாபிஷேகத்தை பெருஞ்சாந்தி என்றும் கூறுவர் "கபாலீச்சரம் அமர்ந்தான் பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்" என்ற திருஞானசம்பந்தரின் வாக்கிலிருந்து இதனைத் தெரிந்துகொள்ளலாம். கும்பாபிஷேகம் என்றால் கும்பத்திலுள்ள நீரினால் அபிஷேகித்தல் என்று பொருள்.

குடமுழுக்கில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் கும்பம் சிவ வடிவமாகும். கும்பத்தின் மீதுள்ள உடை-தோல்; மேலே பூசிய செம்மண்-இரத்தம்; கும்பத்து மண்-ஊன்; கூர்ச்சம் (தர்ப்பை)-எலும்பு; மேலே சுற்றிய நூல், நரம்பு, கும்பத்தில் இடும்பொன்-வீரியம்; மந்திரம்-உயிர்; கீழிட்ட நெல் முதலிய தானியம்-ஆசனம் என்றெல்லாம் ஆகமங்கள் உணர்த்துகின்றன.

கும்பத்தை முதலில் கோயிலில் உள்ள பிம்பத்தின் அருகில் வைத்துத் தருப்பை மாவிலை முதலியவற்றைக் கொண்டு மந்திரங்களை ஓதி, பிம்பத்தில் விளங்கும் மூர்த்தியைக் கும்பத்தில் எழுந்தருளச் செய்வார்கள். எழுந்தருளச் செய்தலை ஆவாகனம் என்று கூறுவார்கள். பிறகு அக்கும்பத்தை மங்கள முழக்குடன் யாகசாலைக்கு எழுந்தருளச் செய்வார்கள்.

யாகசாலையானது 36 தத்துவ வடிவமானதும் சிவபெருமானது அட்டமூர்த்த வடிவமானதுமாகும். யாகசாலையில் ஒன்பது குண்டங்களில் ஒன்பது அக்கினி வளர்க்கப்பெறும். சாதாரணமாக நாள்தோறும் ஆகவனீயம், தட்சிணாக்கினீயம், காருகபத்தியம் என்னும் மூன்று அக்கினிகள் வளர்க்கப்பெறும். இதனை "மூன்று வகைகுறித்த முத்தீச் செல்வத்து" என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.

அவை முக்கோணம், நாற்கோணம், அர்ச்சந்திர வடிவம் முதலிய ஒன்பது வடிவங்களில் காணப்படும். அவ்வாறு வடிவமைக்கப் பெறுவதற்குக் காரணங்கள் உண்டு. குண்டங்களைச் சுற்றி முறுக்கிய பசுந்தர்ப்பைகளைப் பரப்பி ஆல் அரசு முதலிய சுள்ளி விறகுகளைக் குண்டத்திலிட்டுக் கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்கினி கொண்டு அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி அத்தெய்வங்களை மனத்தில் தியானித்து சுருக்கு சுருவம் என்றெல்லாம் சொல்லப்படுகின்ற நெய்த்துப்பால் நெய் முதலியன சொரிந்து அக்கினி வளர்ப்பார்கள்.

இவ்வாறு மந்திரம், கிரியை, தியானம் ஆகிய மூன்றினாலும் வளர்க்கப்படும் அக்கினியிலிருந்து எழும் புகையும் வேதஒலி, சிவாகமஒலி, தமிழ்மறை ஒலி ஆகியவற்றுடன் மெய்யன்பர்கள் நல்லெண்ணங்களும் எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனது திருவருட் சக்தியைத் தூண்டிக் கும்பத்தில் விளங்கச் செய்யும். அப்போது அக்கும்பம் தெய்வீக சக்திக் கலைகள் நிரம்பியதாகும்.

மின்சாரத்தைச் செலுத்தச் செப்புக் கம்பி முதலியன தகுதியுடையனவாதல் போல சிவசக்தியைச் செலுத்தத் தருப்பை, மாவிலை ஆகியவை தகுதியுடையனவாக விளங்குகின்றன. யாகசாலையில் நடைபெற வேண்டிய கிரியைகள் முற்றுப் பெற்றவுடன் மீண்டும் தெய்வீகசக்தி, கோயிலிலுள்ள பிம்பத்தினிடத்தில் அமைய வேண்டி, அச்சக்தியைச் செலுத்தும் சக்தி வாய்ந்த தருப்பைக் கயிற்றின் வழியாக அச்சக்தியைப் பிம்பத்தில் சேர்ப்பித்துக் கும்பத்தில் உள்ள நீரினால் சிகரங்களிலும், பிம்பத்திலும் அபிஷேகம் செய்வார்கள். இதனையே கும்பாபிஷேகம் என்றும், குடமுழுக்குப் பெருவிழா என்றும் கூறுவார்கள்.

மந்திரம் என்பது தவறாது பயனளிப்பதாகும். அது நிறைமொழி மாந்தரால் ஆணையிற் கிளந்த மறைமொழியாகும். நிறைமொழி மாந்தரின் எண்ணம், சொல், செயல் எல்லாம் பலன் அளிப்பவையே.

சாதாரணமாக விடந்தீண்டப்பட்டவர் மாந்திரிகன் உச்சரிக்கும் மந்திரத்தால் விடந் தீரப் பெறுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். அவ்வாறே விடந்தீர்க்கும் அம்மந்திரத்தினும் மேலாக பிரம மந்திரங்களும்,அங்க மந்திரங்களும் பலன் தருவனவாகவே உள்ளன. சொல்லுக்கும் செயலுக்கும் சக்தி உண்டென்பதை விஞ்ஞானிகளும் விளம்புவார்கள். ஒருவன் எண்ணும் எண்ணங்கள் உருக்கொண்டு வெளிச்சென்று பின் எண்ணியவனையே அடைகின்றன என்பர். எனவே யாகாக்கினி, மந்திரம், நல்லோர் எண்ணம் ஆகியவை எல்லாம் வல்ல தெய்வீக சக்தியைக் கும்பத்தில் செலுத்துகின்றன. கும்பத்திலுள்ள நீர் அத்தெய்வீக சக்தியைக் கிரகிக்கின்றது என்பது உண்மை.

கும்பாபிஷேக விழா நிகழ்ந்த பின்னர் மகாபிஷேகம் நடைபெறும். இறைவனைப் பிம்பத்திலிருந்து கும்பத்திலும் கும்பத்திலிருந்து பிம்பத்திலும் எழச் செய்த முறையால் விளைந்த களைப்புத் தீருவதாகப் பாவித்து மிகுதியான அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகித்து நன்கு பக்குவமான நிவேதனங்களால் நிவேதித்து உபசரித்தலுக்கு மகாபிஷேகம் என்று பெயர். இதனை மகாஅவிர்நிவேதனம் என்றும் கூறுவதுண்டு.

கும்பாபிஷேகப் பெருவிழாவின் பொருட்டு அமைக்கப்படுகின்ற யாகசாலையில் சில கிரியைகள் நடைபெறும். அவை அனுக்ஞை. விக்னேசுவர பூசை இரட்சோக்னம் கிருகமகம்.வாஸ்துசாந்தி மிருத்சங்கிரணம் அங்குரார்ப்பணம் இரட்சாபந்தனம் கலாகர்ஷணம் ஆகியவையாகும்.

அனுக்ஞை என்பது கும்பாபிஷேகத்தின் பொருட்டு இறைவனிடம் அருள் பெறுதல் விக்னேசுவரபூசை என்பது கும்பாபிஷேகப் பணி இடையூறுன்றி. இனிது நிறைவேறும் பொருட்டு விநாயகரை வழிபடுதல். இரட்சோக்னம் என்பது நற்பணிகளில் இடையூறு செய்யும் அரக்கர்களை வெருட்டித் திரும்ப அவ்வரக்கர்கள் வராமல் காத்தற் பொருட்டு எட்டுத் திக்குகளிலும் வைரவர்களையும் நடுவில் இலக்குமியையும் வைத்துப் பூசித்தல் கிருகமகம் என்பது சூரியன் முதலிய ஒன்பது கிரகங்களையும் அசுபதி முதலிய நட்சத்திரங்களுடன் அவற்றின் அதிதேவதைகளையும் பூசித்து கும்பாபிஷேகப் பணி நன்கு நிறைவேறும் பொருட்டு வேண்டுதல். வாஸ்துசாந்தி என்பது புருடனை உபாசித்தல் அதாவது நற்காரியங்கள் நடைபெறுமிடமெல்லாம் சென்று அக்காரியங்களைத் தடுக்கும் அவ்வசுரனை அவ்வாறு செய்யவொட்டாது காக்குமாறு பிரம்மா முதலிய தேவர்களை வேண்டுவதுடன் அவ்வாஸ்து புருஷனுக்கும் சாந்தி செய்தல். மிருத்சங்கிரகணம் என்பது பாலிகையின் பொருட்டுப் பூமிதேவி சப்த சமுத்திரம் இந்திரன் பிரம்மா முதலிய தேவர்களை வழிபட்டு மண் எடுத்தல். அங்குரார்ப்பணம் என்பது பாலிகை தெளித்தல். இது செய்யப்படும் யாகத்தின் பலாபலன்களை அறிவிக்கும் கருவி போன்றது. இரட்சாபந்தனம் என்பது ஆசாரியருக்குக் காப்பணிதல் இது ஆசாரியனை ஆசூசம் தீட்டுக்களினின்று காக்கும் கருவி. கலாகர்ஷணம் என்பது பிம்பத்திலுள்ள கலையைத் தங்கநூல் வழியாக இழுத்தல்-ஆகர்ஷித்தல்.

கும்பாபிஷேகத்திற்கு முன் பிம்பத்திற்குக் காப்புநாண் அணிவதுண்டு. கும்பாபிஷேகம் நிகழ்ந்த நாளிலிருந்து 45நாட்கள் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்து 45ஆவது நாள் அந்தக் காப்புநாணை அகற்றுவர்கள். இதனையே மண்டலாபிஷேகம் என்று சொல்லப்படும். இம்மண்டலாபிஷேகத்தோடு கும்பாபிஷேகக் கிரியை நிறைவேறுவதாகும்

இக்கும்பாபிஷேகப் பெருவிழாவைக் கண்டு வணங்குவோர் இம்மை போகங்களேயன்றிச் சிவபோகமாகிய பேரின்பமும் பெற்று வாழ்வார்கள் என்பது உண்மை.

தெய்வங்களின் புஷ்பங்கள், - ஊர்திகள்

பத்திர புஷ்பங்கள்

சிவன் உறைவது -	தாமரைப்பூ
விநாயகர் உறைவது -	அறுகு
முருகன் உறைவது -	சண்பகப்பூ
விஷ்ணு உறைவது -	கொக்கிறகம் பூ
இலக்குமி உறைவது -	வில்வம்
சரஸ்வதி உறைவது -	கோங்குப்பூ
உமாதேவி உறைவது -	நீலோற்பவம்
சூரியன் உறைவது -	செங்கழுநீர்
சந்திரன் உறைவது -	குமுதமலர்
யமன் உறைவது -	நாயுருவி

வெள்ளருக்கு, வெள்ளலரி, பிச்சிப்பூ, கொக்கிறகு, மந்தாரை, புன்னை, நந்தியாவட்டம் ஆகியவற்றை ஏனும் ஆகியவற்றில் ஒன்றையேனும் வைகறை, சாயங்காலம், அர்த்தசாமம் ஆகிய காலங்களில் அர்ச்சித்து வழிபடுவோர்கள் மோட்சம் அடைவர்.

சொந்தாமரை, செவ்வலரி, செங்கடம்பு, பாதிரி, செங்கழுநீர் ஆகிய செந்நிற மலர்களை மத்தியான வேளையில் அருச்சித்து வழிபடுபவர்கள் போகத்தைப் பெறுவர். கொன்றைமலர், சண்பகமலர், பொன் ஊமத்தைமலர், பொன்னொச்சி முதலிய பொன்னிறமலர்களை பிராத காலத்தில் (விடியற்காலத்தில்) அருச்சித்து வழிபடுபவர்கள் போக மோட்சத்தைப் பெறுவர்.

வில்வம், துளசி, மருக்கொழுந்து, அறுகு, மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை என்பவற்றை எக்காலத்துக்கும் அருச்சிப்பவர்கள் மோட்சம் பெறுவர்.

அம்மையின் அருச்சனைக்கு அறுகும் நெல்லியும் தவிர்க்கப்படும் விநாயகர் அருச்சனைக்கு துளசி தவிர்க்கப்படும்.

தெய்வ ஊர்திகள்

தெய்வம்	ஊர்தி
சிவன்	இடபம்
விநாயகர்	முஷிகம்
சுப்பிரமணியன்	யானை,மயில்
வயிரவர்	நாய்
மகேசுவரி	இடபம்
விஷ்ணு	கருடன்
கௌமாரி	மயில்
வைணவி	கருடன்
மாகாளி	பேய்
வராகி	சிங்கம்
காளி	சிங்கம்
துர்க்கை	கலைமான்
மூதேவி	கழுதை
காமன்	தென்றல்த்தேர்
அபிராமி	அன்னம்
சந்திரன்	முத்துவிமானம்
சூரியன்	ஒற்றையாழித்தேர்
இந்திரன்	ஐராவதயானை
குபேரன்	நரவிமானம் யானை
	புட்பகவிமானம்
யமன்	எருமை
அக்கினி	ஆடு
வாயு	மான்
வருணன்	ராட்சதமீன்
ஈசானருத்திரமூர்த்தி	காளை

திருவைந்தெழுத்தும் காயத்ரீயும்

இது பஞ்சாட்சரம் எனப்படும். பஞ்சாட்சரம் (பஞ்சஅக்கரம்) ஐந்து எழுத்துக்கள் இதனையே திருவைந்தெழுத்து என்பர்.

பஞ்சாட்சரம் சிகராதி பஞ்சாட்சரம், நகராதி பஞ்சாட்சரம் என இருவகை. சிவாய நம எனும் திருவைந்தெழுத்தே சிகராதி பஞ்சாட்சரமாகும். முத்தியை விரும்புவோர் இதனை செபிப்பர். நமசிவாய எனும் திருவைந்தெழுத்தே நகராதி பஞ்சாட்சரமாகும். நகராதி பஞ்சாட்சரம் இவ்வுலக இன்பங்களை நாடுவோரால் செபிக்கப்படும்.

பஞ்சாட்சரம் ஆண்டவனின் வடிவமாக அமைந்திருந்தாலும் அண்டமும் பிண்டமும் உடல்களும் பஞ்சாட்சரத்தாலானவை எனக் கொள்ளலாலும் பஞ்சாட்சரத்தை ஓதி உயர்வு பெற்ற நாயன்மார் வரலாறுகளாலும் இதன் மேன்மை உயர்ந்து விளங்குகின்றது.

சி - சிவம்
வா- திருவருள்
ய - ஆன்மா
ந - திரோன சக்தி
ம - மலம்

யகரமாகிய உயிர் வகரநகரமாகிய திருவருள் ஆற்றல்களுக்கு நடுவாக நிற்கிறது. இவ் உயிராகிய யகரம் உலகாகிய மகரத்தைச் சேர நகரம் துணை செய்தல் வேண்டும். எனவே நகரம் மகரத்திற்கு முன்னாதல் வேண்டும். இதுவே "நமசிவாய".

உயிர் திருவடியைச் சேர வகரமாகிய திருவருள் சிகரத்திற்கு முன்னாதல் வேண்டும் இதுவே சிவாயசிவ முதல் நிலையில் சிவாய நம

ஓங்காரமாகிய பிரணவம் தொகை ஐந்தெழுத்து வரி சிவப்பிரகாச நூல் சிவாயநம என ஓதவேண்டும என்கிறது.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும் பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் -நெஞ்சமுழுத்திப் பேசும் எழுத்துடனே பேசா எழுத்திணையும் கூசாமற் காட்டக் கொடி

-கொடிக்கவி

எட்டெழுத்து: ஓம் அம் உம் சிவயநம
ஆறெழத்து: ஓம் சிவாய நம
நாலெழுத்து: சிவ சிவ
பேசுமெழுத்து: வ
பேசாஎழுத்து: சி

திருவைந்தெழுத்தை எப்போதும் தப்பாது நினைக்க வேண்டும். அது காலனை அஞ்ச உதைப்பது. நால்வேதப் பொருளானது வானவரை ஆள்வது. சிவதீட்சை பெற்றவருக்கு அந்தி மந்திரமாவது மீளாத் துன்பத்தை நீக்குவது. சிவப்பேற்றை நல்குவது. எக்காலத்திலும் எவ்விடத்தும் துணையாயிருப்பது. திருக்கூத்தாய் திகழ்வது. உமாதேவியார் அருமறையாகக் கேட்டருளியது. நான்மறைகளிலும் மெய்ப்பொருளாய் திகழ்வது. சாபவிமோட்சனம் கொடுப்பது. நாவினுக்கருங்கலமாவது நாத்தழும் பேற ஓதவோருக்கு நற்றான் தருவது. விரும்பி நினைவார் ஓதுவாருக்கு நற்றான் தருவது விரும்பி நினைவார் வினைகளை வேரறக் களைவது. தலையாய மந்திரமாயுள்ளது. நோயைத் தீர்க்கும் மருந்தாக உள்ளது. ஆன்றோர் கருத்தின் பயனாய் அமைவது. சித்தம் தெளியும் சீர்மை அருள்வது.

காயத்ரீ

வேதத்திலுள்ள மந்திரங்களிலெல்லாம் மிகப் பவித்திரமானது காயத்ரீ. காயத்ரீ மந்திரங்கள் உருத்திரகாயத்ரீ, தேவிகாயத்ரீ, விஷ்ணுகாயத்ரீ, சூரியகாயத்ரீ, பிரமகாயத்ரீ முதலிய காயத்ரீயை வித்து என்றும் வேதங்களை விருட்சம் என்றும் நூல்கள் கூறுகின்றன.

காயத்ரீ மந்திரம் 24 எழுத்துக்களாலானது.

தத், ல, வி, துர், வ, ரே, ணி, யம்
பர், கோ, தே, வஸ், ய, தீ, ம, ஹி
தி யோ யோ ந ப்ர சோ த யாத்

இன் 24 எழுத்துக்களும் 24 தெய்வ சக்திகள் வழிப்படைகின்றன.

ஓம் பூர் புவ ஸவஹ
தத் ஸ்விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோறஹ பரசோதயாக

பூர் - பூலோகம் புவ - பிராணயோகம். ஸ்வக - சுவர்க்கலோகம். நஹ - நமக்குய - யார் திய - அறிவை தத் - அந்த ஸ்விதி - (காயத்ரீ தேவியின் ஒளிவடிவம்) சவிதாவின் வரேண்யம் - கிரகிக்கத்தகுந்த பாக சக்திக்கிறாப்பிடமான - தெவஸ்ய - தேவனை, தீமஹி - தியானிபோமா மந்திர எழுத்துக்களின் பீசவுட்சரங்கள்

ஓம் ஹ்ரீம் ஸ்ரீ க்லீம் ஹ்ரோம் ஜும்
யம் ரம் லம் வம் ஸம் ஸம்
ஜம் க்ரொம் ஹும் ஹலீம் பம் பம்
டம் டம் மம் யம் சவும் பம்

இவ் இருபத்திநாலும் ஒவ்வொரு தெய்வங்களை விழிக்கச் செய்து வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றை கொடுக்கச் செய்கின்றன.

காயத்ரீ மந்திர இரகசியங்கள் குப்தவாக்கியம் எனப்படும். இதனைச் செபிக்கும் போது மனத்தால் செபிக்க வேண்டும் என விதி கூறுகின்றது.

மனது -1000 மடங்கு பலன்
உதடு அசைய மட்டும் - 100 மடங்கு பலன்
மெல்ல உச்சரிப்பு - 10 மடங்கு பலன்
ஒலி எழுப்பி செய்தால் பங்கு பலன்

காயத்ரீ மந்திரத்தை உரிய முறைப்படி செபிக்கும் போது அது சாப விமோட்சனம் செய்கின்றது. பாவநாசம் செய்கின்றது. இவ்வுலக வாழ்க்கைச் சிறப்புக்களை தருகின்றது. மறுமையில் இன்பம் துய்க்க வைக்கின்றது.

எதையும் எழுத ஆரம்பிக்கும் முன் பிள்ளையார் சுழி போடுவது ஏன்?

பிள்ளையார் சுழியில் 'உ' என்று எழுதுவது 'அ உம்' என்ற ஒலிகள் சேர்ந்த ஓம்காரத்தின் மத்தியில் உள்ள ஒலியைக் குறிக்கிறது. பிள்ளையார் சுழி முதலில் ஒரு புள்ளியில் இருந்து சுழியை ஆரம்பித்து பின் நேர்கோட்டை இழுப்பது இது பிந்துவிலிருந்து ஓம்காரநாதம் உண்டானதையும் பின் சிருஷ்டி உண்டானதையும் குறிக்கிறது. பிரணவ சொருபமாக ஓம்கார ரூபியாக விநாயகர் விளங்குவதால் பிள்ளையார் சுழி எனப்படுகிறது.

பன்னிரு திருமுறைகள்

இரா. நாகலிங்கம்

செந்தமிழ் மொழியிலுள்ள சைவ நூல்களெல்லாம் மூவகையில் அடங்குவன. அவை சாத்திரம், தோத்திரம், காப்பியம் என்பன. சைவசமயத்திலுள்ள பதி,பசு பாச உண்மைகளை நியாயசாத்திர முறையில் நிலைநாட்டிக் கூறும் நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும். இறைவனையும் அடியார்களையும் போற்றித் துதிப்பனவாகிய பாடல்கள் தோத்திரங்களாம். இறைவன் அருட்செயல்களையும், அடியார் வரலாறுகளையும் கதை வடிவில் எடுத்துக் கூறும் புராணம் முதலான நூல்கள் காப்பியங்களாகும். இம் மூவகையில் திருமுறைகள் தோத்திரங்களாகும். இவற்றுள் பன்னிரண்டாந்திருமுறையாகிய பெரியபுராணம் காப்பியமாகவும் விளங்குகிறது.

திருமுறை என்ற பெயர்

திருமுறை என்ற தொடரில், திரு என்பது தெய்வத் தன்மையைக் குறிப்பது. முறை என்ற சொல்லுக்கு நூல், ஒழுங்கு, வரிசை, உறவு, முறையீடு முதலிய பல கருத்துக்கள் உள. எனவே திருமுறை என்பது தெய்வத்தன்மை பொருந்திய நூல்; உயிர்களைச் செம்மையான ஒழுங்கு முறையில் இறைவனிடம் சேர்ப்பிக்கும் நூல், தொகுத்து வரிசைப்படுத்தப்பட்ட தெய்வீகப் பாடல்களைக் கொண்ட நூல், இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள உறவை விளக்கும் நூல், மெய்யடியார்கள் உள்ளம் உருகி இறைவனிடம் செய்து கொண்ட முறையீடுகளைக் கொண்ட நூல் எனப் பலவகைப் பொருள்கொள்ளக் கூடியதாக உள்ளது.

திருமுறைகண்டது

திருநாரையூர் பொல்லாப்பிள்ளையாரை வழிபட்டு, அவரருளால் சகல சாத்திர ஞானமும மெய்ஞ்ஞானமும் பெற்று விளங்கியவர் நம்பியாண்டார் நம்பிகள் என்னும் சிவவேதியர். அக்காலத்தில் சோழநாட்டை ஆண்ட அபயகுலசேகர சோழ மகாராசா என்பவர் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களிலே சிற்சிலவற்றை சிவனடியார்கள் ஓதக்கேட்டு, அவற்றையெல்லாம் முற்றாகத் தேடித் தொகுத்து சைவமக்கள் பாராயணம் செய்யத் தரவேண்டுமென்று நம்பியாண்டார் நம்பிகளை வேண்டிக் கொண்டார். ஒருநாள் அரசன் நம்பியாண்டார் நம்பிகளிடம் வந்து பொல்லாப்பிள்ளையாருக்கு விசேடப் பூசைகள் செய்வித்து இருட்பாக்களைப் பெறுவதற்குரிய உபாயத்தைப் பிள்ளையாரிடம் வேண்டியறியும்படி இரந்து கூறினார். நம்பியாண்டார் நம்பிகளும் விநாயகப் பெருமானிடம் அரசனின் குறைதீர அருளும்படி வேண்டினார். பிள்ளையாரும் நம்பிகளுக்கு திருமுறைகள் தில்லையில் சிற்றம்பலத்தை அடுத்துள்ள மண்டபத்திலுண்டென்று அருளியதோடு அருட்பாக்களின் பெருமையையும் அவற்றைப் பாடியருளிய மெய்யடியார்களின் வரலாறுகளையும் அருளிச்செய்தார். நம்பிகள் அதனை அரசனுக்குக் கூறியருளினார். அரசன் நம்பிகளையும் அழைத்துக் கொண்டு சிதம்பர தலத்துக்குச் சென்றார்.

அரசர் தில்லையை அடைந்து, தில்லைவாழ் அந்தணர்களைக் கொண்டு நடராசப் பெருமானுக்கு விசேட பூசை செய்வித்து தேவாரம் அருளிச் செய்த நாயன்மார் மூவரையும் திருவுலா எழுந்தருளச் செய்வித்து அவர்களது திருக்கர முத்திரை பொறித்த மண்டப வாயிலை அடைந்து, திருக்கதவைத் திறப்பித்து திருமுறை ஏடுகளை எடுத்தபோது, அவற்றின் பெரும்பகுதி கறையானால் அழிக்கப்பட்டிருப்பது கண்டனர். அதனால் அரசர் பெருங் கவலையுற்றார். அப்போது இறைவன் அருளால் ஓர் அசரீரி வாக்கு இக் காலத்துக்கு வேண்டுவன இருப்ப ஏனையவைகளை நாமே அழியும்படி செய்தோம் கவலையொழிக!

பெற்றவற்றைப் பேணிப்பயனடைக என்று கூறியது. பின் மனந்தெளிந்த அரசர் அவ்வேடுகளைச் செம்மை செய்து அவ்வருட்பாக்களை ஓதும் முறைப்படி தொகுத்தும் வகுத்தும் தருமாறு நம்பியாண்டார் நம்பிகளிடம் வேண்டினார்.

திருமுறை வகுத்தமை

அரசனது வேண்டுகோளுக்கு இசைந்த நம்பிகளும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச் செய்த தேவாரங்களில் கிடைத்தவற்றை முதலாம், இரண்டாம் மூன்றாம் திருமுறைகளாக வகுத்தார். திருநாவுக்கரச சுவாமிகள் பாடி அருளிய தேவாரங்களிலே கிடைத்தவற்றை நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக வகுத்தார். சுந்தரமூர்த்திநாயனார் தேவாரங்களை ஏழாம் திருமுறையென வைத்தார். ஆகவே தமிழ் மறையாகிய மூவர் தேவாரங்களும் முதல் ஏழு திருமுறைகளாயின. இவ்வேழையும் அடங்கன் முறை என்பர். மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டையும் எட்டாம் திருமுறை என வைத்தனர் திருமாளிகைத் தேவர் முதல் சேதுராயர் வரையுள்ள மெய்யடியார் ஒன்பதின்மர் அருளிச் செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாம் திருமுறையாயின. திருமூலநாயனார் அருளிச் செய்த திருமந்திர நூல் பத்தாம் திருமுறையாயிற்று. (இது தலைசிறந்த மந்திர சாத்திர நூலாகவும் போற்றப்படுவதாகும்) திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம் முதலாகப் பட்டினத்தடிகள் பாடல்வரை உள்ளவை பதினோராந் திருமுறையாக வகுக்கப்பட்டன. பொல்லாப்பிள்ளையார் அருளால் நம்பியாண்டார் நம்பிகள் விநாயகப் பெருமானையும் திருஞானசம்பந்தப் பிள்ளையாரையும் திருநாவுக்கரச சுவாமிகளையும் திருத்தொண்டத் தொகையிலுள்ள அடியார்களையும் போற்றி செய்த பாடல்களையும் பதினோராந்திருமுறையில் சேர்த்து வைக்குமாறு அரசர் வேண்டிக்கொண்டபடி அவ்வருட்பாக்களும் அத்திருமுறையில் அடங்கின. இவ்வாறு நம்பிகள் வகுத்த திருமுறை பதினொன்றாம்.

பண்ணமைப்பு

இத்திருமுறைப் பாடல்களின் பண்களையும் ஓதுவகையையும் அறிவித்தருளுமாறு அரசரும் நம்பிகளும் நடராசப் பெருமானிடம் வேண்டினர் பெருமான் அருளிச் செய்தபடி திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் மரபில் வந்த பண் முறைகளைத் தெரிந்திருந்த பெண்ணை அரசர் அழைப்பித்து நடராசப் பெருமான் சந்நிதியிலே அவ்வவற்றின் பண்முறைகளையும் அமைத்துக் கொண்டார்.

திருமுறைகளைப் பேணிச் சேமித்தமை

பின்னர் அரசர் திருமுறைப் பாடல்களை எல்லாம் சேப்பேடுகளில் எழுதுவித்துப் பாதுகாப்பாக அழியாதிருக்கும்படி செய்தார். அக்காலம் முதல் தமிழகத்துச் சைவக் கோயில்களிலெல்லாம் ஓதுவார்களை நியமித்து திருமுறைப் பாடல்களை பண்ணோடு பாராயணம் செய்து வருமாறு அரசர்கள் நியமனம் செய்தனர். இன்றுவரை அது தொடர்ந்து நடந்து வருகிறது.

பன்னிரண்டாந் திருமுறை

சில ஆண்டுகளின் பின் அநபாய சோழ அரசரின் வேண்டுகோளின்படி அவரது முதன் மந்திரியாகிய சேக்கிழார் நாயனார் நடராசப் பெருமானே "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்க பாடியருளிய திருத்தொண்டர் புராணம் ஆகிய பெரிய புராணம் சைவப் பேரறிஞர்கள் சபையில் அரசர் முன்பு அரங்கேற்றப்பட்டது. அப்பொழுது அறிஞரும் அரசரும் அந்நூலின் சிறப்பை நோக்கி அதனை பன்னிரண்டாந் திருமுறை நூலென ஏற்றுப் போற்றினர். இவ்வாறே சைவத்திருமுறைகள் பன்னிரண்டும் அமைந்தனவாம்

திருமுறைகள் அருளியோர்

முதலாம் இரண்டாம் மூன்றாம் திருமுறைகள் -தேவாரம்	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
நான்காம் ஐந்தாம் ஆறாம் திருமுறைகள்-தேவாரம்	திருநாவுக்கரசுநாயனார்
ஏழாந்திருமுறை-தேவாரம்	சுந்தரமூர்த்திநாயனார்
எட்டாந்திருமுறை திருவாசகம்-திருக்கோவையார்	மாணிக்கவாசக சுவாமிகள்
ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பா திருப்பல்லாண்டு	திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர் பூந்துருத்திகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள் திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர்
பத்தாந்திருமுறை திருமந்திரம்	திருமூலநாயனார்
பதினோராந்திருமுறை	அருளியோர் பன்னிருவர் (விபரம் வருமாறு)

01. திருமுகப் பாசுரம்	திருவாலவாயுடையார் (சிவபிரான்)
02. திருவாலங்காட்டுமூத்ததிருப்பதிகம் 03. மூத்ததிருப்பதிகம் 04. திருவிரட்டை மணிமாலை 05. அற்புதத்திருவந்தாதி	காரைக்கால் அம்மையார்
06. ஷேத்திரத் திருவெண்பா	ஐயடிகள் காடவர்கோன்
07. பொன்வண்ணத்தந்தாதி 08. திருவாரூர் மும்மணிக்கோவை 09. திருக்கயிலாய ஞான உலா	சேரமான் பெருமான் நாயனார்
10. கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி 11. திருவீங்கோய்மலை எழுபது 12. திருவெழுகடற்றிருக்கை 13. பெருந்தேவபாணி 14. கோபப்பிரசாதம் 15. காரெட்டு 16. போற்றித்திருக்கலிவெண்பா 17. திருமுருகாற்றுப்படை 18. திருக்கண்ணப்பதேவர் திருமறம்	நக்கீரதேவ நாயனார்

19. திருக்கண்ணப்பதேவர் திருமறம் - கல்லாடனார்

20. மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை
21. சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை கபிலதேவர்
22. சிவபெருமான் திருவந்தாதி

23. சிவபெருமான் திருவந்தாதி பரணதேவர்
24. சிவபெருமான் திருமும்மணிக்கோவை இளம்பெருமானடிகள்

25. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை அதிராவடிகள்

26. கோயில் நான்மணிமாலை
27. திருக்கழுமல மும்மணிக்கோவை
28. திருவிடை மருதூர் மும்மணிக்கோவை பட்டினத்தடிகள்
29. திருவேகம்பமுடையார் திருவந்தாதி
30. திருவொற்றியூர் ஒருபா ஒருப·.து

31. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
32. கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம்
33. திருத்தொண்டர் திருவந்தாதி
34. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி நம்பியாண்டார் நம்பி
35. " திருச்சண்பை விருத்தம்
36. " திருமும்மணிக்கோவை
37. " திருவுலாமாலை
38. " திருக்கலம்பகம்
39. " திருத்தொகை
40. திருநாவுக்கரசுநாயனார் திருஏகாதசமாலை

பன்னிருவர் பாடிய 40 பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையிலுள்ளன.

பன்னிரண்டாந் திருமுறை

திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்) சேக்கிழார் நாயனார்

(நன்றி சைவசமயம் கொழும்பு விவேகானந்த சபை வெளியீடு)

பெறும் சுகம் பெறுபவர் யார்

தான் சுகம் பெறுவதில்லை என்று நினைக்கின்றவர்களால் தான் மற்றவர்களை வசப்படுத்த முடியும். எங்கும் தியாக குணம் இருந்தால் தான் சுகம், சௌகரியம் மேம்படும், வழிபிறக்கும். கணவரது நலனுக்காக தன் சுகத்தைப் பூரணமாக தியாகம் செய்யும் மகளிரைத் தான் முனிவர்கள் பதி விரதைகள் என்கின்றனர். மணவாளனை மகாவிஸ்ணுவாக மதிக்கும் மனைவிக்கும், மனைவியை மகாலட்சுமியாக கருதும் கணவனுக்கும் பெரும் சுகம் தரும் வேறு வைகுண்டம் எதுவும் தேவையில்லை.

திருவாவடுதுறை ஆதீன ஏட்டுப் பிரதியின் படி தேவாரப் பண்களுக்கு வகுத்துள்ள இராகங்கள்

இக்காலத்து ஓதுவார்கள் சிலர் பழைய இராகங்களை நீக்கிப் புதிய இராகங்கள் சிலவற்றைப் புகுத்தியிருக்கிறார்கள். அவர்கள் முறையைக் கீழே தருகிறோம்.

பண்கள்

பகற்பண்கள்	திருவாவடுதுறை முறையிலமைந்த இராகங்கள்	இக்காலத்து ஓதுவார்கள் கூறும் இராகங்கள்
1. புறநீர்மை	ஸ்ரீகண்டி	பூபாளம்
2. காந்தாரம் பியந்தை	இச்சிச்சி	நவரோஜ்
3. கௌசிகம்	பைரவி	பைரவி
4. இந்தளம் திருக்குறுந்தொகை	நௌிதபஞ்சமி	நாதநாமக்கிரியை
5. தக்கேசி	காம்போதி	காம்போதி
6. நட்டராகம் சாதாரி	பந்துவராளி	பந்துவராளி
7. நட்டபாடை	நாட்டைக்குறிஞ்சி	நாட்டை
8. பழம்பஞ்சுரம்	சங்கராபரணம்	சங்கராபரணம்
9. காந்தாரபஞ்சமம்	கெதாரகௌளை	கேதாரகௌளை
10. பஞ்சமம்	ஆஹிரி	ஆஹிரி

இராப்பண்கள்

1. தக்கராகம்	கன்னடகாம்போதி	காம்போதி
2. பழந்தக்கராகம்	கத்தசாவேரி	சுத்தசாவேரி
3. சீகாமரம்	நாதநாமக்கிரியை	நாதநாமக்கிரியை
4. கொல்லி, திருநேரிசை, கொல்லிக்கௌவாணம் திருவிருத்தம்	சிந்துகன்னடா	நவரோஜ்
5. வியாழக்குறிஞ்சி	ஸௌராஷஸட்ரம்	ஸௌராஷ்ட்ரம்
6. மேகராகக் குறிஞ்சி	நீலாம்பரி	நீலாம்பரி
7. குறிஞ்சி	மலகரி	அரிகாம்போதி எதுகுலாம் போதியின் கலப்பு
8. அந்தாளிக் குறிஞ்சி	ஸைலதேசாட்சி	சாமா

பொதுப் பண்கள்

1. செவ்வழி	எதுகுலகாம்போதி	எதுகுலகாம்போதி
2. செந்துருத்தி	மத்தியமாவதி	மத்தியமாவதி
3. திருத்தாண்டகம்	பியாகடை	அரிகாம்போதி

ஆதாரம் அருட்டிரு விபுலாநந்த அடிகள் "யாழ் நூல்"

கோலம் ஏன் போடுகின்றோம்



அதிகாலை வேளையில் பளிச்சென்று சாணம் தெளித்து அதில் அரிசி மாவினால் வெண்மையாக கோலம் போட்டால், அதில் லக்ஸ்மி தேவி தாண்டவமாடுகிறாள். அதில் செம்மண் (காவி) இட்டால் பகவானையும் தாயரதையும் நம் வீட்டு வாசலில் வரவேற்பது போல் ஆகும். தவிர இந்துவாக பிறந்த ஒவ்வொருவரும் தினமும் பஞ்சமகாக்ஞும் (ஐந்து வகை யக்ஞும்) செய்ய வேண்டும் என்று சாஸ்திரங்கள் நம்மைக் கேட்டுக் கொள்கின்றன. தேவயக்ஞும், பித்ருயக்ஞும், பிரம்ம (ரிஸி) யக்ஞும், நரயக்ஞும், பூதயக்ஞும் என்பவையே அவையாகும். அதில் பூதயக்ஞும் என்பது நம்மை அண்டி வாழும் சிற்றுயிர்களைக் காத்தலாகும். இட்ட கோலம் எறும்பு போன்ற சிற்றுயிருக்கு உணவாகின்றது என்பதால் இது ஒருவகை பூதயக்ஞுமாக அமைகிறது.

இசையும் சமயமும்

எல்லாச் சமயங்களினதும் அடிப்படை நோக்கம் மனிதனைப் பரிபூரணமான பரம்பொருளிடமிட்டுச் செல்வதாகும். சமயக் கோட்பாடுகள் அனைத்தும் மனிதனை மனிதனாக்கி நாகரீகமடைய வைத்துப் பிறவிப் பயனைத் துய்க்கச் செய்யவே முனைகின்றன. இறைவனை அடைவதற்குப் பல நெறிகள் உண்டு. அவற்றுள் ஒன்றாக இசை நெறியுள்ளது. இசை மூலமே இறைவனை இலகுவாக அடையலாம் என்னும் கருத்து சமயவாதிகளிடையே பரவலாகக் ாணப்படுகிறது. அதனால் இந்து சமயம் இசைக்கு முதலிடம் கொடுத்துள்ளது. (Sambamoorthy 1969 : 27)

கடவுளிடம் மனிதரையும், மனிதரிடம் கடவுளையும் இசைய வைப்பதே இசை. இசைவடிவமே இறைவன் என்பர். அதனால்தான் இறைவனை நாதப்பிரமம் எனவும் கூறுவர். அப்பர் சுவாமிகள் " ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்றும் சுந்தரர் "ஏழிசையாய் இசைப்பயனாய்" இருக்கிறான் இறைவன் என்றும், அருணகிரியார். "நாதபிந்து கலாதீ நமோ, நம" என்றும் கூறுவதிலிருந்து இதனை உணரமுடிகிறது.

இசை ஆழம் காணமுடியாதது. அளக்கும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. எம்மை எல்லையற்ற பரம்பொருளிடை அழைத்துச் சென்று சில வினாடிகளாவது களிக்கச் செய்கிறது. என்பர் கார்லைல் (Carlyle) என்னும் அறிஞர்.

கடவுள் மனிதனுக்களித்துள்ள பெரும் பரிசு இசையேயாகும். இ்.தொன்றுதான் விண்ணுலகிலிருந்து மண்ணுலகுக்கு வந்த கலை விண்ணுலகுக்கு 'நாம் எடுத்துச் செல்லும் கலையும் இதுவேயாகும். என்பர் அமெரிக்கக் கவிஞர் லோங்பெ்.லோ (Longfellow).

இறைவன் எமக்களித்த நாதரூபமான இசை இருவகைப்படும். ஒன்று செவிக்குப் புலனாவது. மற்றொன்று செவிக்குப் புலனாகாதது. இதனை கீட்ஸ் (Keats) எனும் ஆங்கிலக் கவிஞன் பின்வருமாறு கூறுகிறான்.

" Heard melodies are Sweet
But those unheard are Sweeter "

'செவியுணர்ந்த கானமே மிகவினியதாயினும். செவியுணராக் கானமே மிகமிகவும் இனியதாம்' என்பது இதன் பொருளாகும். (Evans 1.1963: 06)

இறைவனுக்கு நிவேதனப்பொருள் இசைதான். இசையினூடாகத் தான் கடவுளிடம் நாம் பக்தி செலுத்த முடியும். அவனைச் சிக்கெனப் பிடிப்பதற்கும் இசையே உதவுகிறது. இதனை சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட சிவபிரான் அசரீரியாக ஆணையிட்டதன் மூலம் உணரலாம்.

*"அர்ச்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
தூமறை பாடும் வாயார்"*

(தடுத்தாட் கொண்ட புராணம் :70)

இவ்வாணையை ஏற்றுச் சுந்தரர் வாணாள் முழுவதும் இறைவனை இசைத் தமிழாகிய தேவாரம் பாடி மகிழ்வித்தார்.

தமிழகத்தில் வாழ்ந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் நாளுமிசைத் தமிழால் இறைவனைப் போற்றி வழிபட்டனர். சங்க காலத்தையடுத்து வாழ்ந்த காரைக்காலம்மையார் திருவாலங் காட்டில் நடராஜப் பெருமான் ஆடிய திருநடனத்திலீடுபட்டுப் பாடிய பாடலில் அக்கால இசை பற்றியும் இசைக்கருவிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

*"துத்தம் கைக்கிளை விளரி தாரம்
உழை இளி ஒசைபண் கெழுமப்பாடி
சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்
தமருகம் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரைவினோ டாடும் எங்கள்
அப்பனிடம் திருவாலங்காடே"*

(திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்:09)

" காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய்தன் பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே"

(திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 2:11)

எனும் அம்மையாரின் பாடல் வரிகளும் அக்காலத்தில் பத்தர்கள் பாடி ஆடி வழிபட்டனர் என்பதனை வலியுறுத்தக் காணலாம். பக்திநெறிக் காலமெனப் போற்றப்படும் பல்லவர் காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தத்தம் சமயங்களைப் பரப்புவதற்கும், கோயில் தோறும் சென்று வழிபடுவதற்கும் பாடல்கள் பல இயற்றினர். இதனால் இசைக் கலை பக்தி இயக்கத்தோடு இயைந்து வளரத் தொடங்கியது.

நாயன்மார்களுள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் இறைவழிபாட்டிற்கு உறுதுணையாக இசையைப் போற்றி வளர்த்தனர்.

"பண்ணிற் பாடல்கள் பக்திசெய் வித்தகற்கு
அண்ணித்தாகும் அமுது....
"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"

என்பன அப்பர் சுவாமிகள் பாடிய பாடலடிகளாகும்.

"கீதத்தை மிகப் பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி
பயிலுமிடம்;"

என்பர் சம்பந்தர்

"ஏழிசையாய் இயற்பயனாய்
என்னுடைய தோழனுமாய்......
இருப்பவன் சிவபிரான்

எனப் போற்றுவர் சுந்தரர்

பன்னிரு ஆழ்வார்களும் இசைப்பாடல்களால் இறைவனைப் பாடிப் பரவினர் என்பதற்கு அகச்சான்றுகள் பலவுண்டு.

"பண் இன்பம் வரப்பாடும் பத்தருள்ளார்
பரமான வைகுந்தம் நண்ணுவாரே"
"இன்னிசை மாலைகளிப் பத்தும் வல்லார்
உலகில் எண்டிகையும் புகழ்மிக் கின்பம
தெய்துவரே"

எனப் பெரியாழ்வார் இசைப்பர்.

" குலசேகரன் இன்னிசையில் மேவி"
சொல்லிய இன்தமிழ் மாலை பத்தும்
சொல்ல வல்லார்க்கில்லை துன்பந்தானே"
" கலியன தமிழிவை விழுமிய இசையினொடு
ஒலிசொலு மடியவர் உறுதுயரிலரே" (1717)

என்பர் குலசேகராழ்வார்

ஆண்டாள் நாச்சியார் பாடிய பாடல்களிலிருந்து அக்காலத்தில் மங்கல நிகழ்ச்சிகளின் போது மத்தளங் கொட்டுதல். வரிசங்கம் ஊதுதல் ஆகிய இசை நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என அறிய முடிகிறது. மணிவாசகரும் இறைவனை நோக்கி,

"பாட வேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்து உருகி நெக்கு நெக்கு
ஆடவேண்டும் நான் போற்றி......"

என உளமுருகிப்பாடுவர்

(நீத்தல் விண்ணப்பம் 100)

திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார் போன்ற பாணர்கள் யாழ் கொண்டு மீட்டி இசைத்தமிழ் பாடி இறைவனைப் போற்றினர். ஆனாய நாயனார் குழலிசை மீட்டி வீடுபேறெய்தினார். இசையின் துணை கொண்டு நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமண பௌத்த மதங்களை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டனர்.

தேவாரத்தில் 103 பண்கள் இருந்தன என்று பிங்கலந்தை நிகண்டு மூலம் அறிய முடிகிறது. இப்போது உள்ள தேவாரப் பாடல்களில் 23 பண்களே காணப்படுகின்றன. சதாரி. குறிஞ்சி நட்ட பாடை, இந்தளம், வியாழக்குறிஞ்சி, சீகாமரம், பியந்தைக் காந்தாரம், செவ்வழி, கொல்லி, கொல்லிக் கௌவாணம் மேகராகக் குறிஞ்சி முதலான பண்கள் குறிப்பிடத்தக்கன. யாழ் வீணை, குழல், கின்னரி, கொக்கரி, சச்சரி, தக்கை, முழவம்,மொந்தை, மிருதங்கம், தமருகம்; துந்துபி, குடமுழா, தத்தலம், முரசம், உடுக்கை, தாளம், துடி, கொடுகட்டி ஆகிய இசைக்கருவிகளின் பெயர்களும் நாயன்மார்களாற் குறிப்பிடப்படுகின்றன. பக்திநெறி வளர்ச்சிக்கு இப்பண்ணிசையும் இசைக்கருவிகளும் பெருந்துணை நின்றனவென்பது புலப்படுகிறது.பல்லவர் கால மன்னர்களும் இசை வளர்ச்சியிற் பெரும் பங்கு கொண்டனர். மகேந்திர பல்லவன் 'சங்கீரண' எனும் தாளத்தைக் கண்டறிந்தான் எனச் சொல்லப்படுகிறது. அதனால் அவன் 'சங்கீரணசாதி' எனப்பட்டான்.

குடுமியாமலையில் இசைபற்றிய ஒரு கலவெட்டை இவன் தோற்றுவித்தான். 'பரிவாதினி' எனும் வீணை வாசிப்பதிலும் இவன் தேர்ச்சி மிக்கவனாகவிருந்தான். இராசசிம்ம பல்லவன் 'வீணாநாரதன்' 'வாத்திய வித்தியாதரன்' எனும் பட்டங்களைச் சூடப் பெற்றவனாகவிருந்தான். இத்தகைய இசைஞானம் மிக்க மன்னர்களின் ஆட்சியின்போது பக்திநெறி இசைப்பாடல்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்டதில் வியப்பேயில்லை.

தேவார காலத்திற்குப் பின்னர் சிறிது காலம் பண்களைப் பற்றிய தெளிவு இல்லாமற் போய்விட்டது. இந்நிலையில் தான் முதலாம் இராஜராஜசோழன் தேவாரத் திருப்பதிங்களை நம்பியாண்டார் நம்பியின் துணையுடன் திருமுறைகளாகத் தொகுப்பித்தான். திருஞானசம்பந்தரோடு உடனிருந்து இசையமுதை அளித்துவந்த திரு நீலகண்ட யாழ்ப்பாணர் என்பவரின் மரபில் வந்த மதங்கசூளாமணி எனும் அம்மையாரின் உதவியுடன் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண் வகுப்பித்தான். பின்னர் பண்ணிசை பயில்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தமிழகமெங்கும் பண்ணிசையைப் பரவச் செய்தான்.

சோழர்கள் பல கோயில்களிலும் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடுவதற்கு ஏற்பாடுகள் செய்தனர். அதற்கென மானியங்களை வழங்கினர். இதனைக் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. ஆகவே தொடர்ந்து மரபுவழியாகத் தேவாரப் பண்களாகிய இசைச் செல்வம் காக்கப்பட்டு வந்தது. (சதாசிவபண்டாரத்தார் 1974 : 567)

பன்னிரு ஆழ்வார்களும் பாடிய திருப்பாசுரங்களும் அவர்கள் காலத்தின்பின் அருகத் தொடங்கின. சோழராட்சியின் போது நாத முனிகள் என்பவர் அவற்றைத் தேடிக்கண்டெடுத்து 'நாலாயிரத்திவ்யப் பிரபந்தம்' எனும் பெயரில் தொகுத்தார், தன்னுடைய மருமக்களாகிய மேலையகத்தாழ்வார் கீழையகத்தாழ்வார் ஆகிய இசைவல்லுநர்களின் உதவியுடன் அவர் இசையமைப்பித்தார். இத்திருப்பாசுரங்களும் இதன் பின்னர் வைணவக் கோயில்களில் ஓதப்படலாயின. "தேவாரப் பாசுரங்களில் இல்லாத சில பண்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ளன. வியந்தம், முதிர்ந்த குறிஞ்சி, பாலை யாழ், செருந்தி நாட்டம், அந்தாதி, தோடி, கௌவாணம், பியந்தை, குறண்டி, முதிர்ந்த இந்தளம் என்பனவே அவைகளாகும்" (சிவபாலன் : 1983 : 50)

கோயில்களில் பண்ணிசை முறைப்படி ஓதப்பட்டு வந்த காரணத்தால். தமிழிசை காக்கப்பட்டு வந்தது. கோயில் விழாக்களில் ஆடப்படும் நடனங்களால் வழி வழியாகத் தமிழிசை போற்றப்பட்டு வந்தது. அவ்வாறே நாடகங்களில் பெரும்பங்கு கொண்டு அமைந்த இசைப் பாடல்களால்-கீர்த்தனை, சிந்து முதலியவற்றால் தமிழிசை வழி வழியாகக் காக்கப்பட்டு வந்தது. பண்ணிசையும் போற்றப்படலாயிற்று (வரதராசன் 1968 : 113)

சோழரும் பாண்டியரும் வீழ்ச்சியுற்ற பின்னர் தமிழ்நாடு அயலாருக்கு அடிமையாயிற்று. விஜயநகர மன்னர்களும். இவர்களுடைய பிரதிநிதிகளாகிய நாயக்க மன்னர்களும் ஆட்சி செய்தபோது தமிழ் இசைக்கலைஞர்களும் ஏனைய கலைஞர்களும் பேணுவாரற்றனர். இந்நிலையில் தெலுங்கிசை தமிழகத்தில் நுழைந்தது. தமிழிசை தளர்ந்தது. இருந்த போதும் இசைநயம் மிக்க நூல்கள் சில எழுந்தன. திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, அருணகிரிநாதரின் திருப்புகழ் என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் திருப்புகழ் முருகன் புகழ்பாடும் அரிய பக்திரசம் ததும்பும் இசைத்தமிழ் நூலாகும்.

நாயக்க மன்னர் காலத்தில் 'கீர்த்தனை' எனும் இசைப்பாவடிவம் தமிழகத்தில் வந்து நுழைந்தது. 'கீர்த்தனை' என்பது இறைவனுடைய கீர்த்திகளைப்பாட எழுந்த இசைப்பா வடிவமாகும். தியாகையர் முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோர்- நூற்றுக்கணக்கில் கீர்த்தனைகளைப் பாடிக் குவித்தனர். இந்தக் கீர்த்தனைகளைப் பின்பற்றி அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ணபாரதியார் வேதநாயகம்பிள்ளை போன்றோரும் தமிழிற் கீர்த்தனைகளை எழுதினர் என முன்னரே கூறப்பட்டது. (பக்கம் : 167)

கோயில்களில் செந்நெறியிசையாக, பக்தியிசை வளர்ச்சி பெற்று வந்ததுபோல நாட்டார்

இசையினூடாகவும் பக்திநெறி முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இளங்கோவடிகள் அம்மானை வரி, கந்துகவரி. பாடுவதற்கும், மாணிக்கவாசகர் சாழல், தெள்ளேணம், திருவுந்தி முதலியவை பாடுவதற்கும், நாட்டார் இசையே காரணமாகும், காவடி, கரகம், கும்மி ஆகிய நேர்த்திக்கடன் நிகழ்ச்சிகளின்போது பக்தர்கள் ஒன்று சேர்ந்து உடுக்கடித்துப் பாடிச் செல்வது இன்றும் நடைபெறுகிறது.

சின்னமுத்து, பொக்கிளிப்பான் ஆகிய தொற்றுநோய்கள் கிராமங்களில் ஏற்பட்டால், உடுக்கடித்து 'மாரியம்மன் தாலாட்டு' கண்ணகி கதை' அம்மாவை என்பனவற்றைப் பாடும் வழக்கம் இந்துக்களிடையே இன்றும் உள்ளது.

'சின்னமுத்தொடு பொக்கிளிப்பான் - அம்மா
சிதறி முத்தெறியாமலே
நோய்வந் தணுகாமலே - தாயே
நுட்பமாகக் காருமம்மா"

எனும் பாடல் வரிகள் இதற்குத் தக்க சான்றுகளாகும்.

முன்னர் யாழ்ப்பாணத்தில் பெருவழக்காயிருந்த உடுக்கடி கதை இன்று மறைந்து கொண்டு வருகிறது. ஆனால் அது காத்தவராயன் கூத்து வடிவம் பெற வழிவகுத்தது. காத்தவராயன் கூத்தின் போது கடவுளை வேண்டிய.

"ஓரானைக் கண்ணே கண்ணே - எங்கள்
உமையாள் பெற்ற பாலகனே
ஈரானைக் கண்ணே கண்ணே -எங்கள்
ஈஸ்வரியாள் பெற்ற பாலகனே "

எனப்பாடும் போது பக்தி பெருகாமல் இருக்க முடியாது. தென்னிந்தியாவிலும். ஈழத்தில் மலையகத்திலும், காமன் கூத்தின்போது 'தப்பு' எனும் வாத்தியத்தை வாசித்த வண்ணம்.

" முந்தி முந்தி விநாயகரே - எங்கள்
முக்கணனார் புத்திரனே
கந்தருக்கு முன் பொறந்த - எங்கள்
கணபதியே காருமையா"

என விநாயகரை வேண்டிப்பாடும் போதும் உள்ள முருகாதோரும் உருகுவர்.

காரைநகரிலுள்ள அண்ணாமார் கோயிலில், நோயினாற் பீடிக்கப்பட்டவர்கள் நேர்த்திக்கடன் வைத்து வழிபாடியற்றுவர். அப்பொழுது அவர்கள் பாடும் பாடல் வரிகள் சில பின்வருமாறு;

"பேதை பிழைபொறுப்பாய் அண்ணமாரே -எங்கள்
பிணிகளை நீ போக்குவாயே அண்ணமாரே
ஏழை பிழை பொறுப்பாய் அண்ணமாரே - வரும்
இன்னல்களை நீக்குவாயே அண்ணமாரே"

முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்துக்கு பாதயாத்திரையாக முருகனடியார்கள் செல்வதுண்டு. வற்றாப்பளை அம்மன் கோயிற் பொங்கலுடன் ஆரம்பமாகும் இந்த யாத்திரை முல்லைத்தீவு, புல் மோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோவில் வழியாகக் கதிர்காமம் சென்றடையும்.

" பாக்குத்தா வெற்றிலைதா பாலமுதம்
சர்க்கரைதா வாக்குத்தா கந்தா
வடபழனி வேலவனே
இல்லையோ தெய்வம் இருந்தால்
இரங்காயோ -
கருங்கல்லையோ நான் தொழுதேன்
கண்டிக்கதிர்காமத் தையாவே"

(தகவல் : பேராசிரியர் கா.சிவத்தம்பி)

மேலே குறிப்பிட்ட நாட்டாரிசைப் பாடல்களைத் தவிர இன்றும் சுவாமி உலாவரும்போது பஜனைப் பாடல்களைப் பாடுதல், கோயிலில் கூட்டுப் பிரார்த்தனை செய்தல் என்பனவும் பக்தி இசை வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்தியாவில் ஆயிரக்கணக்கில் பக்திப் பாடல்கள் எழுந்த அளவுக்கு உலகில் எந்த நாட்டிலும் எழவில்லை. தமிழில் மட்டும் ஆயிரக் கணக்கில் பக்திப் பாடல்கள் எழுந்துள்ளன. தேவாரம், திருவாசகம, திருப்புகழ, நாலாயிரத் திவ்யபிரபந்தம், திவ்ய நாமகீர்த்தனைகள் உற்சவ சம்பிரதாய கீர்த்தனைகள், 'அஷ்டபதி' நாமாவளிகள்.

மங்களங்கள், அருட்பா எனப் பற்பல பக்திப் பாடல்கள் பஜனைகளின் போதும், கூட்டுப் பிரார்த்தனைகளின் போதும், பல்வேறு வழிபாட்டு நிகழ்ச்சிகளின் போதும் பாடப்படுவதை நாம் காணலாம்.

இப்பொழுது பெரும்பாலும் பஞ்சபுராணம் ஓதும் மரபு உள்ளது. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஆகிய ஐந்தும் ஓதப்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட ஐந்துவகைப் பாடல்களுடன் திருப்புகழையும் சேர்த்துப் பாடும் மரபும் உள்ளது. திருக்கோயில்களிலே இடம்பெறும் நித்திய நைமித்திய பூசைகளின்போது இறைவனை ஆடல், பாடல் மூலம் வழிபடும் மரபு புராதனமானது. இறைவனுக்குச் செய்யப்படும் பதினாறு வகை உபசாரங்களுள் (ஷோடச) கீதோபசாரமும் நிருத்தோபசாரமும் அடங்கும். கீதோபசாரமாக வேதமந்திரங்கள், சுலோகங்கள், திருமுறைகள், திருப்பாசுரங்கள் என்பன ஓதப்படுகின்றன.

திருக்கோயில்களில் நடைபெறும் நைமித்தியக் கிரிகைகளின் போது கொடியேற்றம், கொடியிறக்கம் ஆகிய இரு நிகழ்ச்சிகளில் இடம் பெறும் நவசந்திக் கிரிகைகள் முக்கியமானவை. 'துவஜஸ்தம்ப பூசை முடிந்ததும் சகல விக்கினங்களையும் நீக்குபவராகிய பிள்ளையாருக்கு கணபதி தாளம் முதலிற் சொல்லப்படும். அவருக்குரிய வேதம், பண், இராகம் முதலியன இசைக்கப்பட்டதும் மூலமூர்த்தியின் வாகனத்துக்குரிய தாளம் (விருஷப தாளம் மூர்க தாளம், சிம்ம தாளம் மயூர தாளம் முதலியன) இசைக்கப்படும். (கோப்பாய் - சிவம் 1986 -78) நவசந்திக் கிரிகைகளின்போது பலவகையான பண்கள, இராகங்கள், தாளங்கள் வாத்திய இசைகள் என்பனவற்றைக் கேட்பது அரிய பேறாகும். (Sambamoorthy 1969 : 30)

நித்திய நைமித்திய பூசைகளின்போது கோயில்களில் மிடற்றிசை மட்டுமன்றி, இசைக் கருவிகளையும் வாசித்துவரும் மரபு தொன்று தொட்டு வருகின்றதென்பதற்கு இலக்கியச் சான்றுகளும், கல்வெட்டுச் சான்றுகளும் நிறைய உண்டு. சோழப்பெரு மன்னர்கள் இத்தகைய கலைஞர்களுக்கு மானியங்கள் வழங்கி வந்துள்ளனர்.

அனுதினமும் நான்காம் சாமத்தில் சங்கு முழங்க நாதஸ்வரம் இசைக்க இறைவன் துயிலெழுப்பப்படுகிறான். இன்னநேரம் இன்ன இராகம் வாசிக்கப்படல் வேண்டும் என்னும் விதிமுறைக்கேற்ப நாதஸ்வரக் கலைஞன் வாசிக்க, அதற்கேற்ப தவில் வித்துவான் தனது வாத்தியத்தை இசைப்பான். சுவாமி உலா புறப்படுவதிலிருந்து இருப்புக்கு வரும்வரை ஒவ்வோரிடத்திலும் நாதஸ்வரக் கலைஞனும் தவிற் கலைஞனும் பத்திரசம் ததும்ப வாசித்தல் உள்ளத்தை நெகிழவைக்கும். ஆண்டவன் தேரடியை அணுகியதும் ரக்தி மேளம் வாசித்தல் மரபு. நாதஸ்வரம், தவில், சங்குவாத்தியம், கொம்பு வாத்தியம், சல்லரி என்பன தமிழக, ஈழக் கோயில்களில் இசைக்கப்படும் இசைக் கருவிகளாகும்.

கேரளத்தில், வழிபாட்டின்போது, திமிலை சுத்த மத்தளம், இடக்கை, எலத்தாளம், கொம்பு ஆகிய பஞ்ச வாத்தியங்களை வாசிப்பர். கேரளத்தில் சுவாமி ஊர்வலத்தின்போது செண்டை வாத்தியத்தைக் கட்டாயமிசைப்பர். திருவாரூர்க் கோயிலில் பஞ்சமுக வாத்தியம் ஏனைய வாத்தியங்களுடன் இசைக்கப்படுகிறது. இங்கே பயன்படுத்தப்படும் பாரிநாயனம் தியாகேசருக்கு உகந்த கருவியாகும்.(வீருசாமிப்பிள்ளை 1968 : 183) இவ்வாறு இசைக்கலை கோயில் வழிபாட்டில் இரண்டறக் கலந்து பக்திநெறிக்கும் ஆன்ம ஈடேற்றத்துக்கும் காலாக விளங்குகிறது.

தைரியமே மனிதனுக்கு துணை. பெரியோர்களை அடுத்தே மனிதன் புத்திமான் ஆகின்றான். மக்களைத் தாங்கும் தாய் பூமியை காட்டிலும் கனமானவள். ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தவர் தந்தை, காற்றைக் காட்டிலும் வேகமானது மனம். புல்லிலும் அற்பமானது கவலை. யாத்திரை செல்பவனுக்கு தோழன் வித்தை, வீட்டில் இருப்பவனுக்கு தோழன் மனைவி. இறக்கும் வயோதிபனுக்கு நண்பன் தானமே. நல்லொழுக்கம் சுகம் தரும். கர்வத்தை விடுபவன் மற்றவருடைய அன்புக்கு பாத்திரமடைகிறான். கோபத்தை விட்டால் துயரம் போகும். ஆசையை அகற்றுபவன் செல்வந்தன் ஆகிறான்.

மகாபாரதம்

கலாபூஷணம் விருது வழங்கல் நிகழ்வுகள்

"தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியின் நிகழ்வுகள்









சுதந்திர தின பூஜை வழிபாடுகளின்பொழுது

இரத்தினபுரி மாவட்டத்தில் நடைபெற்ற மகாசிவராத்திரி விரத வைபவம்

ஆழ்வார்கள் காட்டும் சிவ வடிவங்கள்

சிவனும் மாலும்

சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம் தெய்வத்தின் மேற்றெய்வம் இல்லெனும் நான்மறைச் செம் பொருளைச் சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளும் எடுத்துக்காட்டுவது போல, கார்முகில் வண்ணனாம் திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு திருமாலிய நெறியைப் போற்றும் பெற்றியன நாலாயிரத் திவ்ய பிரபந்தப் பாசுரங்களாகும். இவ்வாறு பன்னிரு திருமுறைகளும், திவ்வியப் பிரபந்தப் பாடல்களும் அடிப்படை நோக்கில் இருதிறத்தன வாயினும் அவையிரண்டும் சைவ வைணவச் சமயப் பிணக்கில்லாக் காலத்தில் தோன்றினவாதலின் ஏற்புடைய இடங்களில் பன்னிரு திருமுறையுள் திருமாலையும், திவ்வியப் பிரபந்தத்தில் சிவ பெருமானையும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளமையை அவற்றை நுண்ணிதின் கற்போர் உணர்ந்து இன்புறலாம்.

மகேஸ்வர வடிவங்களும் பிறவும்

மகேஸ்வர வடிவங்கள் எனப்பெறும் இருபத்து ஐந்து சிவவடிவங்களுள் பன்னிரண்டு வடிவங்களைத் திவ்வியப் பிரபந்தத்துள் குறிப்பிட்டுள்ள ஆழ்வார் பெருமக்கள் சிவபெருமானுடன் தொடர்புடைய சடை, கங்கை, நாகம், கொன்றை, சூலம், மழு ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆறுவடிவப் பெயர்களையும் சுட்டியுள்ளமை காணலாம்.

சிவன் அணிந்துள்ளமை

சிவன் செஞ்சடையினையும், சடையில் அணிந்துள்ள கங்கையையும், நாகத்தையும், கொன்றை மாலையினையும் சுட்டியுள்ள ஆழ்வார்கள் சிவன் கரங்களில் ஏந்தியுள்ள சூலத்தையும் மழுவினையும் குறித்துள்ளனர்.

ஜடாதரன்

சிவன் சடையினைச் *செஞ்சடை* (பெரி.41-1-5) *வார் சடை* (பொய்.முதல் 74), *புன்சடை (மழி திரு.42), தாழ்சடை* (பேய்.மூன் 63) என்று குறிப்பிட்டுள்ள ஆழ்வார்கள், சிவனைச் *சடையான* (நம்.3-1-10), *வார்சடை ஈசன* (மங்கை.4-2-9), *சடைமுடியன* (நம்.4-8-10) என்றும் பெயரிட்டழைத்துள்ளனர்.

கங்காதரன்

கங்கையைச் சடைமுடியில் அணிந்த சிவன் வடிவைக் *கங்கையான* (பெய்-முதல் 74), *ஆறுசடைக கரந்தான* (மழி. நான்.4), *வெள்ளிநீர்ச்சடையான* (நம்.5-10-4) என வருந் தொடர்களால் குறித்துள்ளனர்.

நாகாபரணன்

சடைமுடியில் நாகத்தினை அணிந்து தோன்றும் நாகாபரணனான சிவன் வடிவினை *'ஆடு அரவு ஆர்த்தாற்கும்'* என்று திருமழிசையாழ்வாரும் (நான்.91) ஐவாய் அரவாடு சடையோன் என்று திருவெழுகூற்றிருக்கையில் திருமங்கை மன்னனும் குறிப்பிட்டுள்ளனர்.

கொன்றை வேந்தன்

திருமுடியில் கொன்றை மாலை அணிந்த சிவன் வடிவை. 'தாதுடைக் கொன்றை மாலை துன்னு செஞ்சடை' என்று திருமழிசையாழ்வாரும் (திரு.9) பனைகொன்றையஞ் செஞ் சடையாய் என்று நம்மாழ்வாரும் (7-6-3) குறிப்பிட்டுள்ளனர். கொன்றை மாலையை மார்பில் சிவன் அணிந்துள்ள தோற்றத்தினை, 'கொங்கலர்த்தார் வளங்கொன்றை அலங்கல மார்பினன்' என்று திருமங்கையாழ்வார் (நெடுந்.9) குறிப்பிட்டுள்ளார்.

சூலபாணி

சூலத்தைத் தன் திருக்கரங்களில் ஏந்திய சூலபரியனான சிவன் வடிவைக் *'கொன்னவிலும மூவிலைவேற் கூத்தன்'* என்று திருமங்கை மன்னன் பெரிய திருமடலில் குறிப்பிட்டுள்ளார். சிவன் 'கையதுவேல்' என்பார் பொய்கையாழ்வார்.

மழுவாளி

தம் கரங்களில் மழு என்னும் ஆயுதத்தை ஏந்திய சிவனை மழுவாளி என்று திருமங்கை மன்னன் (7-9-4) குறித்துள்ளார். நம்மாழ்வாரும் வாள்கொள் நீள் மழுவாளி என்று(9-3-10) குறித்துள்ளார். 'ஓண்மழுவும்' என்பது பேயாழ்வார் தரும் குறிப்பு.

சிவன் மகேஸ்வர வடிவங்கள்

சிவன் ஐந்து முகங்களில் இருந்து தோன்றியனவாகக் கூறப் பெறும் இருபத்தைந்து சிவ வடிவங்களுள் நடராசர், இடபாரூடர், சந்திரசேகரர், பிட்சாடனர், காமாரி, திரிபுராரி, கஜாரி, வீரபத்திரர், தட்சிணாமூர்த்தி, நீலகண்டர், அர்த்தநாரி, அரியர்த்தர் முதலான பன்னிரு வடிவங்களை ஆழ்வார்கள் தம் பாசுரங்களுள் குறிப்பிட்டுள்ளனர்.

ஈசான மூர்த்த வடிவங்கள்

சிவபெருமானுடைய உச்சி நோக்கிய ஈசான முகத்தினின்று தோன்றியதான ஐந்து சிவ வடிவங்களுள் சோமாஸ்கந்தர்,கல்யாணசுந்தரர் ஆகிய இருவடிவங்கள் நீங்கலாக ஏனைய மூன்று வடிவங்களும் ஆழ்வார்களால் குறிப்பிடப் பெற்றுள்ளன.

ஆடல் வல்லான்

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நடராசப் பெருமானைப் பிணங்கள் அடுகாடு அதனுள் நடமாடும் (2-6-9) என்று குறிப்பிட்டுள்ள திருமங்கையாழ்வார். அத்திருநடனச் சிறப்பைத்தன் பெரிய திருமடலில்.

"ஆயிரந்தோள் மன்னுகர தலங்கள் மட்டித்து
மாதிரங்கள் மின்னி எரிவீச மேலெடுத்த சூழ்கழற்
கால்பொன்னுலகம் ஏழும் கடந்து உம்பர்மேற்
சிலம்ப மன்னு குலவரையும் மாருதமும்
தாரகையும்
தன்னுடனே சுழலச் சுழன்று ஆடும் "

என்று குறிப்பிட்டுள்ளார்.

இடபாரூடர்

சிவன் இடபாரூடர் வடிவைப் பெரியாழ்வார், மங்கை மன்னன், குலசேகரர், மழிசையார், தொண்டரடிப் பொடியார், பூதத்தார், பொய்கையார், நம்மாழ்வார் எனவரும் எட்டு ஆழ்வார் பெருமக்கள் பத்தொன்பது பாசுரங்களில் குறித்துப் போற்றியுள்ளனர்.

ஒற்றை விடையானும்	(பெரி.4-10-4)
விடையோன்	(குல.9-4)
போரேறு ஒன்றுடை யானும்	
மங்கை	(2-10-8)
ஏற்றான்	(பொய்.முதல்.74)
ஏறது ஊர்தி	(திருமழி.திரு.72)
ஏறாளும் இறையோனும்	(நம.4-8)
ஏறும் ஏறி	(பூத.இரண்.63)

எனவருந் தொடர்களால் ஏறுடை எந்தையை ஆழ்வார்கள் எழுவரும் குறிப்பிட்டிருக்க, தொண்டரடிப் பொடியாழ்வார் சிவனைப் பதினொரு விடையர் (திருப். 6) என்று சுட்டியிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

பிறைசூடி

பிறைசூடிய பெம்மான் சிவன் தன் சந்திரசேகர வடிவைக் குலசேகரர், மழிசையார், பாணாழ்வார், மங்கை மன்னன், பூதத்தார், நம்மாழ்வார் என வரும் ஆழ்வார் அறுவரும் பதினைந்து பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

பிறையேறு சடையானும்	(குல. 4-8)
கீறு திங்கள் வைத்தவன்	(மழி.திரு. 42)
துண்டவெண் பிறையன்	(பாண.அமல. 6)
பிறைதங்கு சடையான்	(மங்கை. 3-4-9)
ஒற்றைப்பிறை இருந்த செஞ்சடையான்	(பூத.இரண். 17)
ஒற்றைப் பிறை அணிந்தான்	(நம. 1-9-10)

எனவரும் பாசுரத் தொடர்கள் சிவன் அணிந்துள்ள பிறை வடிவைச் சுட்டியிருத்தல் காணலாம்.

தத்புருஷமூர்த்த வடிவங்கள்

கிழக்கு நோக்கிய சிவன் தத்புருஷ முகத்தினின்று தோன்றிய காலாரி, சலந்தராரி எனும் இருவடிவங்கள் நீங்கலாக ஏனைய மூன்று வடிவங்கள் ஆழ்வார்களால் குறிப்பிடப்பட்டுள்ளன.

பலியுண்ணி

பிட்சாடனர் எனப்பெறும் இச்சிவவடிவினை நக்கன் (4-4-2) தலை கொண்ட உலகு ஏழும் திரியும் பெரியோன் (1-5-8) திரியும் ஈசன் (5-9-4) எனவரும் தொடர்களால் மங்கை மன்னன் குறித்துள்ளார். நம்மாழ்வார் இச்சிவவடிவை 'நக்கபிரான்' (1-9-5) என்று குறிப்பிட்டுள்ளார்.

காமாரி

காமனைக் கண்ணழகால் விழித்தழித்த சிவன் வீரட்ட வடிவினைத் திருமழிசையாழ்வார் *'காமனுடல் கொண்ட தவத்தான்'* (நான். 78) என்று குறிப்பிட்டுள்ளார்.

புரம் எரித்தோன்

முப்புரம் எரி செய்த அச்சிவன் வடிவினை மங்கை மன்னன் நான்கு பாசுரங்களிலும் நம்மாழ்வார் மூன்று பாசுரங்களிலும் ஆக ஆழ்வார் மூவரும் ஒன்பது பாசுரங்களால் குறித்துள்ளனர்.

புரம் எரிசெய்த சிவன் (மங். 2-3-1)
மாமதில் மூன்றெய்த இறையான் (பொய்.முதல் 28)
திரிபுர எரித்தவன் (நம். 1-3-9)

என்று திரிபுரம் எரித்த சிவனைக் குறித்தள்ளனர் ஆழ்வார்கள். எயில் மூன்றினை எரித்த (நம். 7-6-7) சிவன் வீரச்செயலை *'நண்ணார் நகரம் விழ நனிமலை சிவன் வளைவு செய்து* (மங்.6-1-3) என்று குறிப்பிட்டுள்ள திருமங்கையாழ்வார் புரம் எரிசெய்த விரைவுக் குறிப்பினை, *'புரங்கள் மூன்றும் ஓர் மாத்திரை போதில் பொங்கு எரிக்கு இரை கண்டவன்'* (மங்.க. 10-2-9) எனும் தொடரால் குறிப்பிட்டுள்ளார்.

அகோர வடிவ மூர்த்தங்கள்

தெற்குத்திசை நோக்கிய சிவன் அகோர முகத்தினின்று தோன்றிய கஜாரி, வீரபத்திரர், தட்சிணாமூர்த்தி, நீலகண்டர் எனும் நான்கு வடிவங்களை ஆழ்வார்கள் குறித்துள்ளனர்.

கஜாரி

தாருகாவன முனிவர்கள் இயற்றிய வேள்வியினின்றெழுந்த யானையைவென்று அதன் தோலைப் போர்வையாகப் போர்த்துகந்த சிவன் கஜாரி வடிவினைத் திருமங்கையாழ்வார் *'உரியானை உகந்தான்'* (7-6-6) எனுந்தொடரால் குறிப்பிட்டுள்ளார்.

வீரபத்திரர்

தக்கன் வேள்வியைத் தகர்த்தருளிய சிவன் வீரபத்திர வடிவைத் தட்சயக்ஞவதர் எனவும் குறிப்பிடுவர். சிவன் வேக வடிவங்களுள் ஒன்றான இவ்வீரட்டச் செயலைப் புரிந்த சிவன் திறத்தைத் *'தக்கன் வேள்வி தகர்த்த தலைவன்'* (5-2-6) என்று திருமங்கை மன்னன் தம் பாசுரத்துள் குறித்துப் போற்றியுள்ளார்.

ஆலமர் செல்வன்

தென்முகம் நோக்கிய சிவபெருமானுடைய தெட்சணாமூர்த்தி வடிவச் சிறப்பினைத் திருமழிசையாழ்வாரும் பொய்கையாழ்வாரும் குறித்துச் சிறப்பித்துள்ளனர்.

ஆலநிழற்கீழ் அறநெறியை நால்வர்க்கு
மேலையுகந்து உரைத்தான் (திருமழி.நான் 17)
ஆரமர நீழல் அறம் நால்வர்க்கு
அன்றுரைத்த (பொய்.முதல். 4)

என்பன திவ்யபிரபந்தத் தொடர்களாகும்.

நீலகண்டர்

தேவர்களைக் காக்க வேண்டிப் பாற்கடலில் இருந்து எழுந்த ஆலகால விஷத்தை அருந்தியருளிய சிவன் திருநீலகண்ட வடிவினை பெரியாழ்வார், மழிசையார், மங்கை மன்னன், பூதத்தார், பொய்கையார், நம்மாழ்வார் முதலான ஆழ்வார் அறுவரும் பன்னிரு பாடல்களில் குறித்துள்ளனர்.

நீலகண்டனும் (பெரி. 4-1-5)
கறுத்த கண்டன் (மழி.திரு. 113)
ஆலம் அமர் கண்டத்த அரண் (பொய்.முதல். 4)
கடல் நஞ்சுண்ண (மங்கை. 6-1-2)
கடல் நஞ்சுண்ண (பூத.இரண். 96)
நீலமார் கண்டத்து அம்மானும் (நம். 6-10-8)

எனும் பாசுரத்தொடர்கள் ஆழ்வார் அருளிய திருநீலகண்ட வடிவத் தொடர்களாகும்.

சத்யோசாத வடிவங்கள்

வடதிசை நோக்கிய சிவன் வாமதேவ வடிவங்கள் ஐந்தினுள் ஒன்றையும் தம் பாசுரங்களில் ஆழ்வார்கள் குறிப்பிடவில்லை. ஆயினும் மேற்றிசை நோக்கிய சிவன் சத்யோசாத முகங்கள் ஐந்தினுள் அர்த்தநாரீஸ்வர வடிவம். அரியர்த்த வடிவம் ஆகிய இரு வடிவங்களை மட்டும் சுட்டிச் சிறப்பித்துள்ளனர்.

அர்த்தநாரீஸ்வர வடிவம்

உமையம்மையை இடப்பாகம் கொண்டருளிய சிவன் மாதொரு பாகன் வடிவினைத் திருமழிசையார், திருமங்கை மன்னன், பொய்கையார், நம்மாழ்வார் முதலான நால்வரும் ஆறு பாசுரங்களில் குறித்துள்ளனர்.

மாதுதாங்கு கூறன்	*(மழிசை. திர. 72)*
வாசவார் குழலாள்	
மலைமங்கைதன் பங்கனை	*(மங். 7-10-3)*
கூற்று ஒருபால் மங்கையான்	*(பொய்.முதல். 74)*
மலைமகள் கூறன்	*(நம். 7-6-7)*

எனும் பிரபந்தப் பாசுரத் தொடர்கள் மலைமகள் பங்கள் வடிவனைச் சுட்டிக்காட்டியிருக்கக் காணலாம்

அர்த்தநாரியும் அரியர்த்தரும்

சிவபரத்துவம் ஒன்றையே எடுத்துரைக்க வந்த தேவாரம் பாடிய மூவரும் உமையம்மையின் வடிவழகை - மாண்புகளை எடுத்துரைக்க விரும்பிய போதெல்லாம் அவர்கட்குப் பெரிதும் இடம் தந்து உதவியது சிவபெருமானுடைய அர்த்தநாரீஸ்வர வடிவமாகும். அதுபோலத் திருமாலின் சிறப்புகளை அவர்கள் குறிக்க விரும்பிய இடந்தோறும் அவர்கட்குப் பெரிதும் உதவி செய்த சிவபெருமானுடைய வடிவங்கள் அரியர்த்த வடிவம்., இலிங்கோத்பவ வடிவம் ஆகிய இரண்டும் ஆகும். அஃதொப்ப திருமாலையே முழுமுதற் கடவுளாக போற்றி மகிழ்ந்த பன்னிரு ஆழ்வார்களுள் ஐந்து ஆழ்வார் பெருமக்கள் சிவபெருமானைக் குறித்துச் சிறப்பிக்க நினைந்த விடத்து அவர்கட்கு உறுதுணையாய் அமைந்தது மாலொரு கூறுடைய இவ்வரியர்த்த வடிவமேயாகும்.

மாலொரு கூறன்

இடது பாகத்தில் உமையம்மையை உடைய சிவவ்வடிவம் அர்த்தநாரீஸ்வரர் எனப்பெறுவது போலத் திருமாலை இடது பங்கில் உடைய சிவவடிவம் 'அரியர்த்தது' எனவும், 'சங்கர நாராணயர் வடிவம்' எனவும் பெறும், சிவனும் மாலும் இணைந்த இவ்வடிவழகின் மாண்பினை அகநானூறு

வெருவெறு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம்போல
அந்தி வானமொடு கடல்அணி கொளாஅ
வந்த மாலை

(360: 6 - 9)

தேவார மூவர்

தேவாரம் பாடிய மூவருள் திருஞானசம்பந்தர் *'மாலுமோர் பாகமுடையார்'* (2-67-1) எனவும், திருநாவுக்கரசர் *'மறிகடல் வண்ணன் பாகா'* (4-62-8) எனவும் சுந்தரமூர்த்தி நாயனார் *'திருமாலொர் கூறன்'* (7-31-9) எனவும் குறித்து இவ்வடிவைச் சிறப்பித்துள்ளனர்.

ஆழ்வார்கள் ஐவர்

சாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களை அருளிய ஆழ்வார்கள் பன்னிருவருள் பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் முதலான ஐந்து ஆழ்வார்களும் இவ்வரியர்த்த வடிவினைப் போற்றுவதன் வாயிலாகச் சிவன் வடிவ மாண்புகளை - வண்ணங்களை - அருளாடல்களை திவ்வியப் பிரபந்தத்துள் இருபத்து மூன்று இடங்களில் சுட்டிப் போந்துள்ளனர்.

மர்மதில் மூன்று எய்த	
இறையான்நின் ஆகத்து இறை	(பொய்.முதல். 28)
நறவு ஏற்றான் பாகத்தான்	(பே.மூன். 31)
ஆறுசடைக் கரந்தான்	
கூறுடையான்	(திருமழி: நான்: 1)
மலைமங்கை தன் பங்கனைப்	
பங்கில் வைத்து	(திருமங்: 7-10-3)
ஏறாளும் இறையோனும்	
கூறாளும் தனியுடம்பன்	(நம். 4-8-1)

சிவன் பாதாதிகேச வருணனை

சடைமுடியன் (நம். 4-8-0) எனச் சிவன் சடையினையினையும், 'பிறைதங்கு' (திருமங். 3-4-9) எனச் சிவன் முடியில் உள்ள பிறை யினையும்,

'ஆறு சடைக்கரந்தான்' (திருமழி.நான். 1) எனச்சிவன் முடியில் கரந்த கங்கை நதியினையும், கண்ணுதல் (திருமங். 10-9-4) எனலான் சிவன் மான்தோல் ஆடை உடுத்துள்ளமையினையும் குறித்துள்ள ஆழ்வார்கள் சிவன் வடிவ வண்ணத்தைத் தழல் நிற வண்ணன் (திருமங். 6-1-5) என்றும் குறித்துள்ளனர்.

சிவன் பெயர்கள்

அரியர்த்தர் வடிவைச் சுட்டுவதன் வாயிலாக ஆழ்வார்கள் சுட்டியுள்ள சிவன் பெயர்கள் அரண் (திருமங். 3-9-8) ஆறு சடைக்கரந்தான் (திருமழி. நாண்.1), இறையான் (பொய். முதல்.28), இறையோன் (நம். 4-8-1), ஈசன் (திருமடங். 9-10-4) ஏறண் (நம். 2-2-3), ஏற்றான் (பேய்.மூன். 31) ஒருவன் (பொய்.முதல்.098) கண்ணுதல் (திருமங். 7-10-7), விடையான் (திருமங். 7-10-7), விடையான் (திருமங். 3-4-9) (நம். 5-10-4-10-6) சடைமுடியான் (நம். 4-8-10), சிவன் (நம். 9-9-6), தழல்வண்ணன் (திருமங். 3-49), மலைமங்கை தன் பங்கன் (திருமங்க. 7-103), மழுவாளி (7-9-4), மானுரி அதளும் அடையவர் (திருமங். 10-9-4), ஆகியன ஆகும்.

தெற்குதிசையிலுள்ள தீபம் ஏன் தரிசிக்க வேண்டும்?

தீபத்திற்கும் அதன் சுடர்களுக்கும் சாஸ்திரப்படி நற்குணங்கள் உள்ள போதிலும், தெற்கு திசையிலிருந்து வரும் தீபத்தை தரிசிக்க வேண்டும் என்று ஆசாரியர் கற்பித்துள்ளனர். ஆனால் குத்து விளக்கிற்கு திரிவைக்கும் போது தெற்கு நோக்கி வைத்து பற்றவைக்க வேண்டும். தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஒரு காந்த சக்தி செயல்படுகின்றது இந்த காந்த சக்தியின் ஆரம்ப இடமான தெற்குப் பக்கத்திலிருந்து வரும் தீபச்சுடர் அந்த காந்த சக்தியின் வழியாகக் கடந்து வருகின்றது. இதனால் தெற்குதிசையிலுள்ள தீபத்தைத் தரிசிக்க வேண்டும் என்று ஆசாரியர்கள் விதித்தனர்.

இவ்வாறு கடந்து செல்லுவதற்காகவே பழைய சுவர்களில் தெற்கேயும் வடக்கேயும் துவாரங்கள் அமைத்திருந்தனர். தெற்கு நோக்கியுள்ள அதாவது காந்த சக்திக்கு எதிரான உள்ள பலதுக்கும் பழைய மக்கள் விலக்கு விதித்திருந்தனர். வீடுகட்டும் போது பொதுவாக தெற்கு நோக்கி படி கட்டுவதில்லை. குளிக்கும்போது தெற்கு நோக்கி நின்று முங்கக் கூடாதுதென்று விதித்தனர். மலம் மற்றும் சிறுநீர் கழிக்கும் போது தெற்கே பார்த்து உட்காரக்கூடாது. கோடாலி முதலிய கருவிகளை தெற்கு பாகத்தில் வைக்கலாகாது. இப்படி தெற்குத் திசையைப் பற்றி பல விஷயங்கள் கண்டறிந்துள்ளனர்.

சேரல்

பெயர் :...

முகவரி :...

....

தினக்குரல் பப்ளிக்கேஷன் (பிரைவேட்) லிமிட்டெட். தொ.பே : 2522555